விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோட்டல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-7286)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 16 ஞாயிற்றுக்கிழமை (29.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

# போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் அவசியம்

## மீண்டும் பரிந்துரைக்க ஐ.நா ஆணையாளர் முடிவு



(ஜெனீவா)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்த கலப்பு நீதிமன்ற பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் மீண்டும் பரிந்துரை செய்வார் எனக் கூறப்பட்டுள்ளது. (02-ம் பக்கம் பார்க்க...)

## முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு புதிய சட்டம்!

(கொழும்பு)

முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான புதிய சட்டமூலம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து அமுலுக்கு வரவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம்

15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவால் முடியாது: ரணில் கிண்டல்

(அநுராதபுரம்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஒரு வார கால அவகாசம் வழங்கி தான் வெளிநாடு சென்றதாக தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அப்படியிருந்தும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மகிந்தவால் முடியவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஊழல் விசாரணைக்கு பிரத்தியேக நீதிமன்றம்

### அமைச்சர் அசோகா யோசனை

(கொழும்பு)

மகிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்களுக்கு எதிரான விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக தனியான நீதிமன்றம் அமைக்க வேண்டும் அல்லது இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒன்றிரெண்டை தெரிவு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அசோகா அபயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களிடம் மேலும் கூறுகையில்,

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு

15 ஆம் பக்கம் பார்க்க....

## கொக்கட்டிச்சோலை படுகொலை 30-வது ஆண்டு நினைவு நிகழ்வு



15 ஆம் பக்கம் பார்க்க....

## போருக்கு பின் தமிழ் கலாசாரம் மழுங்கடிப்பு!

(யாழ்ப்பாணம்)

போருக்கு பின்னர் தமிழரின் கலை, கலாசாரம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பருத்தித்துறை கலாசார மத்திய நிலைய திறப்பு விழா

15 ஆம் பக்கம் பார்க்க....

## த.தே.கூ தேர்தல் விஞ்ஞாபனம் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்

### தேர்தல் மைய அரசியல் கூடாது - விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

கொள்கைகள் மக்கள் நலம் சார்ந்ததாக அமைய வேண்டும். தனிப்பட்ட அரசியல்வாதிகளின் அடுத்த தேர்தலை மையமாக வைத்து வகுக்கப்படக் கூடாது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண நீர்வள அபிவிருத்தி

15 ஆம் பக்கம் பார்க்க....



## சுமந்திரனை கொல்லச் சதி; பிரதமர் அலுவலகத்திலிருந்து தகவல் அனுப்பப்பட்டுள்ளது - த ஹிந்து ஊடகம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் ஒன்றை இலங்கை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பது தொடர்பாக பிரதமர் செயலகத்தில் இருந்து, இந்த மாத முற்பகுதியில் சுமந்திரனுக்குத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த தகவல் சுமந்திரனுக்கும் பரிமாறப்பட்டது என்றும் அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் த ஹிநதுவுக்கு தெரிவித்துள்ளார் என அதில்

15 ஆம் பக்கம் பார்க்க....

## கறுப்பு பணம் மூலம்தான் ஆட்சியை கவிழ்க்க முடியும்

### மகிந்தவின் கருத்துக்கு ஜே.வி.பி பதில்



(கொழும்பு)

கறுப்புப் பணம் மூலம்தான் ஆட்சியைக் கவிழ்க்க முடியும். ஆட்சியை இப்போது கவிழ்ப்பதற்கு அதைத் தவிர வேறு வழி இல்லை. இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க

16 ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு மக்களின் காணிகளில் 235 ஏக்கர் காணிகளை விடுவிப்பதாக அரசும் இராணுவமும் கூறியது பொய்!

(யாழ்ப்பாணம்)

கேப்பாப்பிலவு மக்களின் காணிகளில் 235 ஏக்கர் விடுவிப்பதாக அரசும் இராணுவமும் கூறியது முழுவதும் பொய்யான தகவலாகும். கேப்பாப்பிலவு மக்களுக்குரிய காணிகளில் ஒரு ஏக்கர் நிலம் கூட விடுபடவில்லை என்பதே உண்மை என வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் விடுத்துள்ள அறிக்கையில்,

கேப்பாப்பிலவு என்பது வன்னிப் பெருநிலப்பரப்பின் பூர்வீகக் கிராமங்களில் ஒன்றாகும். இது தொடர்பாக இலங்கை பிரித்தானிய காலனித்துவத்துக்கு உட்பட்டிருந்த காலத்தில் இலங்கையை நிர்வகித்த பிரித்தானிய ஆளுநர்களில் ஒரு

15 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச வர்த்தக சந்தை

**இல.181**

சிவப்பு உடையல் பச்சை அரிசி, சிவப்பு கைக்குத்தரிசி, கோதுமை (உடையல்), சோளம், ஓட்ஸ், பார்லி அரிசி, குரக்கன், வரகு அரிசி, திணை, பயறு, உழுந்து, பொட்டுக்கடலை, கச்சான், கடலை இத்துடன் சிறிதளவு தானியங்கள், பாதாம் பருப்பு, கயூ, மசாலா ஆகியவை உள்ளடங்கப்பட்டுள்ளன.

**தயாரிக்கும் முறை:**

சட்டியில் சிறிதளவு எண்ணெய் விடவும், தேவையான அளவு சத்துமாவை போடவும். சிறிதளவு உப்புத்தூள் சேர்க்கவும். போதியளவு தேங்காய்ப்பால் விட்டு அதை சாப்பிடக்கூடிய அளவு வரும் வரை கிளறவும். ஒரு பாத்திரத்தில் சீனி அல்லது சர்க்கரை போட்டு கலக்கவும். (நீரிழிவு நோய் உள்ளவர்கள் சீனி அல்லது சர்க்கரையை தவிர்க்கலாம்)

**BIO TEC**
**International Ltd**

Date of manufacture : 25.01.2017
Date of Expiry : 24.01.2018
Price : Rs. 550

Bio Tec Orient (Pvt) LTD
131/2, Palaly Road,
Thirunelvely, Jaffna, Sri lanka.
T.P : (021) 4590907, 0777048181

e-mail : kanbalasub@yahoo.co
web : www.bioteclanka.com

(7661)


## போர்க்குற்ற விசாரணை...

ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழுவின் 34ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான தனது எழுத்துமூல அறிக்கையை ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் வெளியிடவுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழுவில் நிறைவேற றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் எந்தளவுக்கு நிறைவேற்றியது என்பது தொடர்பாகவே செயிட் அல் ஹுசைன தனது அறிக்கையில் தெரிவிக்கவுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில் 20 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் முக்கியமாக பொறுப்புக்கூறல் பொறிமுறையில் பொதுநலவாய மற்றும் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், வழக்குரைஞர்கள் உள்ளிட்டோர் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் இலங்கைக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழு வழங்க வேண்டுமெனவும் இலங்கையின் விசாரணைப் பொறிமுறையை ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழு கண்காணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இத்தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருந்த இலங்கை அரசாங்கம், இது தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானம் எடுக்கப்படும் என அறிவித்திருந்தது. இது குறித்து மக்களின் ஆலோசனைகளைப் பெற கருத்தறியும் செயலணியும் நியமிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அமர்வுகளை நடத்தி மக்கள் கருத்தறிந்த செயலணி, தனது அறிக்கையில் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என பரிந்துரைத்திருந்தது. இந்தப் பரிநதுரையை இலங்கை அரசாங்கம் தற்போது நிராகரித்துள்ளது.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழுவின் 34ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான தனது எழுத்துமூல அறிக்கையில கலப்பு நீதிமன்ற பொறிமுறையை ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் வலியுறுத்துவார் எனக் கூறப்படுகின்றது.

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேணடும் என்ற பரிந்துரையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொளளப் போவதில்லை என அறிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, அதனை ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த ஐ.நா மனிதவுரிமை ஆணைக்குழு, செயிட் அல் ஹுசைன் எப்போதுமே சர்வதேச பங்களிப்புடனான விசாரணையையே வலியுறுத்துகின்றார் என்றும் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## JCB 3cx Site Master

Recently imported from UK.
Project 12(2000) project 21

(2008.2009.2010.2012)
Unregistered Machines for Sale



Address:
Rion Leicester Machinery (pvt) ltd,
New Kandy Road, Pittugala ,
Malabe.
071 685 0342 | 011 555 4321 | 011 574 4321

(7636)



## JCB Excavators for sale

Recently imported from UK.

JS 130 (2009) and JS145 (2011)
Excavators for Sale



Address:
Rion Leicester Machinery (pvt) ltd,
New Kandy Road, Pittugala ,
Malabe.
071 685 0342 | 011 555 4321 | 011 574 4321

(7636)



## வேலை ஆட்கள் தேவை

இயங்கிக்கொண்டிருக்கும் லக்ஷ்மி வெதுப்பகம் ஊறணி, வல்வெட்டித்துறை. எம்மால் தயாரிக்கப்படும் பொருட்களை விநியோகிக்க முச்சக்கரவண்டி விநியோகஸ்தர்களும் வெதுப்பக வேலை தெரிந்த அனுபவமுள்ளவர்கள், உதவியாளர்கள் தேவை.

**தொடர்புகளுக்கு:-**
**0779997814**

(சி-7401)





## 1வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இன்று 29.01.2017ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தனது 1வது பிறந்த நாளை கொண்டாடும் திரு. திருமதி சுஜீவன் - நந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**சுகிஷன்**

பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- சிவ.ஆறுமுகசாமி J.P (அம்மப்பா) ஜெகதா (அம்மம்மா) கஜன் மாமா, ராஜன் மாமா

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 729 9272

(7665)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



10.01.2017 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 32ஆவது பட்டமளிப்பு விழாவில் முகாமைத்துவத்துறையில் முதல் தர சித்தியில் தொழில் நிர்வாகமாணிப் பட்டத்தினைப் பெற்று குடும்பத்துக்கும் எமது கிராமத்திற்கும் பெருமை தேடித்தந்த

**செல்வி**
**பவித்திரா**
**இராசேந்திரம்**
(B.B.A (Hons) First class
**(தொழில் நிர்வாகமாணி)**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்பாக வாழவேண்டுமென்று ஊரெழு நாவலம்பதி ஞான வைரவர் ஆசி வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்கள்:-
வளர்பிறை சனசமூக நிலையம் மற்றும் ஊரெழு சர்வதேச ஒன்றியம்

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.

(C-7387)



## 8ம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**தில்லைநாதன் சிவநேசராணி**
(சிவம் அன்ரி)

அராஜக அழிப்பு:
29.01.2009

அன்பாய் எமை அரவணைத்து அறிவுரைகள் பல கூறி
எம் வாழ்வின் ஒளியாய் வாழ்ந்த உத்தமித் தாயே!
எட்டு ஆண்டுகளல்ல எத்தனை ஆண்டு சென்றாலும்
மாறாது உம் நினைவுகள்

அப்பாவுடன் பிள்ளைகள்
Dr. ஆனந்தகுமார் (அமெரிக்கா), ஆனந்த நிருஜா (நோர்வே), ஆனந்த வர்ணன் (பிரான்ஸ்) மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கோபாலபிட்டி,
பூநகரி.

(7657)

# 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசியல் அதிகாரம் குறித்து எவரும் நினைத்துப் பார்க்கக்கூடாது



## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரத்திற்காக அன்றி நாட்டைக் கட்டியெழுப்பவே அனைவரும் இன்று ஒன்றிணைந்து போராட வேண்டியுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அதிகாரத்தைக் கோரி சிலர் போராட்டங்களை முன்னெடுத்த போதும் 2020இற்குப் பின்னர் நடைபெறும் தேர்தலில் மக்கள் தீர்ப்புக்கு அமையவே அனைத்தும் அமையும். அதற்கு முன்னர் அரசியல் அதிகாரம் குறித்து எவருக்கும் நினைத்துப்பார்க்கக்கூட முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் அரசியல் நோக்கங்களுக்காக போராட்டங்களை முன்னெடுத்த போதும் மக்கள் விருப்பத்தில் தெரிவான புதிய அரசாங்கம் முன்னேற்றத் திட்டங்களுடன் நாட்டை முன்கொண்டு செல்கையில் குறுகிய அரசியல் நோக்கங்களை மறந்து அந்தத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே நாட்டை விரும்பும் அனைத்து அரசியல்வாதிகளினதும் பொறுப்பு என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மொனராகலை கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவிததார்.

விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி நாட்டின் விவசாயத்துறையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர குளங்களை புனரமைப்பதும் பல்வேறு புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவிததார்.

பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக காணிகளை இழந்த மக்களை பொருளாதார ரீதியாக முன்னேறச் செய்து அவர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் முறையாக மேற்கொண்டு வருகிறது. அது தொடரில் இதுவரை எவ்வித பிரச்சினையும் உருவாகவில்லை என்றும் ஜனாதிப்தி தெரிவித்தார்.

மொனராகலை மாவட்ட அபிவிருத்திக்குத் தேவையான அனைத்து நிதிகளையும் வழங்கி மாவட்டத்தை அபிவிருத்தி செய்து மக்களின் பிரச்சினைகளைதீர்ப்பதற்கு அரசாங்கம்நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவிததார். (இ-3)

# ஜனாதிபதி, பிரதமர் இடையே முரண்பாடுகள் எதுவுமில்லை



(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் தற்போது எவ்வித முறையிலும் பிளவு அல்லது முரண்பாடுகள் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவாரமும்அமைசசரவை கூட்டம் இடம்பெறும் நாட்களில் அந்த கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் விசேட இரகசிய சந்திப்புகள் இடம்பெறும்.

இது இரகசியக் கலந்துரையாடல்களாகவே இடம்பெற்று வருகின்றது.

இந்த இருவரும் பல சந்தர்ப்பங்கள் இரகசியமாக உரையாடிக் கொண்டேதான் இருப்பார்கள்.

இருவருக்கும் இடையில் எந்த பிரிவும் இல்லை. ஜனாதிபதி மற்றும் பிரதமர் இந்த வகையில் இரகசியமாக சந்தித்த பின்னரே அமைச்சரவை வேலைகளில் ஈடுபடுவார்கள். இருவரும் இணைந்தே திட்டமிடுகின்றார்கள் என அமைசசர் மேலும் தெரிவிததுள்ளார். (இ-3)

# அரசியல்வாதிகளுக்கு நற்சான்றுப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி அறிவுரை

அரசியல்வாதிகளுக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வு ஒனறில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உற்பத்தி மற்றும் சேவைகளுக்கு தர நிர்ணய சான்றிதழ்கள் வழங்கப்படுவதனைப் போன்றே அரசியல் வாதிகளுக்கும் ஆண்டு தோறும் சான்றிதழ்கள் வழங்கும் நடை முறை அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

நாட்டு மக்கள் பொருட்கள் சேவைகளின் தரத்தைப் போன்றே அரசியல்வாதிகளின் தரம் பற்றியும் எதிர்பார்க்கின்றனர்.

அவ்வாறு அரசியல்வாதிகளுக்கு தரநிர்ணய நற்சான்று வழங்கினால் அதனை நிர்ணயம் செய்யும் பொறுப்பு உழைக்கும் மக்களிடம் வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் அனைத்து விடயங்களினதும் தரத்தை நிர்ணயிப்பதற்கு அரசியல்வாதிகள் முக்கிய ஏதுவாகின்றனர்.

அரசியல்வாதிகளின் தரம் குறைவாக காணப்பட்டால் ஏனைய விடயங்களில் தரத்தை எதிர்பார்க்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அப்பாவிகள் துன்புறுத்தப்படுவதற்கு நான் காரணமாக இருக்க மாட்டேன்

## அமைச்சர் தலதா தெரிவிப்பு

வெளிநாடுகளுக்குச் சென்று துன்புறுத்தல்களை அனுபவித்து வரும் பணியாளர்களுக்கு நிரந்தரமாக தீர்வு காண வேண்டிய காலம்வந்துள்ளதாக இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

கஹவத்தயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சட்டவிரோதமான முறையில் வேலை தேடிச் செல்வோரின் தொகை நாளாந்தம் அதிகரித்துள்ளது.

மேலும்வெளிநாட்டுபணிப பெணகளாகச் சென்றவர்கள் பலர் பலவித இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

பலர் தமது நகைகள், பணம் உடதமதுவாழ்க்கையையே தொலைத்து நிற்கின்றார்கள். இதன் காரணமாகவே பலர் நாடு திரும்பியதும் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் என்ற வகையில் இதனை தடுக்க வேண்டிய உயரிய பதவி எனக்கிருக்கின்றது.

இதற்காக எனது வேலையையும் இராஜினாமா செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# கால்வாயிலிருந்து நேற்று இருவரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடியப் பிரதேச கால்வாய் ஒன்றின், இரு வேறு பகுதிகளிலிருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சடலங்கள் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த இரு சடலங்களும் இதுவரை அடையாளம்காணப்படவில்லையெனவும் கூறப்பட்டுள்ளது.

பொலிஸ்அவசர தொலைத்தொடர்பு எண்ணுக்கு (119) அழைப்பினை ஏற்படுத்தியமையால் கிடைத்த தகவலிற்கு இணங்கவே குறித்த சடலங்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

# ஒரே ஓவரில் இரட்டை ஹெற்றிக் அவுஸ்திரேலிய வீரர் சாதனை

அவுஸ்திரேலியாவில் உள்ள கிரிக்கெட் கிளப் அணியின் பந்து வீச்சாளர் ஆலெட் கேரி ஒரே ஓவரில் வரிசையாக 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கிளப் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் கோல்டன் பொயிண்ட் கிரிக்கெட் கிளப் - ஈஸ்ட் பலாரட் அணிகள் மோதின.

இதில் ஈஸ்ட் பலாரட் அணி துடுப்பெடுத்து ஆடிக் கொண்டிருந்தது. அப்போது கோல்டன் பொயிண்ட் கிரிக்கெட் கிளப் அணியின் 29 வயதான ஆலெட் கோரி 9ஆவது ஓவரை வீசினார்.

இந்த் ஓவரின் முதல் இரண்டு பந்துகளில் எதிரணி வீரர்கள் முதல் ஸ்லிப்பில் பிடி கொடுத்து



ஆட்டமிழந்தார்கள். அடுத்த வீரர் எல்.பி.டபிள்யூ. மூலம் வெளியேறினார்.

அடுத்த மூன்று பேரையும் க்ளீன போல்டு மூலம் வீழ்த்தினார். இதனால் ஈஸ்ட் பலாரட் அணி 40 ஓட்டங்களில் சுருண்டது. ஆலெட் கேரி ஒரே ஓவரில் வரிசையாக 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தி கிரிக்கெட் வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

# இவர்தான் எனக்கு வேண்டும் அடம்பிடிக்கும் விராட் ஹோலி

இந்திய அணியில் தற்போது ஒருநாள், டெஸ்ட் மற்றும் இருபது-20 போட்டிகள் என அனைத்திற்கும் தலைமையேற்றுள்ளார் விராட் ஹோலி. இவர் தலைமையிலான இந்திய அணி அண்மையில் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள் தொடரை கைப்பற்றி அசத்தியது.

இதைத் தொடர்ந்து நடந்த இருபது-20 போட்டியில் இந்திய அணி தோல்வியை சந்தித்தது. இருபது-20 தொடரில் முதல் முறையாக தலைவர் பதவியை வகித்து முதல் போட்டியில் தோல்வியை சந்தித்துள்ளார் ஹோலி.

இந்திய அணிக்கு தலைவராக உள்ள ஹோலி, இந்தியாவில் நடத்தப்படும் ஐ.பி.எல். தொடரின் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கும் தலைவராக உள்ளார்.

இந்நிலையில் இந்தாண்டு நடத்தப்படும் ஐ.பி.எல்.தொடரில்



ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு இங்கிலாந்து அணியைச் சேர்ந்த பென் ஸ்டோக்ஸ் வேண்டும் என்று ஹோலி விருப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கு காரணம் கொல்கத்தாவில் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் ஸ்டோக்ஸின் ஆட்டம் ஆக்ரோசமாக இருந்ததாகவும், அவர் சிறந்த பனமுக ஆட்டக்காரர். போராடும் குணமுடையவர் மற் றும் அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்லும் திறமை அவரிடம் உண்டு என்பதால் அவர் பெங்களூர் அணிக்கு விளையாட வேண்டும் என விருப்பப்பட்டதாக கூறப்படுகிறது.

## முதலாம்ஆண்டு நினைவலைகள்



**சோ.சிவசுப்பிரமணியக் குருக்களின் அன்புப் புதல்வி**

**திருமதி யோ.சிவகௌரி**

(முகாமைத்துவ உதவியாளர் - கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி)

திதி : பிரதமை (29.01.2017)

மலர்ந்த உன் திருமுகம்<br>
மண்ணுலகை விட்டு பிரிந்து<br>
ஓராண்டு ஆனதம்மா கௌரி

கௌரியின் பிரிவில் துடிக்கும் எம்முடன் நினைவுகளை சுமக்கும் அனைத்து உள்ளங்களையும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

அன்னைமடியில் : 20.10.1986<br>
சிவனடியில் : 09.02.2016

கேதாரேஸ்வர தேவஸ்தானம்,<br>
37/03, கணேசபுரம், கிளிநொச்சி.

- குடும்பத்தினர் (C-7402)

# முதலாவது ஒருநாள் போட்டி தென்னாபிரிக்க அணி வெற்றி




இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 8 விக்கட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 48.3 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்திலகுசால்மெண்டிஸ 62 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பந்துவீச்சில் இம்ரான் தாஹீர் மற்றும் பார்னெல் தலா 3 விக்கட்டுகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 34.3 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது.

தென்னாபிரிக்க அணி சார்பில் அம்லா 57 ஓட்டங்களையும், டுப்ளிசிஸ்55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை போட்டியின் ஆட்டநாயகராக தென்னாபிரிக்காவின் இம்ரான் தாஹீர் தெரிவுசெய்யப்பட்டார். (க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கந்தசாமி கிரிவேல் (B.B.M)**

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று (29.01.2017) நடைபெறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வணிக முகாமைத்துவமாணி பட்டத்தைப் பெறும்

**திரு.கந்தசாமி கிரிவேல்**

அவர்களை பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :<br>
பிரியந்தா, பானுஜா, சுதனா,<br>
ஹொபீனா, அருள்வாரணன்,<br>
மட்டுவில் தெற்கு

(C-7403)


**உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் அற்புதமான செய்தி**

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ இயற்கை மருத்துவ ஔடதம், பால்மா, குளிசை

**உடற்பருமன் கொண்டோருக்கு**
**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறுகுறைத்தல், வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமானது

**ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு**

**உடல் எடை குறைவானோருக்கு**
**விலை 3500/=, 5500/=, 24000/= 3 மாதத்திற்குரியது**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்களை குண்டுக்கன்னங்களாக மாற்ற, பலவீனம், கணச்சூடு உடல்குறைபாடுகள், மார்பு கூட்டுதல் அனைத்திற்குமானது. மேலும் கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கரும்புள்ளி, பருக்கள், பருவந்த குழி, அடையாளம் நீக்கும் "நெச்சுரல் வைத்றிங் கிறீம்" தேவையற்ற ரோமம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், தலைமுடிவளரச் செய்யும் இயற்கை மருத்துவ எண்ணெய் விற்பனைக்கு உண்டு.

**விலை 1500/=, 1800/=, 3500/=, 5500/=**

பதிவு இல. 16168,<br>
0772106155 (7662)

221, நாவலர் றோட்,<br>
(பிறவுண் றோட் சந்தி அருள்கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## விண்ணப்பப்படிவங்களை 3ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியிலிருந்து இம்முறை க.பொ.த.உயர்தரம் (2017) ஓகஸ்ட் மாதம் இரண்டாம் தடவை தோற்றவிருக்கும் மாணவர்கள் உடனடியாக அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் 03.02.2017 இற்கு முன் விண்ணப்பிக்குமாறு பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

## கால்கோள் விழாவும் பெற்றோர்தின விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிழக்கு வளர்பிறை பாலர் பாடசாலையின் கால்கோள் விழாவும் பெற்றோர் தினவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலம்பதி பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறும்.

வளர்பிறை சனசமூக நிலையத் தலைவர் ஐ.மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத் தலைவர் இ.தர்மகுலசிங்கம், சமாதான நீதவான்களான ப.இராசேந்திரன், மு.சீவரத்தினம், கௌரவ விருந்தினர்களாக சி.மனோகரன், திருமதி த.செல்வராணி, க.முருகவேள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-78)


40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற
"றோயல் குளுக்கோஸ்"
PACKED BY: ROYAL INDUSTRIES, Colombo-13 TP:- 077 727 7670
தற்போது புதிய வடிவில்!!


இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"றோயல் குளுக்கோஸ்"
தொடர்புகளுக்கு
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567
(இ-7390)


## புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் புதுக்குடியிருப்பு (வ.து)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு,கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள் இதற்கு அமைய முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2015.10.12 ஆம் திகதிய 1936/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவுக்கான கிளைப்பொதுச் சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்கான இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி:-11.02.2017**

**நேரம்:-முற்பகல் 10 மணி சனிக்கிழமை**

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர்கள் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | புதுக்குடியிருப்பு மேற்கு | திரு.ச.பாலகுமார் | மத்திய கல்லூரி,புதுக்குடியிருப்பு |
| 02 | புதுக்குடியிருப்பு கிழக்கு | திரு.க.திசாகரன் | ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் புதுக்குடியிருப்பு |
| 03 | புனித சூசையப்பர் | திருமதி சு.தர்சினி | புதுக்குடியிருப்பு றோ.க.த.க. பாடசாலை |
| 04 | ஆனந்தபுரம் | திரு.பொ.கோகுலன் | ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை புதுக்குடியிருப்பு |
| 05 | இரணைப்பாலை | திரு.ச.ரதிகுலன் | இரணைப்பாலை றோ.க.த.க.வித்தியாலயம் |
| 06 | தேவிபுரம் | திரு.ச.பாஸ்கர் | தேவிபுரம் அ.த.க.பாடசாலை |
| 07 | உடையார்கட்டு | திரு.இ.ஜெகதீபன் | உடையார்கட்டு மகா வித்தியாலயம் |
| 08 | சுதந்திரபுரம் | திரு.சி.பாலசுந்தரம் | சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை |
| 09 | வள்ளிபுனம் | திரு.வ.நிரூபாகரன் | வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் |


கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.19ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.கிளைப்பொதுச்சபை கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் குறித்த அறிவிப்புக்களின் படி கிளை பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு

**உ.சுபசிங்க**

**மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு**

(இ-7391)


edexcel PEARSON CIOB RICS
INTAKE NOW ON

வெளியாகியதா A/L பெறுபேறுகள்?
கை நழுவியதா பல்கலைக்கழகம் நுழையும் கனவுகள்?
கவலையை விடுங்கள்...
BCAS Campus உடன் இணையுங்கள்
No.1 PEARSON Partner in Sri Lanka

HND BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities
HND QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities
HND BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities
HND CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
HND TELECOM ENGINEERING — Leading to BEng (Hons) from the UK Universities
HND COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities
HND ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB LAW — Leading to LLB (Hons) from the UK Universities
UGC Recognized TVEC Approved

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna.
City Campus 256, Galle Road, Colombo 6. T: 011 236 4459
Mount Campus 54, Galle Road, Mt. Lavinia. T: 011 272 8082
Kandy Campus 344, Peradeniya Road, Kandy. T: 081 222 4731
JAFFNA 077 710 2131 077 960 3753 COLOMBO 077 283 4595
Batti Campus 294, 1/4, Trinco Road, Batticaloa. T: 065 222 8451
Wayamba Campus 103, Dambulla Road, Kurunegala. T: 037 223 3339
Corporate Office 32, Dharmarama Road, Colombo 6. T: 0112597217
Kalmunai Campus 392/1, Main Street, Kalmunai. T: 067 222 6899
18 YEARS
(இ-7393)

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016
Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSi - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

HOTLINE : 021 221 9910 Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 33 செவ் 8 இல்
உயரம்: 172cm
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/6819

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 12 சூரி செவ் 6 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/6821

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/6823

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 14
உயரம்: 6'
தகைமை/தொழில்:BA/கனடா PR
தொ.இ: B/6825

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6836

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6837

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்:O/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6838

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 64 செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6841

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# மகிந்தவின் பேரணிக்கு பலா, குரோட்டன் இலைகளுடன் வந்த மக்கள் கூட்டம்





நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நுகேகொடையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பேரணியில் பெருந்திரளான மக்கள் கையில் பலா மற்றும் குரோட்டன் இலைகளை ஏந்திவந்தனர்.

நல்லாட்சி அரசாங்கம் மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தி வாழ்க்கை செலவை உயர்த்தியுள்ளதால் தற்போது விலங்குகள்உண்ணும்இலைகளை சாப்பிடும் நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை சித்தரிக்கும் முகமாகவே மகிந்த ராஜபக்ஷ வின் பேரணியில் கலந்து கொண்டவர்கள் இந்த பலா மற்றும் குரோட்டன் இலைகளை ஏந்திவந்தனர்.

நாட்டைப் பிரிக்கும் அரசியலமைப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது காலம் தாழ்த்துகின்றமை, அரச நிறுவனங்களை விற்பனை செய்கின்றமை, ஊழல் மோசடி என்பவற்றை பிரதானப்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த எதிர்ப்பு பேரணி நடைபெற்றது.

இதில் கூட்டு எதிரணியின் உறுப்பினர்களான தினேஷ்குணவர்தன, ஜி.எல். பீரிஸ், வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண டலஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும் சிறை வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவி மற்றும் அவருடைய மகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-3)

## கட்சியின் அறிவிப்பு பற்றி பேசுவது தேவையற்ற ஒன்று

## ரத்னதேரர் கூறுகிறார்



தான் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் ஹெல உறுமய கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பு குறித்து எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்க மாட்டேன் எனவும் அது பற்றிப் பேசுவது தேவையற்ற ஒன்று எனவும் சுயாதீன தீர்மானத்தை அறிவிப்புச் செய்துள்ள அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கட்சியின் மத்திய செயற்குழுவில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா? இல்லையா? என்பது தொடர்பிலும் எம்.பி. பதவி தொடர்பில் எடுக்கப் போகும் தீர்மானம் குறித்தும் கட்சிக்கு உடனடியாக தீர்மானமொன்றை தெரிவிக்குமாறு எழுத்து மூலமான அறிவித்தலொன்றை தேரருக்கு ஹெல உறுமய கட்சி அனுப்பி வைத்துள்ளது. இது குறித்து வினவிய போதே தேரர் இதனைக் கூறியுள்ளார்.

ரத்ன தேரர் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதாயின், கட்சியிலிருந்து விலகிக் கொள்வதாக தேரர் ஏற்கனவே ஹெல உறுமய கட்சிக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக அக்கட்சியின் தற்போதைய தலைவர் ஹெடிகல்லே விமலசார தேரர் கடந்த சில தினாங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

தான் இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் முழுமையான ஒரு விளக்கத்தை வழங்கவுள்ளதாகவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-3)

### சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம்

## இந்தியர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்தியர் ஐவருக்கு எதிராக நேற்று முன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவர்களுக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேக நபர்கள் பெப்ரவரி 5 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 50 | 120 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 200 | 220 | 200 | 250 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 70 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 40 | 100 | 20 | 20 | 40 | 40 | 30 |
| கரட் | 80 | 100 | 60 | 80 | 70 | 120 | 50 |
| பூசணி | 60 | 80 | 35 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 80 | 50 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 40 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 80 | 100 | 120 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 400 | 70 | 120 | 100 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 50 | 80 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 200 | 80 | 120 | 140 | 160 | 160 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 80 | 100 | 60 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 170 | 150 | 200 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 500 | 600 | 600 | 800 | 700 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 20 | 100 | — | 100 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 200 | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 55 | 50 | 50 | 60 | 65 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 | 200 | 160 | 150 | 180 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 200 | 60 | 80 | 80 | 100 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 60 | 50 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 40 | 20 | — |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 50 | 60 | 70 |

# நிதி மோசடி விசாரணைப் பிரிவு தொடர்பில் விவாதிக்கத் தயார்

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட ரீதியானதா என்பது குறித்து நாடாளுமன்றில் விவாதம் செய்ய முடியும் என அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். பாரிய நிதி மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நிதி மோசடி விசாரணைப் பிரிவினை இந்த அரசாங்கம் நிறுவியது. இந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட ரீதியானதா? இல்லையா? என்பது குறித்து நாடாளுமன்றில் விவாதம் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்க முடியும் என லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்டவிரோதமானது என ஆளும் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியட்டிருந்தார் எனவும் இது குறித்து நாடாளுமன்றில் தெளிவுபடுத்துமாறும் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன அவைத் தலைவரிடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அவைத் தலைவர், நிதி மோசடி விசாரணைப் பிரிவின் சட்ட ரீதியான தன்மை குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்த முடியும் என கிரியெல்ல தெரிவித்தார். (இ-3)

## கால் கோள் விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு மத்திய முன் பள்ளியின் கால்கோள் விழா நாளை திங்கட் கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஆவரங்கால் மத்திய முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறும். ஆவரங்கால் மத்திய முன்பள்ளியின் தலைவர் கா. சிவசோதி தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர் சி. சிவதர்சன் , சிறப்பு விருந்தினராக ஆவரங்கால் சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா அ. தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

'செரண்டிப்' பாடசாலைகளின் அபிவிருத்திக்கான அமைப்பின் (SSDF) வழிகாட்டலில் யா/ முஸ்லிம் சமூகத்தின் கல்வி எழுச்சியை நோக்கிய பயணம் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் உப அதிபர் வ.மகேந்திர ராஜாவின் கௌரவிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை4 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியின் மஃமூத் மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

**காணி விற்பனைக்குண்டு**

யாழ். நகரை அண்மித்த பகுதியில் ஒரு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (7647)

தொடர்புகளுக்கு-077 422 8705

**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
(தினமும் காலை 9.00 - 1.00)
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

**வேலை வாய்ப்பு**

புதிய வருடத்தில் புதிய தொழில் வாய்ப்புக்கள் கொழும்பில் (இ-7389)

Sakya Private Ltd. No.157, Thekkawaththa, Vavniya.

077 68 38 226 077 83 08 865

**வாடகைக்கு**

நல்லூர் செட்டித்தெருவில் நல்லூர் கோவிலுக்கு மிக அருகாமையில் வீட்டின் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. மாணவர்கள் , உத்தியோகத்தர்கள் (ஆண், பெண்) இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். (7636)

தொடர்புக்கு - 077 525 6311

# மரண அறிவித்தல்



## அமரர் நேசமலர் காலிங்கராஜா

**பிறப்பு:- 23.12.1936 இறப்பு:- 22.01.2017**

யாழ். இணுவில் தெற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் லண்டனில் வசித்து வந்தவருமான நேசமலர் காலிங்கராஜா அவர்கள் 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காலிங்கராஜா (சின்னமணி) அவர்களின் அன்பு மனைவியும், உதயகுமார் (லண்டன்), விஜயகுமாரி (கனடா), சசிகுமாரி (கனடா), நந்தகுமாரி (கனடா), பாலகுமார் (பிரான்ஸ்), திலீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.

காலஞ்சென்றவர்களான ரத்தினம், பாலசுப்பிரமணியம் மற்றும் செல்வராணி (தேவி), காலஞ்சென்ற தேவராஜர் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,

ராசமலர், காலஞ்சென்ற சிவானந்தராஜா மற்றும் சந்திரகுமார் (கனடா), அழகானந்தன் (கனடா), குமுதவல்லி, சுஜீபா ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான திருவிளங்கம், மகேந்திராதேவி மற்றும் தர்மலிங்கம், தேவிசத்தியபாமா, ஆறுமுகதாஸ், காலஞ்சென்றவர்களான கண்மணி, பொன்னம்மா மற்றும் பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

யதுர்ஷா, விக்கினேஷ், ஹரிஷ், ஹரனி, சிந்துஜா, சுஜானி, சிவானுஜா, சங்கீர்ணா, சாரங்கன், நிதுர்ஷா, வைஷ்னி, வர்ஷ்னி, அட்சயன், அகரன், எழில் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இலக்கியா அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை Hendon Cemetery & Crematorium, Holders Hill Rd, London NW7 INB, UK இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (இ-7382)

தொடர்புகளுக்கு
செல்லிடப்பேசி:- 00447557528012

தகவல்:
குடும்பத்தினர்.

## இராசி பலன்

29.01.2017
(தை 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
பிரதமை காலை 6.52 மணிவரை
துதியை பின்னிரவு 6.28 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 12.06 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் , பூசம் பகல் 11.25 மணிக்கு கும்-சந் | | |
| சூரி சந் | | | ராகு |
| புத | சனி | குரு | |

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆட்பட நேரிடலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்றுக் கூடும் நாள்.

**மேடம்** ஆற்றல் மிக்கவர்களின ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்** சிந்தனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய கூட்டாளிகளைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**கடகம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பணத் தேவைகள் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** மறைமுகப் போட்டிகள் மாறும், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

# தேசிய பாரம்பரிய ஆராய்ச்சி மாநாடு கைதடியில் ஆரம்பம்







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறையும் வடமாகாண சுதேச வைத்தியத்துறையும் இணைந்து முன்னெடுத்துள்ள முதலாவது தேசிய பாரம்பரிய ஆராய்ச்சி மாநாடும் கண்காட்சியும் நேற்று முன்தினம் விண்ணவர் மழைதூவி ஆசீர்வதித்தலுடன் கைதடி சித்த வைத்திய அலகு மற்றும் சித்த வைத்தியசாலையில் ஆரம்பமானது.

தொடர்ந்து மூன்று நாட்களாக நடைபெறுகின்ற இந்த மாநாடும் கண்காட்சியினதும் இறுதிநாள் இன்றாகும். பாரம்பரிய வைத்தியம் சார்ந்த, சித்த, ஆயுர்வேதம், யுனானிபோன்ற பலமருத்துவ முறைகளுக்கான கண்காட்சி கூடங்களும் தனியார் வைத்தியசாலைகளின் மருந்துகள், பயன்பாடுகள், மூலிகைத் தாவரங்கள், மூலிகைத் தோட்டம், மாதிரி வீட்டுத்தோட்டத்துடனான மண்புழு வளர்ப்பு, சித்த மருத்துவ பிரிவுகளினது மருந்துகள், அவற்றை செய்வதற்கான கருவிகள், விளக்கங்கள் என பலவற்றை இணைத்து இந்த கண்காட்சியும் சித்த வைத்திய அலகின் வரலாறு, ஆராய்ச்சிக் கட்டுரைகள், முக்கிய பேச்சாளர்களது வாழ்த்துச் செய்திகள், பாரம்பரிய வைத்தியர்களது கட்டுரைகள் என ஆய்வு மாநாட்டின் இதழும் மிகவும் சிறப்பாக வெளிவந்திருக்கின்றது. ஆரம்ப நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகள், யோகா நிகழ்வுகள்என்பன நிகழ்வுகளுக்கு மகுடம் சூட்டியதுபோல இருந்தது. வடமாகாண வைத்தியர்களது ஆக்கங்கள், விளக்கங்கள் என பலவற்றை உள்ளடக்கிய இந்நிகழ்வில் விருந்தினர்களாக இந்தியாவில் பாளையங்கோட்டை சித்தமருத்துவ நிறுவனத்திலிருந்து வருகை தந்த கலாநிதி ஐ. சொர்ணமாரியம்மா ,ஊவா மாகாண ஆலோசகர், பேராசிரியர் பியால் ஏ.மாரசிங்க ஆகியோரது சிறப்பு பேச்சுக்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த வட மாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனின் உரையும், வட மாகாண பிரதி அவைத் தலைவரது உரையும் ஆயுர்வேத திணைக்கள ஆணையாளரின் செய்தியும் நிகழ்வுக்கு பெருமை சேர்த்தன. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உரையாற்றிய பரமேஸ்வரன், ஆலய இயக்குநர் சபையின் தலைவரும் பேரவை உறுப்பினராகவுமுள்ள வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் உரை தமிழர் தம் இருப்பையும் வரலாற்றையும் அதில் 'சித்த மருத்து வத்தின் முக்கியத்தும் பற்றி சுட்டிக் காட்டியதோடு இனி என்ன செய்யப்படவேண்டும் எனவும் தெளிவாக விளக்கப்படுத்தியிருந்தது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் உரை சித்த வைத்தியத்தினது நிகழ்கால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் செய்ய வேணடிய மாற்றங்கள் அனைத்தையும் எடுத்துக்காட்டியிருந்தது. கண்காட்சியில் பலவகை பாரம்பரிய மருத்துவத்தை அடியொற்றிய உணவு வகைகள் சித்த வைத்திய சாலையினால் வழங்கப்பட்ட இலைக் கஞ்சி, கொள்ளு கலநத உணவுகள் அனைவரினதும் பாராட்டைப் பெற்றன. (இ-3)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் பி. செல்வவிநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) என்.கந்ததாசன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச கல்விப் பணிப்பாளர் வி.நடராஜா, கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் எஸ்.துரைராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் பரிசில்களை திருமதி நந்திகா கந்ததாசன் வழங்கவுள்ளார். (இ-3)

➢➢➢➢➢➢➢➢➢➢

யாழ். உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கலாநிதி க. சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக பான் ஏசியா வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் திருமதி.கலா மகேந்திரன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பொ. சந்திரவேல், ஆசிரிய ஆலோசகர் ந. புவன் சிறிந்திரனன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்தோனேஷியப் பிரஜை உயிரிழப்பு

இந்தோனேஷியப் பிரஜை ஒருவருக்கு திடீரென்று ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்ததாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

சவுதி அரேபியாவிலிருந்து இந்தோனேஷியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த 57 வயதுடைய இவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கி இந்தோனேஷியாவுக்குச் செல்வதற்கான விமானத்தில் மாறி ஏறுவதற்காக கட்டுநாயக்கவில் காத்திருந்த வேளையில் மாரடைப்புக்குள்ளாகி கீழே விழுந்து உயிரிழந்தார்.

இவரின் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் ஆரம்பம்


யாழ். சுன்னாகம்-மயிலணி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் (வடலியம்மன்) ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-3)

## வருடாந்த பொதுக்கூட்டம் இன்று


(யாழ்ப்பாணம்)

வட இலங்கை மருந்தியலாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெறும். (இ-3)

# சிறுவர்களை உலகிற்கு உப்பாக, ஒளியாக உருமாற்ற நாம் வழியாவோம்



அருட்தந்தை
**ம.பத்திநாதர்,**
இயக்குனர பாப்பிறை
மறைபரப்புச்சபை,
யாழ்மறைமாவட்டம்.



கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இவ்வருடம் 29.01.2017 அன்று திருப்பாலத்துவ சபை தினமாகும். "இயேசுவின் அன்பின் கதையை சொல்ல வாருங்கள் நண்பர்களே" என்னும் கருப்பொருளை இத்தினத்தில் இவ்வருடம் நாம் கொணடாடுகி றோம். சிறுவர்களை ஊக்குவிக்கும் நாளாக இந்த ஞாயிறுதினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இயேசுவிடம் வந்த சிறுவர்களை சீடர்கள் தடுத்தபோது, இயேசு "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்" என தன் சீடர்கள் மீதுகோபம் கொள்ளும் அளவிற்கு சிறுவர்களை இயேசு நேசித்தார் என்பதை பைபிள் தெளிவாக்குகிறது. உளவியலாளர்களின் கருத்துப்படி சிறுவர்கள் கெட்டவார்த்தைகள் பேசுவதில்லை. கேட்டவார்த்தைகள் தான் பேசுகிறார்கள். எனவே எம் சிறுவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தி வளப்படுத்த வேண்டியது எமது மறைதூது பணியில் மிகமுக்கியமானது. இலங்கை கத்தோலிக்க வரலாற்றை நோக்குகையில் திருப்பாலத்துவ சபையானது கடந்த 65 வருடங்களாக சிறார்கள் சறுக்கான பாதைகளில் விழுந்து விடாது சீரான வழியில் நடக்க சீர்படுத்தி வருகிறது.

ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன் ஆண்டகையால் 1843 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நன்சி என்னும் ஊரில் திருப்பாலத்துவ சபை உருவாக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. எனவே 174 ஆண்டுகளாக இத் திருப் பாலதத்துவ சபை இயங்கி வரும் இத்த திருவிழாவின் பின் னணியை சற்று நோக்குவோம்: இதன் நோக்கம் சிறுபராயத்திலிருந்தே இயேசு வைப் பற்றிய அறிவையும், அவருடன் சேர்ந்து வாழவும்,கிறிஸ்தவ நற்குணங்களை தம் வாழ்வில் கடைப்பிடிக்கவும் அவர்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்தி சிறுவர்களின் மூலமாக சிறுவர்களுக்கு உதவிசெய்வதன் மூலம் பகிர்தல் என்னும் இறைபண்பை அவர்கள் வாழ்வில் வளர்ப்பதுவும், சிறுவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதும் அவர்களின் ஆளுமையை வளர்த்து தன் நம்பிக்கையுடன் கிறிஸ்தவ சமூகத்தை வளர்ச்சியடையச் செய்வதுமாகும். இதன் வழியாக சிறுவர்களை இயேசுவின் சிறிய மறைத்தூதுவர்களாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியதனை ஆயர் கொண்டிருந்தார்.

1986 ஆம் ஆண்டு தாய்லாந்தில் பாங்கொக் என்னுமிடத்தில் ஓர் உலகளாவிய திருப்பாலர் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதன்பின் இச்சபையினை இலங்கைக்கு பொருத்தமான விதத்தில் நடைமுறைப்படுத்த முடிவெடுத்ததாக கூறப்படுகிறது. இதற்கு அமைவாக 1987ஆம் ஆண்டு இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் இயங்குவதற்கு திருப்பாலத்துவ சபைக்கு அத்திவாரமிடப்பட்டது. இதனை தற்போதைய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அப் போது மேற்கொண்டார். அவரது இந்தமுன்னெடுப்புடன் அநுராதபுரம் மறை மாவட்டத்தின் ஹிங்குராங்கொட என் னுமிடத்தில் ஊக்குநர்களுக்கான ஆரம்பப் பயிற்சி பாசறை யிலிருந்து தொடர்ந்து இன்று வரை வெற்றிகரமாகஇயங்கிக் கொண்டிருக்கிறது. இன்று இலங்கையிலுள்ள அனைத்து மறை மாவட்டங்களிலும் உள்ள சிறுவர்களை இயேசுவின் சின்னமறைத்தூதராக்கும் நோக்குடன் இச்சபையானது இயங்கிக் கொண்டிருக்கின்றது.

சிறுவர்கள் பற்றிய சமயக் கருத்துக்கள் சில

சிறுவர்களின் அறிவு. ஆனமீக வளர்ச்சி பற்றி கூறும் போது ஒரு பௌத்தசிந்தனை தெரிவிப்பது: இயற்கைக்கு சிறுவர்களை அறிமுகம் செய்தல், அவர்களின் மனதின் செயற்பாடுகளை அறிமுகம் செய்தல், அத்துடன் உலக விழுமியங்களான நேர்மை ,பெருந்தன்மை, அன்பு, நல்லிணக்கம் மற்றும் உடன் ஒத்து வாழுதல் போன்றவற்றை வாழ்வில் அவர்கள் கடைப்பிடிக்க நாம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாகும். "சிறுவர்களுக்கு அன்பு காட்டாதவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் அல்ல" என முஹம்மது நபியும்." நல்ல வைகள அனைத்தையும் சிறு வர்களுக்கே அளியுங்கள்" என லெனினும் துள்ளித்திரியும் வயதினிலே என் துடுக்கை அடக்கி பள்ளிக்கு அனுப்பபடா பாதகனே என பட்டிணத்தார் தனது தந்தைக்கு கூறி யதையும் பத்து சிறுவர்களை-மாணவர்களை என்னிடம் தாருங்கள் அவர்களைநீங்கள் விரும்பும் மனிதர்களாக ஆக்கிக் காட்டுகிறேன்;என்று சுவாமி விவேகானந்தரும் சிறுவர்கள் என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள் என இயேசுவும், கூறிய கருத்துக்களை இன்றும் நாம் சீர் தூக்கிபார்த்து எமக்கு ஏற்ற வகையில் வாழ்வாக்குவது சிறந்ததாகும். சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கில் அவர்களுக்கென்று ஒருதினமும் வகுக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் சர்வதேச சிறுவர் தினமாகிய ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுவதை நாம் தினமும் நினைவில் கொள்ள வேண்டும்.

# இந்துக்களின் விசேட திருநாட்கள் கலண்டர் வெளியீடு



படங்கள்:-உ.சாளின்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சைவத்திற்கும் ஆன்மீகத்திற்கும் நல்ல பல பணிகளை முன்னெடுத்து வரும் வீணாகான குருபீடத்தின் தலைவரான சபா வாசுதேவக் குருக்களுக்களின் முயற்சியில் இந்துக்களின் விசேட திருநாட்கள் 2017 கலண்டர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்றது. இந்தியத்துணைத தூதர் ஏ.நடராஜனுக்கு இந்துக்களின் விசேட திருநாட்கள் 2017 நாட்காட்டியினை வீணாகான குருபீடத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய சன்னிதாச்சாரியார் சபா வாசுதேவக் குருக்களுக்கள் வழங்கி வைத்தார்.


அதனுடைய முதற்பிரதியை சர்வதேச லயன்ஸ் கழகங்கங்களின் இலங்கை 306 B1 மாவட்டத்தின் வலயத் தலைவரும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் உப அதிபருமாகிய தேசகீர்த்தி லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் இந்தியத் துணைத் தூதரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த இந்தியத் தூதர் இது இந்து மதத்தை தூக்கி நிறுத்தி பாதுகாக்கும் அரிய செயல் எனவும் இந்த செயற்பாடு தன்னை அதிக மகழ்சிப் படுத்தியுள்ளது எனவும் தெரிவித்தார். (இ-4)



படங்கள்:-மகாலிங்கம்

பருத்தித்துறை புற்றளையில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் உள்ளக அலுவல்கள் வட மேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்னவினால் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வடமாகாண நீர்வள அபிவிருத்தி தொடர்பான மூன்று நாள் ஆய்வரங்கு நேற்று சனிக்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சர் பொ. ஜங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். இதில் அவைத் தலைவர் சீ. வீ. கே . சிவஞானம் , யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், மத்திய நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் எந்திரி டி. அல்விஸ், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் எந்திரி கோ. வாசுதேவன் , பிரதிப் பிரதம செயலாளர் எந்திரி சோ. சண்முகானந்தன், இலங்கை விஞ்ஞான மேம்பாட்டு மன்றத்தின் தலைவர் எந்திரி வி.ரகுநாதன் , யாழ்.பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் குடிசார் இயந்திரவியல் துறைத் தலைவர் எந்திரி சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நீதிமன்றத்தின் பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டுப்படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 431 (2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழ.இல.AR/58/17 சான்றுப் பொ.இல. PR/176/15 சான்றுப் பொருள் விபரம் கலெக்சி வர்க்க J1 கையாடல் தொலைபேசி, வழ.இல. AR/67/17 சான்றுப் பொ.இல. PR/695/16 சான்றுப் பொருள் விபரம் NPHX 2211 இலக்க 1 TVS மோட்டார் சைக்கிள், வழ.இல.AR/68/17 சான்றுப் பொ.இல. PR/105/17 சான்றுப் பொருள் விபரம் 1.57161362 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, வழ.இல.AR/68/17 சான்றுப் பொ.இல. PR/105/17 சான்றுப் பொருள் விபரம் 2. 03EK 2562 இலக்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, வழ.இல.AR/68/17 சான்றுப் பொ.இல. PR/105/17 சான்றுப் பொருள் விபரம் 3. E610986 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, வழ.இல.AR/68/17 சான்றுப் பொ.இல. PR/105/17 சான்றுப் பொருள் விபரம் 4. LH 611360 இலக்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, வழ.இல.AR/69/17 சான்றுப் பொ.இல. PR/46/16 சான்றுப் பொருள் விபரம் EPXI 9206 இலக்க அப்பாச்சி வர்க்க மோட்டார் சைக்கிள், வழ.இல.AR/70/17 சான்றுப் பொ.இல. PR/85/16 சான்றுப் பொருள் விபரம் 69890671 இலக்க பெண்கள் துவிச்சக்கரவண்டி. மறுதவணை 27.03.2017 என பதிவாளர் அறிவித்துள்ளார்.

வழ.இல.AR/101/17 சான்றுப் பொ.இல. PR/179/17 சான்றுப் பொருள் விபரம் 57160761 லுமாலா வர்க்க ஆண்கள் துவிச்சக்கர வண்டி, வழ.இல. AR/102/17 சான்றுப் பொ.இல. PR/165/15 சான்றுப் பொருள் விபரம் இலக்கம் தெளிவற்ற ஆண்கள் துவிச்சக்கர வண்டி, வழ.இல. AR/103/17 சான்றுப் பொ.இல. PR/180/16 சான்றுப் பொருள் விபரம் 56100940 இலக்க ஆண்கள் துவிச்சக்கர வண்டி, வழ.இல. AR/104/17 சான்றுப் பொ.இல. PR/109/16 சான்றுப் பொருள் விபரம் இலக்கம் தெளிவற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச் சக்கர வண்டி, வழ.இல. AR/105/17 சான்றுப் பொ.இல. PR/31/16 சான்றுப் பொருள் விபரம் 69584168 இலக்க ஆண்கள் துவிச் சக்கரவண்டி, வழ.இல. AR/106/17 சான்றுப் பொ.இல. PR/128/17 சான்றுப் பொருள் விபரம் NPVS 1028 இலக்க சுப்பர் கப் மோட்டார் சைக் கிள், வழ.இல. B/865/PC/16 சான்றுப் பொ.இல. PR/139/16 சான்றுப் பொருள் விபரம் 003AB 2211 இலக்க ஆண்கள் துவிச் சக்கர வண்டி, வழ.இல. B/1349/F/16 MC/311/F/17 சான்றுப் பொ.இல. PR/158/16 சான்றுப் பொருள் விபரம் NPPV 7819 இலக்க பட்டா லொறி. மறு தவணை 03.04.2017 என பதிவாளர் அறிவித்துள்ளார்.

# தனியார் மருத்துவக்கல்லூரியை ஆரம்பிக்க மகிந்த 600 மில்லியன் ரூபாய் வழங்கினார் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ்பக்ஷ 600 மில்லியன் ரூபா வழங்கியதாக பாராளுமன்ற அவைத் தலைவர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்

குறித்த பல்கலைக்கழ கத்தை ஆரம்பிப்பதற்காக கடன் அடிப்படையில் மகிந்த 600 மில்லியன் ரூபாவினை வழங்கியதாக நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடந்த அரசாங்கத்தின் ஆதரவுடன் ஆரம் பிக்கப்பட்ட மாலபே தனியார் மருத்துவ கல்லூரியையும் அதன் மாணவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பல்கலைக் கழகங்களில் விரிவு ரையாளர்களுக்கு நிலவி வரும் வெற்றிடங்



களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் கலவித்துறையை தர முயர்த்தி மேம்படுத்துவது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக அமைந்துள் ளது.

மாலபே தனியார் மருத் துவ கல்லூரியை கொண்டு நடத்த முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென லக்ஸ்மன் கிரியெல்ல கோரியுள்ளார். (இ-3)

# புத்துயிர்ப்பெய்தட்டும் புதிய யுகப்புரட்சி!

(நேற்றைய தொடர்ச்சி...)

இத்தனையும் ஒருபுறம் கிடக்கட்டும். இறையருள் போல் எழுந்த இவ் எழுச்சி இழிவுற்றதன் காரணம் என்ன? நடுநிலையோடு ஆராய்தலும் அவசியமாகிறது.

நம் இளைஞர்கள் செய்த தவறுகளும் சில உள! வருந்திக்கிடக்கும் அவர்கள் வாடுவார்கள் என்று அறிந்தும், இதனைச் சொல்வது அவசியமாகிறது. பிழை எது என்று கண்டுபிடித்தால் தானே, தொடரும் பாதையில் சரியைச் சமைக்கலாம். ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்பதும் அவசியமல்லவா. ஆகவே அவர்தம் பிழைகள் பற்றியும் சிறிது ஆராய்வோம்.

தலைமையின்றி இயங்குகிறோம் என்று இளையோர் தருக்குற்றார்கள். அதுவே அவர்களது பலமும் பலயீனமும் ஆயிற்று. விரல் அளவாய் அவர்கள் நினைந்த புரட்சி திடீரென விண்ணளவாய் உயர்ந்ததும், அவர்களது சமநிலை தவறிப்போனது நிஜம். கூட்டம் கூடக்கூட வெற்றிக் குதூகலத்தில் விழுந்தார்களேயன்றி, எதிர்பாராத இவ் எழுச்சியை எங்ஙனம் கையாள்வது என்பது பற்றி, கூடித்திட்டமிடாதது அவர்களது குற்றமேயாம்! தம் நினைப்பைக் கடந்த கூட்டம் கூடிய பின்னேனும், இக் கூட்டத்தை எங்ஙனம் கையாளப் போகிறோம் என்று, திட்டமிடாதது அவர்கள் விட்ட பெருந்தவறு! இளையர்க்கே உரிய இயல்பால், ஏற்றம் கண்டு எழுச்சி கொண்டவர்கள். கூட்டம் கண்டு குதூகலித்தவர்கள். மாற்றம் கண்டு நிலைமையை மறு மதிப்பிட மறந்தது மாபெரும் குற்றமே !

தனித்தலைமையை நியமிக்க விரும்பாத, அவர்தம் செயற்பாட்டிலும் நியாயம் இருக்கவே செய்தது. பயத்தாலும் பணத்தாலும் தலைவர்கள் விலைபேசப்படுவதை கண்டிருந்ததாலேயே, அவர்கள், தம் புரட்சிக்குத் தனித்தலைமை வேண்டாம் என்று முடிவு செய்தனர்.

ஆனால் கட்டுக்கடங்காது கூட்டம் கூடிய பின்னேனும், அதனை நெறி செய்ய ஒரு கூட்டுத்தலைமை நிர்வாகத்தையேனும், நிச்சயம் அவர்கள் உருவாக்கியிருக்க வேண்டும். இத்தனை சாதனையும் செய்த இளையவர்கள்,

அரசுக்கெதிரான பெரும் போராட்டத்தில், தம் சார்பாக அவர்களுடன்பேச ஓர் அணியையேனும் உருவாக்காதது அதிசயமே. கற்ற இளைஞர்களுக்கு இக்கருத்து வாராதது ஏனோ? விதியின் விளையாட்டன்றி வேறென்ன?

தேச எதிர்ப்பாளர்கள், அரச எதிர்ப்பாளர்கள், கட்சி எதிர்ப்பாளர்கள், மத எதிர்ப்பாளர்கள் என, பல வேண்டாச்சக்திகள் கடைசி நேரத்தில் உள் நுழைந்து விட்டதாய், ஆர்ப்பாட்டத்திற்குக் காரணமாய் இருந்தோரில் ஒருவரான ஆதி பேசியிருக்கிறார்.

தடுக்கமுடியாமல், தான் பின்வாங்கியதை இணையத்தில் பதிவு செய்திருக்கிறார். அங்ஙனம் தீயசக்திகளைத் தடுக்கமுடியாமல் போனதற்குத் தலைமை இல்லாததே காரணம். எல்லோரும் இந்நாட்டின் மன்னர்கள் என்பது வெறும் வார்த்தைக்கு மட்டுமே அழகு தரும் விடயம்.



நடைமுறையில் அது என்றும் சாத்தியப்படாத ஒன்றே. தலையின்றி அங்கங்கள் இயங்குவது எங்ஙனம்?

தனித்தலைமையின்றி இக் கூட்டத்தில் எல்லோரும் மன்னர்களானதால், பொதுவில் கிடந்த அம் மகுடத்தைத்தம் தலைசூட்டி, மாற்றாரும் உள் நுழைந்திருக்கிறார்கள் போல.

வேலியில்லா நிலத்தில் விளையும் பயிர் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. காலி செய்ய எண்ணிய அக் கயவர்தம் எண்ணம் நிறைவேறியிருக்கிறது.

மக்கள் கூட்டம் பெருகத் தொடங்கியதுமே, ஒரு கூட்டுத்தலைமையை இளையோர் உருவாக்கியிருக்கவேண்டும்.

விரிந்த நிலப்பரப்பில் இடம் பிரித்து, ஆயிரம்பேருக்கொருவராய் நிர்வாகப் பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஆயிரத்தில் ஒருவரான அப்பொறுப்பாளர் அனைவரையும் சேர்த்து ஒரு தலைமைக்குழுவும், அத்தலைமைக்குழுவுள் அறிவும் நிதானமும் உடன் முடிவெடுக்கும் ஆற்றலும் உள்ள, ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து, போராட்டக் கருத்தை உரைக்கும் தகுதியை அவர்களுக்கு வழங்கியிருக்கவேண்டும். சகாயம் போன்ற நீதியான அறிவாளர் ஒருசிலரைத் தேர்ந்து தமக்கு நெறி உரைப்போராய் அமர்த்திக் கொண்டிருக்க வேண்டும். இங்ஙனம் பிரிவுகள் செய்திருந்தால் மாற்றார் உட்புக வாய்ப்பில்லாமல் போயிருக்கும்.

அதுநாள்வரை தமிழினத்தின் ஆற்றல் தெரியாமல் தமிழர்களைப் புல்லென மதித்து வந்த, மத்திய ஆட்சியாளர் ஆரம்பத்தில் இவர்கள் கோரிக்கையை ஏற்க மறுத்து அசையாது நின்றனர்.

போராட்ட ஆரம்பத்தில் டில்லி சென்று பிரதமரிடம் கோரிக்கை வைத்த முதலமைச்சரை, மறுப்புரைத்து திருப்பி அனுப்பினார் பிரதமர்.

ஆனால் அடுத்தடுத்து திரண்ட மக்கள் கூட்டத்தின் எழுச்சி கண்டு, மத்திய அரசும் அதிர்ந்து போனது உண்மை.

'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்றாற் போல, இவ் இளையோர் புரட்சி அரசியல் புரட்சியாய் ஆகிவிடலாம் என்று அஞ்சி, இதன்மேலும் பிரச்சினையை வளரவிடாது அடங்கிவிட வேண்டும் என நினைத்து, வருடங்களால் ஆகாத செயலை ஒரு வாரத்துள் நிகழ்த்தி, அவசர அவசரமாய் அனைத்தும் செய்து, சம்பவ தினத்திற்கு முதல்தினமே அவசர சட்டம் இயற்றி, இளையோரின் கொள்கையை ஏற்க முன் வந்தது மத்திய அரசு.

அந்நிலை இளையோருக்குக் கிடைத்த பெருவெற்றி என்பதில் ஐயமில்லை. அவ் வெற்றியைக் கையாளத் தெரியாமல் போனது இளையோர் தம் குற்றமே.



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்த சேராது' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அனுபவத்தினரின் ஆழ்ந்த பதிவு இது. கவனித்துப் பாருங்கள்!

சிறு பிள்ளை வேளாண்மை விளையாது என்று அவர்கள் சொல்லவில்லை. வீடு வந்து சேராது என்றே சொன்னார்கள். வேகம் கொண்ட இளையோரின் முயற்சி நிச்சயம் விளைவைத்தரும் என்பதில் அவர்கட்கு ஐயமில்லை.

ஆனால் பொறுமையுடன் விளைவை ஒன்றாக்கி பாதுகாத்துப் பேணி வீடுசேர்க்கும பொறுமை, அவர்களிடம் இருக்காது என்பதே அவர்தம் கருத்தாய் இருந்திருக்கிறது.

அவர்கள் அங்ஙனம் நினைக்கக காரணம், விளைவைக் கண்டதும்தம் ஆற்றல வியந்து சமநிலை கெட, மிகை ஊக்கத்தால் வெற்றிக் கொண்டாட்டத்தில் விளைவில் கவனம சிதைய, வெற்றியைப் பாதுகாக்கும் வீரியம் இழப்பார்கள் அவர்கள் என்பதேயாம். அது வயது தரும் வேகத்தின் விளைவு. இங்கு நடந்ததும் இதுவே தான். நான் மேலே சொன்னால்போல ஒரு நிர்வாகம் அமைத்திருந்தால், போராட்டக்காரர்கள் சார்பில் பேச நிர்ணயிக்கப்பட்டவர்கள், ஒன்று, அன்றே போராட்டதை வாபஸ் பெறுவதாயோ அல்லது, மறு நாள் சட்டசபையில் சட்டம் நிறைவேறிய பின்பு வாபஸ் பெறுவதாயோ, அரசு பணிந்த மறுகணமே ஓர் அறிக்கை விட்டிருக்கலாம்.

(தொடரும்)

# உரமானிய காப்புறுதி இழப்பீடு பெறுவதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் கால அட்டவணை

## ஒலுமடு கமநல சேவை நிலையத்தினர் அறிவிப்பு

(மல்லாவி)

**ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையின் போது வரட்சி காரணமாக நெற்செய்கை அழிவடைந்துள்ள விவசாயிகள் உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் கால அட்டவணையை ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள குளக்காணிகளிலும் மற்றும் மானாவாரியாகவும் நெற்செய்கை மேற்கொண்ட நிலையில் உரமானியக் கொடுப்பனவை பெற்றுள்ளவர்களில் வரட்சியினால் பயிரழிவிற்குட்பட்ட விவசாயிகள் உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு விண்ணபிக்க முடியும்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை தச்சடம்பன், மணவாளன் பட்டமுறிப்பு ஆகிய கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

மறுநாள் செவ்வாய்க்கிழமை ஒலுமடு, அம்பகாமம் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

இதேவேளை எதிர்வரும பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை மாங்குளம், மாங்குளம் வடக்கு ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பனிக்கன் குளம், திருமுறிகண்டி ஆகிய கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

பதிவுகள் யாவும் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

பதிவுகள் நடைபெறும் தினங்களில் குறித்த கிராமங்களுக்கான கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் சமுகம் தந்து பதிவுகளில் ஒப்பமிடவுள்ளதால் விவசாயிகள் தங்களுக்குரிய பதிவுத் திகதியில் தவறாது சமுகம் தந்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

இழப்பீட்டிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வருகை தரும் போது, தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழல் பட பிரதி, உரமானியக் கொடுப்பனவைப் பெற்ற வங்கிப் புத்தகத்தின் நிழல்பட பிரதி ஆகியவற்றுடன் உரிய விவசாயி மட்டும் வருகை தர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# சர்வதேச அளவிலான மைதானம் அமைக்க நறுவிலிக்குளத்தில் அடிக்கல் நாட்டல்



(மல்லாவி )

மன்னார் மாவட்டத்தில் உள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் சர்வதேச அளவிலான மைதானத்திற்கான அடிக்கலை மத்திய அரசின் விளையாட்டுத்துறை அமைசசின் பிரதி அமைச்சர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ் நாட்டி வைத்துள்ளார்

இந்நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிராமத்தில் உள்ள திறமையான விளையாட்டு வீர/ வீராங்கனைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வெற்றிகளை ஈட்டிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும் முகமாக, மாவட்ட மட்டத்தில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்மூலம் கிராமத்தை சென்றடையும் விளையாட்டுக் கலாசாரத்தை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது திட்டத்தை முன்னெடுத்து வரும் விளையாட்டுத்துறை அமைச்சர் சட்டத்தரணி தயாசிறி ஜயசேகரவினது வழிகாட்டலில் மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் நறுவிலிகுளக்கிராமத்தில் மைதானத்திற்கான அடிககல் நாட்டு விழா நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வின் போது, அமைச்சர் றிசாத் பதியூதீன் நாடாளுமன்ற உறுப்பினர்களான, கே.கே.மஸ்தான், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உட்பட மத குருமார்கள், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள்,அரச அதிகாரிகள், வீர/வீராங்கனைகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-15)

# சூறாவளியுடன் கூடிய மழையினால் தற்காலிக வகுப்பறைகள் சேதமாகின



(பரந்தன்)

கிளிநொச்சியில் நேற்று முன்தினமிரவு வீசிய சூறாவளியுடன் கூடிய அடைமழையினால் கிளி/புளியம்பொக்கணை கலவேட்டித்திடல் நாகேஸவரா வித்தியாலய பாடசாலையின் தற்காலிகமாக அமையப்பெற்றவகுபபறைகள் சேதம் அடைந்துள்ளதுடன் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பிற்குள்ளாகின. தரம் ஒன்று தொடக்கம் தரம்11வரை கற்றல செயற்பாடுகளுடன் இயங்கி வருகின்ற இப்பாடசாலையில் நான்கு வகுப்புக்கள் மட்டுமே நிரந்தரக்கட்டடத்தில் இயங்கிவருகின்றன குறித்த கிராமப் புற பாடசாலையான கலவேட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு மாணவரகள சிறந்த முறையில் கல்வி கற்பதற்கு ஒரு நிரந்தரக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டுமென பெற்றோர்கள, பழைய மாணவர்கள்ஆகியோர் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-312)

# ஆற்றுமணல் ஏற்றி பயணித்த இரண்டு வாகனங்கள் சுற்றிவளைப்பில் மாட்டின

(மல்லாவி )

கிளிநொச்சிமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பிரமந்தனாறுப் பகுதியில் அனுமதியின்றி ஆற்று மணலை ஏற்றி கடத்திய உழவு இயந்திரம் ஒன்றும், அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றும் பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன்சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,கிளிநொச்சி மாவட்ட போதைப பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, திடீரென சுற்றி வளைப்பை மேற்கொண்ட போது சட்டவிரோதமான முறையில்



மணலை ஏற்றி கடத்திய வாகனங்கள் கைப்பற்றப்பட்டதுடன சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவிததுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் தடயப் பொருட்களுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்து சந்தேக நபர்களை விடுதலை செய்ததுடன், கைப்பற்றப்பட்டுள்ள வாகனங்களையும் விடுவித்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# மாங்குளம் பொதுச்சந்தையின் பிரச்சினைகள் கவனிப்பாரற்ற நிலையில் வர்த்தகர்கள்,பொதுமக்கள் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள மாங்குளம் பொதுச்சந்தை வளாகத்தினுள் ஆங்காங்கே மழை காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக வர்த்தகர்கள், பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த சந்தை பகுதியினுள் மழைநீர் தேங்கி நிற்பதால் நுகர்வோர் கடைகளுக்கு வருவதற்கு தயங்குவதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இந்த சந்தையிலுள்ளபிரச்சினைகளைஅதிகாரிகள்கவனிப்பதில்லையெனவும் பாதிக்கப்பட்டவர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



இது தொடர்பில் பல தடவைகள் உரிய அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியும் நடவடிக்கைஎடுக்கப்படவில்லையெனவும்வர்த்தகர்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நீர்தேங்கி நிற்கும் இடங்களுக்கு மண் நிரவப்படாமல் இருப்பது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆதலால் சம்பந்தப்பட்டவர்கள் குறித்த சந்தை வளாகத்தை நேரில் வந்து பார்வையிட வேண்டுமென பொதுமக்கள்,வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-281)

# மாற்றுவலுவுள்ளோர் பிரதேச குழு தெரிவு

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் பிரதேச குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட மாற்று வலுவுள்ளோர் அமைப்பின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடன் பிரதேச குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பிரமந்தனாறு, கல்லாறு. மயில்வாகனபுரம்,நாதன் குடியிருப்பு, உழவனூர் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய மாற்றுவலுவுள்ளோர் பிராந்திய குழு அமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அங்கு மாற்றுவலுவுள்ளோருக்கான விழிப்புணர்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் சாந்தி கிருஸ்ணா, கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சிவநேசன், பிரதேச இணைப்பாளர்வே.கௌரிதாசன் மற்றும் வன்னிய சிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-312)



கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய அதிபர் மீனலோசினி இதய சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற போது .... (படங்கள்: சிவநகர் செய்தியாளர்)



## 5 தொடக்கம் 50 வரையிலான ஏக்கரில்

# தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியத் திட்டங்கள், உதவித் திட்டங்கள்

### தென்னை பயிர்ச்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் மத்திய அரசினால் தென்னைப் பயிர்ச்செய்கை சபையினூடாக தென்னைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக ஐந்து ஏக்கர் தொடக்கம் 50 ஏக்கர் வரை தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியத் திட்டங்கள் மற்றும் உதவித் திட்டங்களை வழங்கிவருகின்றது. ஆனால் வடக்கு பகுதி மக்கள் இதனைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை என தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வட பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்துள்ளார். தென்னைப் பயிர்ச்செய்கையால் 2.5 மில்லியன் ரூபா நிதியில் 200 தென்னை பயிர்ச்செய்கையாளர்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் மானியமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி கரைச்சி பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை பயிர்ச்செய்கை சபையினால் வழங்கப்படுகின்ற மானியத் திட்டத்திற்கு 400 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதற்கட்டமாக, 200 பயனாளிகளுக்கு மானியப் பணத்திற்கான காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நடை பெற்றுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் மத்திய அரசினால் தென்னை பயிர்ச்செய்கை சபையின் ஊடாக தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 5 ஏக்கர் தொடக்கம் 50 ஏக்கர் வரை தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியத் திட்டங்கள் மற்றும் உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

ஆனால் வடபகுதி மக்கள் இதனை பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை. குறிப்பாக புது மர நடுகை, புனரமைப்பு ஆகியவற்றுக்கு தென்னங்கன்றுகள் மானியமாக வழங்குவதோடு, கன்றுகளுக்கு இடையே ஊடு பயிர்ச்செய்கை மேற் கொள்வதற்கு ஏக்கருக்கு 15, ஆயிரம் ரூபா வீதம் 05 ஏக்கர் தொடக்கம் 50 ஏக்கர் வரை இதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை வரட்சியை தாங்குவதற்காக மண் நீர் பாதுகாப்பு, தேங்காய்மட்டை குழிபதித்தல் என்பவற்றுக்கும் ஏக்கருக்கு 15, ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகிறது. உரப் பயன்பாட்டுக்கு ஒரு மரத்திற்கு 55 ரூபா வீதம் எத்தனை மரங்களுக்கும் இந்த பணத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் மக்னீசியம் குறைபாடு காணப்படுவதனால் டொலமைற் பசளை மானியம் வழங்கப்படுகிறது.

அத்தோடு விலங்கு வளர்ப்பு மானியமாக மாடு வளர்ப்புக்கு 01, விலங்கு வளர்ப்புக்கு 01, ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

நீர்ப்பாசனம் மானியமாக 01 ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு பல மானியத்திட்டங்களுடன் தென்னை பயிர்ச்செய்கை சபை செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் வேளை, வடக்கு மாகாண மக்கள் இந்த மானியத்திட்டங்களை பெற்று தென்னை பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டவில்லை.

தென்னை பயிர்ச்செய்கையை மேற் கொள்கின்றவர்கள் தங்களின் சொந்த பணத்தில் செலவு செய்யாது இவ்வாறான அரச மானியங்களைப் பெற்று தென்னை பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

தென்னை பயிரிடக்கூடிய நிலத்தை வைத்துள்ளவர்கள், தங்கள் பகுதி மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் கடமையாற்றும் எமது உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது, தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் கபில கண்டவல மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்தியேந்திரன் உட்பட பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312-15)




# மருதடி மதகு உடைக்கப்பட்டமையால் வயல் காணிகளுக்கு செல்வோர் அவதி

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட உருத்திரபுரம் சிவநகர் கிராமத்தின் தெற்குப்பகுதியில் அமைந்துள்ள பிரதான கழிவுவாய்க்காலின் மருதடி மதகு உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இதனூடாக 300இற்கும் மேற்பட்ட விவசாயக்காணிகளுக்குச் செல்வோரும் 60 குடும்பங்கள் வசிக்கும் சிவன்கோவில் பகுதி மக்களும் சொல்லொணாத்துன்பத்தை அனுபவித்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி உடைந்த இம்மதகை அதே இடத்தில் கட்டுவதால் இதன் கீழ்ப் பகுதியிலுள்ள சிவநகர் கிராமத்தின் பெரும் பகுதியும் சிவன்கோவில் வீதி பெரும்பகுதி குடியிருப்புக்களும் தொடர்ந்தும் காலகாலமாக வெள்ள அனர்த்தம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இம்மதகு அமைப்பதற்கு தற்போது வீணடிக்கப்பட்ட மில்லியன் வரையிலான பணத்தொகைக்கு மேலதிகமாக மேலும் பல மில்லியன் செலவு செய்தும் பயனற்ற நிலையே ஏற்படும். இம்மதகுப் பகுதி தற்போது சிறிதளவாக மறிக்கப்பட்டு மானாவரி நெற்செய்கையாளர்கள் நீர்ப்பாசனம் செய்யும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

எனவே நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர், பொறியியலாளர், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கமநலசேவை உதவி ஆணையாளர் கரைச்சி பிரதேச செயலகத்தினர், அரசாங்க அதிபர், பாராளுமன்ற மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இந்த இடத்தை நேரில் வந்து பார்வையிடுவதன் மூலம் குறிப்பிட்ட இடத்தில் திரும்பவும் மதகை அமைக்காமல் 100 மீற்றர் தூரத்திற்கு வாய்க்காலை நேராக வெட்டமுடியும். இதனால் பல மானாவரி விவசாயிகள் நன்மையடையமுடியும்.

பெரும்பாலான குடியிருப்பு மக்களை தொடர்ச்சியான வெள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாக்க முடியும்.

எனவே அனைத்து திணைக்களங்களையும் இதில் தலையிடச்செய்து கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் இதற்கான ஒழுங்குகளைச்செய்து உதவ வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

## 'கிராமத்திற்கு கிராமம், வீட்டுக்கு வீடு'

# 12 வீடுகள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைப்பு

(மல்லாவி)



தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப் பட்டு வரும் "கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு" மாதிரிக் கிராம வேலைத் திட்டத்தின் கீழ், 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார் பிரதேச் செயலகத்திற்குட்பட்ட பேசாலை முருகன் கோவில் கிராமத்தில் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான 12 வீடுகள் (காணி வழங்கப்பட்டு) 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பேசாலை முருகன் கோவில் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் ஆர்.சுவர்ணராஜா தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வடக்குமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாதிரி வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளார்.

இதனையடுத்து, மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.சமியு முஹம்மது பஸ்மி, பேசாலை முருகன் கோவில் பிரதான தவிசாளர் குப்பசாமி ஆறுமுகம் ஆகியோரும் ஏனைய வீடுகளுக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்துள்ளனர்.

இவ் வீட்டுத்திட்டத்தில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து இதுவரை காலமும் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் உள்வாங்கப்படாதவர்களும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த காணிகள் இல்லாத குடும்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில், பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளதாக மன்னார் பிரதேச செயலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-15-4)

உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் வேண்டியவை இச்சை கடிதல், வெளிக்காற்று, அளவான உழைப்பு சிறிது கவனம், பார்வை.

~ ருமேனியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் தந்த சித்த மருத்துவத்தை பாதுகாக்க உறுதி கொள்வோம்

உன்னுடைய திறமையை நீயே! உரக்கச் சொல். மற்றவர்களுக்காகக் காத்திராதே என்கிறார் ஜூலிய சீசர்.

அவரின் இத்தத்துவம் உள்ளார்ந்த ரீதியில் கருத்தாழம் மிக்கதென்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்த வகையில் செம்மொழியாகிய தமிழ் மொழிக்கும் அதன் இனத்துக்குமான பெருமைகள் ஏராளம் உண்டு.

இருந்தும் தமிழைப் பேசுவது சுட நாகரிகம் இல்லை என்று தமிழன் நினைக்கின்ற சம காலத்தில், எங்கள் மொழியின் பெருமையும் அதன் தத்துவங்களும் பண்பாடுகளும் கலாசாரங்களும் மெல்ல மெல்ல அறுந்து விழுவது தான் நிலைமை என்றாகிவிட்டது.

ஓர் இனமும் மொழியும் வாழவேண்டுமாயின் அதன் பெருமைகளை ஏனையவர்கள் தேடியறிய வேண்டுமாயின் முதலில் அந்த மொழியும் இனமும் சார்ந்தவர்கள் அதனைப் போற்றிப் பெருமைப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாதவிடத்து குறித்த இனமும் மொழியும் காலச்சக்கரத்தில் தன்னிலை இழந்து போகும் என்பதே உண்மை. இந்த நிலைமைக்கு எங்கள் தமிழ் மொழியும் வந்து விடுமோ! என்ற ஏக்கம் நம்மிடம் இருக்கவே செய்கிறது.

உலக மொழிகளில் தமிழ் மொழி காலத்தால் முந்தியது. எழுத்திலும் பேச்சிலும் வாழ்ந்து கொண்டிருப்பது. உலகின் பழைமைமிகு மொழிகளுக்கு வழங்கப்படும் செம்மொழி அந்தஸ்து எங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழிக்கும் கிடைத்துள்ளது.

இருந்தும் எங்கள் மொழியை எங்கள் இனத்தை நாங்கள் முதலில் போற்றவும் மதிக்கவும் கௌரப்படுத்தவும் முன்வர வேண்டும்.

இதன் ஓர் அம்சமாக எங்களின் பண்பாட்டை, கலாசாரத்தை, தெய்வீக வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது கட்டாயமானதாக இருக்கும்.

கூடவே எங்கள் தமிழ் மொழி தந்த சித்த மருத்துவம் என்பது இன்று உலகம் வியக்கும் அளவில் மகத்துவம் கொண்டதாக உள்ளது.

இருந்தும் சித்த மருத்துவத்தின் சிறப்பை மறந்தவர்களாக நாம் வாழ்வது வேதனைக்குரியது. தமிழ் மக்களின் உடல்நலத்தையும் ஆரோக்கியத்தையும் பாதுகாத்த சித்த மருத்துவம் இன்று ஆங்கில மருத்துவத்தின் மோகத்தில் எங்களால் புறந்தள்ளப்பட்டுள்ளது.

உண்மையில் சித்தமருத்துவத்தின் சிறப்பே எங்கள் மூதாதையர்களின் ஆரோக்கியத்துக்கும் ஆயுள் பலத்துக்கும் பதினாறு செல்வத்துக்கும் அடிப்படையாக இருந்தது.

உணவை மருந்தாகத் தந்து எங்களை நோயற்றவர்களாக வாழ வைத்த சித்த மருத்துவத்தை தூக்கியெறிந்துவிட்டு இன்று மாதந்தோறும் வைத்தியசாலைகளில் ஆங்கில மாத்திரைகளைப் பெற்று நாளும் அதனை விழுங்கும் நோயாளிகளாக நாம் மாறிவிட்டோம்.

இந்த நிலைமை நமக்குத் தேவைதானா என்பதை நாமே சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனை மேலெழும்போது சித்த மருத்துவத்தின் மகத்துவம் உணரப்படுவதாக இருக்கும்.

இதனை ஊக்குவிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையினர் மேற்கொண்டுள்ள சித்த மருத்துவக் கண்காட்சி அமையும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினர் மிகுந்த அர்ப்பணிப்புடன் நடத்துகின்ற சித்த மருத்துவக் கண்காட்சியை பார்வையிடுவதுடன் எங்கள் தமிழினம் தந்த சித்த மருத்துவத்தை எங்கள் வாழ்க்கையில் பின்பற்றவும் உறுதி பூணுவோம்.

இஃது எங்கள் மொழியை – எங்கள் இனத்தை உலகறிய வைக்கும். இது சத்தியம்.

# பசிலின் காணி தொடர்பாக ஆலோசனை கிடைக்கவில்லை

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் கம்பஹா மல்வானை ஒரு தோட்ட பிரதேசத்தில் உள்ள காணியுடன் கூடிய வீடு சம்பந்தமான வழக்கில் இது வரை சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு கம்பஹா பிரதான நீதவான் டி.ஏ.ருவான் பத்திரன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்குஎடுக்கப்பட்ட போதுநிதி மோசடி விசாரணைப்பிரிவினர் இதனை தெரிவித்தனர்.

இதனையடுத்து வழக்கு விசாரணையை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 15ஆம் திகதி வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக நிதி மோசடி விசாரணைப் பிரி வினர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இலங்கை மத்திய வங்கி தாக்கப்பட்டு 31ஆம் திகதி 21 வருடங்கள் பூர்த்தி

### வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை

(கொழும்பு)

மத்திய வங்கி தாக்கப்பட்டு, இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் 21 வருடங்கள் பூர்த்தியாகவுள்ளன.

குறித்த தாக்குதலின் போது, மத்திய வங்கி ஊழியர்கள் 41 பேர் கொல்லப்பட்டனர், 27 பேர் படுகாயத்திற்கு உள்ளா கினர் மற்றும் 9 பேர் தங்கள் பார்வையை இழந்தனர்.

எவ்வாறாயினும், இந்த தாக்குதல் இடம்பெற்று 21 வருடங்கள் பூர்த்தியாகின்ற வேளையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப ங்களுக்கு இதுவரையிலும் எந்த ஓய்வூதியமும் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போது மத்திய வங்கி ஆளுநரால் வழங்கப்பட்ட எந்த வாக்குறுதிகளும் இது வரையில் நிறை வேற்றப் படவில்லை என மத்திய வங்கி தாக்குதலால் மரணித்த மற்றும் ஊனமுற்றவர்களுக்கான சங்கத்தின் தலைவர் எல்.டி.எல்.ஏ. குணவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-3)

## அரிசி இறக்குமதி செய்வது பிரச்சினைக்குத் தீர்வல்ல

### நாமல் கூறுகிறார்

அரிசி இறக்குமதியினால் நாட்டில் நிலவும் அரிசி மாஃபியாவை முறியடிக்க முடியாது என அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அரிசி இறக்குமதிக்கான வரியைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன் னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வினவிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரிசி இறக்குமதியின் போது விதிக்கப்பட்டிருந்த 15 ரூபா வரியை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 5 ரூபாவாக குறைப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையினால் இந்நாட்டின் விவசாயிகள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## ஹெரோயின் வைத்திருந்தவர் ஊழல் தடுப்பு பிரிவினால் கைது

(கொழும்பு)

கொழும்பு - கிராண்பாஸ் பகுதியில் ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண ஊழல் தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு ஒன்றின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 145 கிராம் 590 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் 29 வயதுடையவர் எனவும், சந்தேக நபர் மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை,சிதம்பரா வடக்கு, மருதனார்மடம் ஒரு பகுதி, இணுவில், உப்பு மடம், தாவடி, சுதுமலை, சம்பியன் லேன், கொக்குவில் சந்தி, ஆடியபாதம் வீதி, பிரம்படி, மாவடி, மருத்துவபீடப் பிரதேசம், குளப்பிட்டி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில நாச்சிக்குடாவிலும் வவுனியா பிரதேசத்தில் வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக்கொடியவரை, கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ ஜாதகப்படி மாங்கல்யதோஷம் உள்ளவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அவரவர் நாம நட்சத்திரத்திற்கு லலிதா சகஸ்ரநாமம் அர்ச்சனை செய்து வந்தால் தோஷம் விலகும். மங்களம் உண்டாகும். அபீஷ்ட சித்தி பெற்று வாழ்வர்.

-பவிஷ்யோத்தர புராணம்

✦ தீமை செய்வது முழு பாவம். அதைப் பார்த்துக் கொண்டிருப்பது பாதிப்பாவம்.

-மனு சாஸ்திரம்

✦ கனவில் சுடுகாட்டைக் கண்டால் விரைவில் திருமணம் நடைபெறும்.

-கனவு சாஸ்திரம்

✦ சமவெளியில் ஓங்கி வளர்ந்துள்ள ஆலமரத்தின் வடக்கு கிளைகளிலிருந்து இரண்டு மொட்டுக்களைக் கொணர்ந்து அத்துடன் இரண்டு உளுந்தும் எள்ளும் சேர்த்து இடித்துத் தயிரில்குழைத்துக் கர்ப்பிணிகளுக்குக் கொடுததால் உத்தம குணம் வாய்ந்த குழந்தை பிறக்கும்.

-கர்ப்போப நிஷத்து

✦ ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் இதயத்திற்கு கேடு.

✦ திங்கட்கிழமை எண்ணெய் தேய்த்துக்குளிப்பது நல்லது. உடல் அழகு பெறும்.

✦ செவ்வாய்க்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது சீக்கிரம் மரணம் ஏற்படும்.

✦ புதன்கிழமை எண்ணெய் தேய்த்துக்குளித்தால் செல்வப் பெருக்கு உண்டாகும்.

✦ வியாழக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளித்தால் வறுமையால் கஷ்டம் உண்டாகும்.

✦ வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளித்தால் வியத்து ஏற்படும்.

✦ சனிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளித்தால் நீண்ட ஆயுள், மகிழ்ச்சி உண்டாகும்.

-காலப்பிரகாசிகா

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**விழித்தெழுந்த பின் சொல்லவேண்டிய மந்திரம் என்ன?**

தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் சிறிது நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும். பின்னர் மெதுவாக உள்ளங்கைகளை விரித்துத் தேவியை வணங்க வேண்டும். அதற்கு ஒரு சுலோகம் உள்ளது. அது பின்வருமாறு,




கராக்ரேவஸதேலக்ஷ்மி
கரமத்யேசரஸ்வதி
கரமூலேஸ்திதாகௌரி
ப்ரபாதேகரதர்சனம்

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் வலிமையைத் தருவது தேவியாகும். அந்த தேவி சக்தி வடிவமானவள். அனைத்தும செய்வதற்கான வலிமை உண்டாக வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம்.

நாம கைகளின் உதவியால் தானே அனைத்தையும் செய்கின்றோம். எனவே கைகளுக்கு வலிமையைத் தருகின்றதேவியை வணங்கிட வேண்டும்.

அதிகாலை வேளையில் வாயு ஸ்பரிசத்தினால் அதிக உணர்வு கிடைக்கிறது. உடலின் சோம்பல் தன்மை நீங்கி செயற்திறன் அதிகரிக்கும். (தொடரும்)

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்தியின் சொக்கர் லீக் உதைபந்தாட்ட போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அயன்ஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ரெட் கிங்ஸ் விளையாட்டுக் கழகமும்,

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பிளாக் ஹொக்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாயும் புலி விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஏலியன்ஸ் வோஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையூர் லயன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது
# றெயின்போ

### இறுதி ஓவரின் இறுதிப் பந்தில்

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 நபர்கள் 8 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட மென்பந்தாட்ட தொடரின் ஏ பிரிவிற்கான அரையிறுதிக்கான கிரிக்கெட் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் நேதாஜி அணி, றெயின்போ அணிகள் மோதின.

முதலில் ஆடிய நேதாஜி அணி 46 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. நேதாஜி சார்பாக பிரதீஸ் 21, பிரபு 12 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். றெயின்போ அணி சார்பாக பந்து வீச்சில் ருதேஷா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய றெயின்போ அணி இறுதிப்பந்தில் 47 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

றெயின்போ அணி சார்பாக ஜெகன் 19 ஓட்டங்களை பெற்றார் .

நேதாஜி சார்பாக பிரதீஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

றெயின்போஅணி 1 விக்கெட்டால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இறுதிப்போட்டியில் சைனிங்ஸ் பீ, றெயின்போ அணிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மோதவுள்ளன. (க)







கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டு விழாவை முன்னிட்டு அண்மையில் கிளி. கரடிப் போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் மகா வித்தியாலயம் வரையிலான 8 கிலோ மீற்றர் நெடுந்தூரம் மரதன் ஓட்டப் போட்டி வித்தியாலய முதல்வர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்றது.
(படம்:- சோலைநகர் செய்தியாளர் )

## இமையாணன் மத்தி வி.கழகம் அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் மென்பந்து கிரிக்கெட் தொடர் நேற்று ஆரம்பமாகியது.

இப் போட்டிகள் யாவும் இமையாணன் மத்தி , மைக்கல், கொலின்ஸ் ஆகிய விளையாட்டு மைதானங்களில் இடம்பெற்று வருகின்றது.

நேற்றுக் காலை நடைபெற்ற போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் மாது, சாருவின் சிறந்த இணைப்பாட்டத்தின் மூலமும் ஆதித்தனின் சிறந்த பந்து வீச்சின் ஊடாகவும் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தை இலகுவாக வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம்.



துடுப்பாட்டத்தில் மாதுளன்- 36 ஓட்டத்தினையும் சாருஜன் - 31 ஓட்டத்தினையும் ரேகன் - 9 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஆதித்தன் 3 இலக்குகளை கைப்பற்றினார்.(கு)

## ஆஸியின் ஒருநாள் கப்டனாக விக்கெட் கீப்பர் வடே நியமனம்



அவுஸ்திரேலிய ஒருநாள் கிரிக்கெட் அணியின் கப்டனாக மத்யூ வடே நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அந்த அணியின் விக்கெட் கீப்பராக செயற்பட்டு வருகிறார்.

அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்து சென்று மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கிறது. முதல் போட்டி நாளை திங்கட்கிழமை ஆக்லாந்தில் தொடங்குகிறது. 2 ஆவது போட்டி பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி நெய்ப்பரிலும், 3ஆ வது மற்றும் கடைசி போட்டி பெப்ரவரி 5 ஆம் திகதி ஹாமில்டனிலும் நடக்கிறது.

நேற்று முன்தினம்தான் பாகிஸ்தானுக்கு எதிராக ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலியா அணி முடித்தது. ஏற்கனவே, அந்த அணியின் தலைவர் ஸ்மித் மற்றும் துணை தலைவர் வோர்னர் ஆகியோர் தொடர்ந்து விளையாடியதாலும் இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட இருப்பதாலும் இந்த தொடரில் அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் வடே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஐந்தாவது போட்டியின் போது ஸ்மித்தின் இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் நியூசிலாந்து தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் 21 வயதான இடது கை பட்ஸ்மேன் சாம் ஹீஸ்லெட் சேர்க்கப்பட்டுள்ளார்.(க)

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சேன்ட்ஸ்- லூசி ஜோடி சம்பியன்



அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் அமெரிக்க - செக்குடியரசு ஜோடி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ன் நகரில் கடந்த 8 ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் பெத்தானி மாட்டேக்-சேன்ட்ஸ் (அமெரிக்கா)- லூசி சபரோவா (செக்குடியரசு) ஜோடி, சுயாய் பெங் (சீனா)- அண்டிரியா ஹவாக்கோவா (செக்குடியரசு) ஜோடியை எதிர்கொண்டது.

முதல் செட்டில் இரு ஜோடியும் ஒன்றுக்கொன்று ஈடுகொடுத்து விளையாடியது. இதனால் முதல் செட் 'டை பிரேக்கர்' வரை சென்றது. இறுதியில் கடும் போராட்டத்திற்குப் பின் பெத்தானி மாட்டேக்- சேன்ட்ஸ் (அமெரிக்கா)- லூசி சபரோவா (செக்குடியரசு) 6 (4) - 7 (7) தோல்வியடைந்தது.

பின்னர் சுதாரித்துக்கொண்டு விளையாடிய இந்த ஜோடி 2ஆவது செட்டையும், 3ஆவது செட்டையும் தலா 6-3 எனக்கைப்பற்றி அவுஸ்திரேலிய ஓபன் தொடரை கைப்பற்றியது. (க)

## 235 ஏக்கர்...

வரான J.P.லூயிஸ் என்பவர் தன்னுடைய manual of the vanni districts என்ற நூலில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

நந்திக்கடல் களப்பையும் வளம்சேர் நிலப்பகுதியையும் கொண்ட இக்கிராமத்தில் இயற்கையோடொன்றி அமைதியான வாழ்வை நடத்தி வந்த இக்கிராமத்தின் பூர்வீகக்குடிகளை 2009இல் நடந்து முடிந்த கொடிய போர் இடம்பெயரச் செய்தது.

2016இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறிய போதும் கேப்பாப்பிலவு மக்களுக்கு சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் என்பது எட்டாக்கனியானது.

இவர்களுடைய குடிநிலங்கள், விளைநிலங்களை முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தலைமையகம் ஆக்கிரமித்துக் கொண்டது. இவர்கள் தமது சொந்தக் கிராமத்தின் அருகே உள்ள சீனியா மோட்டைக் கிராமத்தில் வழங்கப்பட்ட சில காணிகளில் வீடுகள் என்ற பெயரில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட 350,000.00 ரூபா பெறுமதியான கூடுகளில் வற்புறுத்திக் குடியமர்த்தப்பட்டனர்.

கண்ணெதிரே தமது பூர்வீகக் காணிகளில் தம்மால் நடப்பட்ட வான் பயிர்கள் காய்த்து கனிந்து குலுங்குவதையும் அங்கு இராணுவம் உல்லாச வாழ்வு வாழ்வதையும் ஏக்கத்துடன் பார்த்து இவர்களது வாழ்வு கழிந்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் சாசனங்கள் விதிகளுக்கமைய கேப்பாபிலவு மக்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களாகவே இன்றும் கருதப்பட வேண்டிய நிலையில் உள்ளனர். இருந்த போதும் முல்லைத்தீவு மாவட்ட செயலக புள்ளிவிபரங்கள் இவர்களை மீள்குடியமர்ந்தவர்களாகவே காட்டி நிற்கின்றதும் வேதனையை தரும் விடயமாகும்.

கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி அடிக்கடி போராட்டங்களையும் உண்ணாவிரதங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இதனால் வடக்கு மாகாண முதலமைச்சர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள், சட்டவல்லுநர்கள் அடங்கிய ஒரு குழுவினரை இப்பிரச்சினையை ஆய்வு செய்வதற்காக நியமித்தார். இக்குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது இராணுவத்தினர் தமது இராணுவத்தலைமையகத்தை தற்போது அமைந்துள்ள இடத்திற்கு தென்மேற்காக நகர்த்த வேண்டும் என்றும் கேப்பாப்பிலவு மக்களை தங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டுமெனவும் விதந்துரைத்தது.

இவ்வறிக்கையின் நகல்க்ள் முதலமைச்சர் அவர்களால் நல்லாட்சி அரசின் ஜனாதிபதிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் சயித் அல் ஹுசைனுக்கும் இலங்கை மீது அழுத்தம் கொடுக்கக் கூடிய நாடுகளின் தலைவர்கட்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இதனால் இராணுவத்தினர் தமது முல்லைத்தீவு மாவட்ட தலைமையகத்திற்கு கேப்பாப்பிலவு மக்களை அழைத்து அவர்களது குடியிருப்பு காணிகளை தாம் விடுவிக்க உள்ளதாக நம்பிக்கையூட்டி அவர்களது போரா ட்டத்தை தளர்வடையச் செய்தனர். ஆனால் இவர்கள் கேப்பாப்பிலவு மக்களின் குடியிருப்புக் காணிகளில் ஒரு சதுர அங்குலத்தை கூட விடுவிக்கவில்லை.

சீனியாமோட்டைப்பகுதியில் வற்றாப்பளை மக்கள் 42 பேருக்கு சொந்தமான 78 ஏக்கர் மேட்டு நிலப்பயிர்ச்செய்கைக்குரிய காணிகளும், சூரிபுரம் பகுதியில் தற்போது இலங்கையில் இல்லாத ஒருவருக்கு சொந்தமான 70 ஏக்கர் காணியையும் இன்னொருவருக்குச் சொந்தமான 6ஏக்கர் காணியையும் மொத்தமாக 154ஏக்கர் காணிகளே கடந்த 25ஆம் திகதி இல் வித்தியானந்தா கல்லூரியில் வைத்து விடுவிப்பதாக சான்றிதழ் வழங்கப்பட்ட காணிகளாகும்.

ஆனால் அன்றைய தினம் 235ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டதாக இராணுவத்தால் பொய்ப்பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கை இராணுவத்தின் கூற்றுக்களின் நம்பகத்தன்மை அற்ற நிலையை காட்டி நிற்கின்றது. வெளிப்படையாக நன்றாகத் திட்டமிட்டு ஏமாற்றப்பட்ட கேப்பாப்பிலவு மக்கள் கடந்த 25ஆம் திகதி அன்று அமைதி வழிப் போராட்டம் ஒன்றை தமது கிராமத்தில் நடத்தினார்கள். இனிவரும் நாட்களில் அம் மக்களை எவரும் ஏமாற்ற முடியாது. என ரவிகரன் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (செ-4,281)

## த.தே.கூ தேர்தல்...

ஆய்வரங்கு,

வடமாகாணத்தின் நீர்வளத்தினை மீட்டெடுத்தல், பாதுகாத்தல், பங்கிடுதல், முகாமை செய்தல் எனும் விடயப்பரப்புக்களை உள்ளடக்கியதாக வடமாகாணத்திற்குப் பொருத்தமான ஒரு நீரியல் கொள்கையினை வகுப்பதற்கான சர்வதேச மற்றும் உள்ளூர் நிபுணர்கள் கலந்து கொண்ட ஆய்வரங்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கு அமைவாக கொள்கைகள் இருந்தால் அவற்றை நடைமுறைப்படுத்த அரசியல்வாதிகளுக்கு இலகுவாக இருக்கும். எனவே 2013-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனங் கூட உங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டும். கொள்கைகள் மக்கள் நலம் சார்ந்ததாக அமைய வேண்டும்.

தனிப்பட்ட அரசியல்வாதிகளின் அடுத்த தேர்தலை மையமாக வைத்து வகுக்கப்படக் கூடாது. எனவே வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் யாவரையும் உள்ளடக்கிய நோக்கு ஆகியன கொள்கைத் திட்ட வகுப்பின் போது உள்ளேற்கப்பட வேண்டும். அதாவது முற்றான விவாதங்கள் நடை பெற்று வெவ்வேறு தேர்வுகள் அலசி ஆராயப்பட்டே கொள்கைகள் இயற்றப்பட வேண்டும். எங்கள் வடமாகாண மக்களுந்தான், அறிவுடையோருந்தான் பொதுவாகவே அறிவுக்கூர்மை உடையவர்கள். ஆனால் அதனுடன் சேர்ந்து வித்துவச் செருக்கும் அவர்களிடம் குடிகொண்டிருக்கின்றது. ஆகவே தான் சொல்வது மட்டுந்தான் சரி என்று அடித்துக் கூற முற்படுவார்கள். இதனால் கொள்கைகள் வகுப்பதில் சிரமங்களும் தாமதங்களும் ஏற்படக்கூடும்.

நன்நீரின் தொகை அளவு வரைவெல்லைக்குட்பட்டது என்றும் பாதிக்கப்படக்கூடிய ஒரு வளம் என்றும் அது உயிரினங்களின் வாழ்வின் உயிர் நாடி என்றும் அபிவிருத்திக்கும் சூழலுக்கும் அது அத்தியாவசியம் என்றும் கூறப்பட்டுள்ளன. அதாவது நீரானது குறிப்பிட்ட அளவே பாவனைக்குண்டு. அது எந்தளவு என்றுகூட எம்மால் கணிக்க முடியும். அதைவைத்தே எமது பாவனைகள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

நீர்முகாமைத்துவமானது நிலப்பயன்பாட்டையும் நீர்ப்பயன்பாட்டையும் இணைத்துச் செயற்பட வேண்டும். நீரின் தரம், தன்மை பற்றியெல்லாம் ஆராய்ந்து முடிவெடுக்கப்பட வேண்டும். சுன்னாகம் நீர் மாசுபடுதல் போன்றவை ஆராயப்பட்டு கழிவுப்பொருட்களின் வெளியேற்றல் பற்றியெல்லாம் இறுக்கமான தீர்மானங்களை நாங்கள் எடுக்கவேண்டும். இனினும் எமது நிலமும் நீரும் மாசுபடாதவாறு பாதுகாக்க வழிமுறைகளை நாங்கள் வகுத்துக் கொள்ள வேண்டும்.

நீருடன் தொடர்புடையதே சூழல். சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல் என்றாலேயே நீரை நன்நீராகப் பாதுகாத்து வைத்தல் என்று அர்த்தம் எனலாம். நீரைப் பாதுகாத்தல், சுத்தமாக வைத்திருத்தல், பங்கிடுதல், முகாமை செய்தல் போன்ற அனைத்தும் உங்கள் பார்வைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. நீரானது வறிய மக்களுக்கும் கிடைக்கும் விதத்தில் முகாமைத்துவப்படுத்த வேண்டும். நன்நீருக்கு ஒரு விலை வைப்பதானால் அது யாவருடனும் பேசி முடிவெடுக்கப்பட வேண்டும்.

நீர் முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகள் மற்றைய துறைகளின் கொள்கைகளுக்கு முரணானதாக அமைதல் ஆகாது. எனவே காலத்திற்குக் காலம் சகல துறைகளினதும் கொள்கைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

கொள்கை வகுத்தலானது புரிந்துணர்ந்து செய்யப்பட வேண்டியதொன்று. பலவிதமான முரண்பட்ட கருத்துக்களையும் மனதில் எடுத்து அவற்றைக் கடந்து தீர்மானங்களை எடுக்க நீங்கள் யாவரும் முன்வர வேண்டும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் எளிதாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## பிரதமர் அலுவலக...

குறிப்பிட்டுள்ளது.

உயர்மட்டப் புலனாய்வு அறிக்கைகளின் படி இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்ட அதே வேளை, வடக்கில் இது தொடர்பாக நான்கு விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு முன்னாள் போராளிகளை கைது செய்த கிளிநொச்சி பொலிஸாரிடம் இது தொடர்பாக, த ஹிந்து, விசாரித்த போது, இந்த விசாரணைகளை பயங்கரவாத தடுப்பு பிரிவே கையாள்வதாக தெரிவித்துள்ளனர். எனினும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் எந்த கருத்தையும் வெளியிடவில்லை.

அதேவேளை கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத சட்டவாளர் ஒருவர், கிளைமோர்கள் மற்றும் டெட்டனேற்றர்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக அரசாங்கத்தினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுமந்திரன் உறுதிப்படுத்தியுள்ளதுடன் சில விபரங்களையும் ஊடகங்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

கடந்த ஜனவரி 13ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் பங்கேற்கவிருந்த நிகழ்வு ஒன்று கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக கருத்து வெளியிட்ட சுமந்திரன், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக நிகழ்வை ரத்து செய்யவில்லை அதற்கு வேறு சில காரணங்கள் இருந்தன.

பின்னரே, ஜனவரி 13ஆம் திகதி படுகொலை முயற்சி ஒன்றுக்கு தயாராக இருந்தார்கள் என்று நான்கு பேர் கைது செய்யப்பட்டதாக அறிந்து கொண்டேன்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் வாழ்வதற்காக போராடுகின்றனர். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குமாறு நாம் அரசாங்கத்தை கேட்டிருந்தோம்.

அத்தகைய உதவிகள் கிட்டாத போது, அரசியல் நோக்குடன் செயற்படுவோரினால் அவர்கள் இலகுவாக இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சுமந்திரனை டிசம்பர் 12 மற்றும் ஜனவரி 13ஆம் திகதிகளில் தாளையடி- சேரன்பற்று வீதியில் கிளைமோர் தாக்குதல் நடத்தி கொலை செய்ய தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், எனினும் குறிப்பிட்ட திகதிகளில் சுமந்திரன் அந்தப் பாதையால் பயணிக்காததால் அவர் தப்பியதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியாகியுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## முச்சக்கரவண்டி...

வெளியிடப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளில் கட்டாயம் மீற்றர் கருவி பொருத்துதல், முச்சக்கரவண்டி செலுத்தும் போது புகைப்பிடிப்பதை தவிர்த்தல் மற்றும் முச்சக்கரவண்டிகளில் பயணிப்போருக்கு சொந்தமான பொருட்கள் தவறவிடப்படுமாயின் அதனை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தல் போன்ற சட்டமூலங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை முச்சக்கரவண்டி சாரதியின சாரதி அனுமதிப்பத்திர இலக்கம், நிழற்படம், வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கம் மற்றும் சாரதியின் பெயர் என்பவற்றை பயணிகளுக்கு தெரியும்படி காட்சிப்படுத்தலும் முக்கியமானதென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## போருக்கு பின்...

வில் பங்கு கொண்டு உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போருக்கு முன்னர் எங்களுடைய கலை கலாசாரம் எப்படி பேணி காதுகாக்கப்பட்டு இருந்தது என்பது நமக்கு தெரியும். ஆனால் போருக்கு பின்னர் எங்களுடைய கலை கலாசாரம் மழுங்கடிக்கப்பட்டிருக்கிறது.

ஆலயங்களில் உள்ள சிலைகளை உடைத்துக் கொண்டு சென்றிருக்கின்றார்கள்.

கோவில்கள் உடைக்கப்பட்டு இருக்கின்றது. இன்னும் எத்தனையோ கோவில்கள் பூட்டப்பட்ட நிலையில் விளக்கு எரியாத நிலையில் உள்ளன.

இது எங்களுடைய கலை கலாசாரத்தை வளர்க்கின்ற விடயத்தில் பாரிய இலக்காக இருக்கின்றது. தமிழருடைய கலை கலாசாரத்திற்கு யுத்தத்திற்கு பின்னர் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

மட்டக்களப்பில் கடந்த மாதம் கோவில் சிலைகள் உடைக்கப்பட்டு இருந்தன. யாழ்.மாவட்டத்திலும் சரி கிளிநொச்சி மாவட்டத்திலும் சரி இப்படியான கலாசார சீரழிவுகள் நடந்து கொண்டு வந்தன. ஆனால் அவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தனது உரையில் தெரிவித்தார். (செ)

## கொக்கட்டிச் சோலை...

1987ல் இடம் பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவத்தில் கொல்லப்பட்ட தமிழர்களின் 30வது ஆண்டு நினைவேந்தல் நேற்று சனிக்கிழமை தொகுதி மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஜனவரி 27, 28ஆம் திகதிகளில் அந்த பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது இறால் பண்ணையொன்றில் பணியாற்றிய உள்ளூர் பணியாளர்கள் உட்பட 87 பேர் வரை சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஊழல் விசாரணை...

வருடங்கள் கடந்துள்ள போதிலும், மகிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எம் மீது சுமத்தப்படுகின்றது. நாம் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

சுமார் 15 பேரளவில் இப்போது பிணையில் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதும் 2018 அல்லது 2019 இல் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படலாம் அதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

இந்த விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு தனியான நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் அல்லது இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒன்றிரண்டைத் தெரிவுசெய்து தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். அந்த வாக்குறுதியை நாம் நிறைவேற்றுவோம். அதற்காக அரசியல் பழிவாங்கல்போல் அவசர அவசரமாக செய்ய முடியாது.

நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுத்தும் செய்ய முடியாது. எல்லாம் சட்டப்படியே இடம் பெறும் என அமைச்சர் அசோகா தெரிவித்தார். (செ-11)

## மகிந்தவால்...

இடம்பெற்ற நிகழ்வொன்றில். உரையாற்றிய போதே, பிரதமர் இதனைத் தெரி வித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,


ஜனவரியில் ஆட்சியைக் கைப்பற்றுவதாக கூறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, அது முடியாமல் போயுள்ளது.

இந்த நிலையில், அதை எதிர்காலத்தில் செய்யவுள்ளதாக மகிந்த தெரிவித்துவருவது நகைப்புக்குரியதாகியுள்ளது.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை மகிந்த ராஜபக்ஷ சிதைத்துள்ளார் என்பது அனைவருக்கும் தெரியும். இதனால் பொருளாதாரம் இன்று அவசர சிகிச்சைப் பிரிவாகியுள்ளது.

எனினும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து தாம் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (செ-11)

# Study in Singapore



EXPERT COUNSELING
Admissions & Visa Processing

**With Industrial Training**
**100% விசா உத்தரவாதம்**
**6 Months Studies 6 Months Work**

- Diploma In Hotel Management
- Diploma in Food & Beverage operations
- Advanced Diploma In Hotel Management
- குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்

Next Intake March 2017

ICS Foreign Education Services
Hot Line : 076 7013060
107, B 1/1 Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்


# கறுப்பு பணம்...

தெரிவித்தார்.

இந்த வருடம் ஆட்சி கவிழ்க்கப்படும் என்று மகிந்த அணி கூறி வருகின்றமை தொடர்பில ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டிய ஆட்சிதான் என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இது மக்கள் நேய ஆட்சி இல்லை. மகிந்த ஆட்சியைப் போல் இந்த ஆட்சியிலும் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன.

மத்திய வங்கி பிணை முறி மோசடியில் தொடங்கி இப்போது வரை வெற்றிகரமாக ஊழல்கள் இடம்பெறுகின்றன. மத்திய வங்கியின் திருடர்களைப் பாதுகாத்துக் கொண்டு திருட்டு முன்னெடுக்கப்படுகின்றது. மறுபுறம் அரச சொத்துக்கள் தனியாருக்கு - வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன. இதனால் இந்த அரசை விரட்டுவதற்கு மக்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்த அரசை விரட்டிவிட்டு ஆட்சியை மீண்டும் மகிந்தவிடமா கொடுப்பது? இரண்டு அரசுகளும் ஊழல்மிக்க அரசாக இருக்கும்போது மாற்று அரசு ஒன்றை அமைப்பதுதான் ஒரே வழி. அதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும். மகிந்த கூறுவதுபோல் இந்த வருடம் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அப்படிக் கவிழ்ப்பதாக இருந்தால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை.

அப்படி இல்லை என்றால் கறுப்புப் பணத்தைக் கொண்டு எம்.பிக்களை விலைக்கு வாங்கித்தான் ஆட்சியை மாற்ற வேண்டும். இதை மகிந்தவும் செய்யலாம் ஆட்சியைத் தக்கவைக்க ரணிலும் செய்யலாம்.

இந்தக் குறுக்கு வழியைத் தவிர ஆட்சியைக கவிழ்க்க வேறு வழி இல்லை. கடந்த காலங்களில் மகிந்த செய்ததுதான் இது. ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் ஊழல்வாதிகளுக்கு இது ஒரு பெரிய விடயம் அல்ல என்றார் பிமல் ரத்நாயக்க. (செ-11)


## கனடாவில் படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி
காட்சி அறை இலக்கம் – 185
நேரடியாக எம்மை சந்தியுங்கள்
(27,28,29)-01-2017
V4 EDUCATIONAL CONSULTANCY
0768226236 / 0768226240

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-4438)

## கார் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் (இல KI...) மாருதி சுசுக்கி வெள்ளை நிறமுடைய 800 CC கார் விற்பனைக்கு உண்டு. 25,000 km மாத்திரம் ஓடியது. சிறந்த நிலையில் உள்ளது. A.C உண்டு.
தொடர்பு :
077 505 6263

# Study MBBS

Approved by Sri Lankan Medical Council UK, ECFMG-USA, IMED, WHO & UNESCO

- Raiga Strands University - Latvia
- IMU - Malaysia
- Manipal University - Malaysia
- Segi University - Malaysia
- Sichuan University - China
- Guangxi University - China
- Zhengzhou University - China
- Ningbo University - China
- China Medical University - China
- Gomel State Medical University - Belarus



(சி-7388)

Admission Open for the Year 2017

ICS Study Medicine Abroad
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
107, B-1/1 Galle Road, Colombo 06.
011 4343322 , 021 4926222
Appointments
077 3013060

## பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

01. எழுதுவினைஞர் (Clerk) (பெண்)
02. சிற்றூழியர் (ஆண்)

03.02.2017 (வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு நேரில் சமுகமளிக்கவும்.

NEW SCIENCE WORLD
Brown Road, Navalar Road Junction, Jaffna.
077 336 4055
(C-7394)

## காணி உடனடி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி சந்திக்கு அருகாமையில் (லிங்கம் கூல்பாருக்கு அருகில்) 56-ம் இலக்கத்தில் உள்ள 12 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு :
0774640794, 0776428502
(7654)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
- பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

## காணி விற்பனைக்கு

நவாலி அட்டகிரி பாடசாலைக்கும் குருக்கள் கோயிலுக்கும் அண்மையில் உள்ள ஆண்பாவளவு என்னும் 12 பரப்புக் காணியும் அதில் பாரிய வீடும், பனை, தென்னை, மா போன்ற பயன்தரும் மரங்கள் உள்ள காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : மா.கிருஷ்ணானந்தன்
No.44, Love Lane, Uduvil
0212242579, 0778356074, 0773792193
(7642)

## A/L சித்தியடைந்துவிட்டீர்களா? Engineer ஆக விருப்பமா?

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி நேரில் வருகை தாருங்கள்
காட்சி அறை இலக்கம் – 185

- Civil Engineering - Mechanical Engineering - Aeronautical Engineering
- Bio Medical Engineering - Electronics & Communication Engineering
- Electrinics & Instrumentation Engineering - Electrical & Electronics Engineering
- Computer science & Engineering - Information Technology

A/L உயிரியல் 3 பாடங்களில் சித்தியெய்தியவர்கள் மட்டும் படிக்கக்கூடிய கற்கைநெறிகள்.
- Bio-Technology - Microbiology - Nursing - Physiotherapy

A/L எந்த பாடப்பிரிவினை எடுத்திருந்தாலும் பெற்றுக்கொள்ளக்கூடிய கற்கைநெறிகள்.
- BSc Computer Science - BSc Information Technology
- Computer Applications (BCA) BSc Electronics
- Catering Science and Hotel Management - Management Science (BBA & BBA-CA)
- Commerce with Professional Accounting - Commerce with Business Process
- BA English Language - BSc Mathematics - BA Social Work - Physical Education

உடனடி அனுமதிகள்
SRI RAMAKRISHNA ENGINEERING COLLEGE -Coimbatore-
V4 0768226236
(சி-7404)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

100% SATISFACTION GUARANTEED
070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
(C-7311)
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

## DMI Diploma in AutoCAD 2D & 3DModeling

புதிய பிரிவுகள் ஆரம்பம்- சனி, ஞாயிறு 9.30
DMI COMPUTER EDUCATION
113, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403
129/2, M. M. V. வீதி, நெல்லியடி. Tel:. 021 226 2470

## பாராட்டி வாழ்த்துகிறோம்



பிரான்சிஸ்க் பவித்திரா

யாழ்.பல்கலைக்கழகத்தில் 29.01.2017 இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெறும் பிரான்சிஸ்க் பவித்திரா அவர்களை இதயம் நிறைந்த மகிழ்வுடன் நாம் வாழ்த்துகின்றோம். அத்துடன் அவர் கல்வியில் உயர்ந்து பட்டங்கள் பல பெற்று வாழ்வில் உயர்வடைய இறை ஆசிர்கள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: ம.பிரான்சிஸ்க் - கணவர்
றிச் பிராங்லின் - மகன்
கிறிஸ் கெவின் - மகன்
(C-7384)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சிவஸ்ரீ
செந்தில்ராஜ குருக்கள் லலிதாதாஸ்

எங்கள் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ செந்தில்ராஜ குருக்கள் மகன் லலிதாதாஸ் அவர்கள் 26.01.2017 அன்று சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர்களை வாழ்த்தி வணங்கி சேவையில் மேன்மேலும் வளர பெரியநாயகி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள் :
பரிபாலனசபையினர், அடியார்கள்,
பெரியநாயகி அம்மன் ஆலயம், உதயசூரியன் வீதி, உடுவில்.
(7664)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 102

வள்ளுவர் ஆண்டு 2048 | 29.01.2017 | தொலைபேசி : 021 222 3378




# மகிந்த எழுவாரா?



# நடந்த கொடூரம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கம் முடிந்து ஆலடியில் அனைவரும் அமர்ந்த போதிலும் எல்லோர் முகத்திலும் இனம் புரியாத சோகம் புரையோடியிருந்தது.

ஆலடியில் நிலவிய மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** ஊர்காவற்றுறையில ஓர் இளம் கர்ப்பிணிப்பெண் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் எல்லோரையும் கடுமையாகப் பாதித்து விட்டது. ஒரு காலத்தில வளமாக இருந்த தீவகம் யுத்தத்திற்குப் பின்னர் அடிப்படை வளத்தையும் இழந்து போயுள்ளது. எனினும் தீவக மண்ணை வளப்படுத்த அங்கு வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க அரசியல்வாதிகள் எவரும் முன்வருகினம் இல்லை. இதனால் தீவகத்தில மிகப் பெரிய அக்கிரமங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

**விதானையார்:** வாத்தியார் முதலில தீவகத்தில இருக்கிற ஒவ்வொரு காணிகளும் துப்புரவு செய்யப்பட்டு காணி உரிமையாளர்கள் அவற்றைப் பராமரிக்க வேணும். இல்லையெண்டால் தீவக மக்கள் பாம்பு பூச்சிகளுக்குள்ளும் கள்ளர் காடர்களுக்குள்ளும்தான் வாழவேண்டியிருக்கும்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பற்றைக் காடாகக் கிடக்கிற காணிகளைத் துப்புரவு செய்து ஒவ்வொருவரும் தத்தம் காணிகளுக்கு வேலி போட்டு பாதுகாப்பாக வைத்திருந்தால் தீவகத்தில மக்கள் குடியேற்றமும் அதிகரிக்கும்.

**மூப்பர்:** கங்காணியார் இதைச் செய்யிற அதே நேரம் யாழ்ப்பாணத்தில இருந்து தீவகத்தில இரும்புக் கம்பி, உடைந்த பிளாஸ்ரிக் என்று அங்க வாங்கப் போறவர்களை முதலில நிறுத்த வேணும். மேற்படி பொருட்களை தீவகத்தில வாங்கப் போறவையள் கோயில் விக்கிர கங்களையும் கோயில்களில் உள்ள பாத்திரங்களையும் திருடிக் கொண்டு போகினம். அதோட கைவிடப்பட்ட வீடுகளுக்குள்ள சென்று ஜன்னல் கம்பிகள் போன்றவற்றையும் களவெடுக்கினம். எனவே யாழ்ப்பாணத்தில இருந்து தீவகத்திற்கு உடைந்த பொருட்கள் வாங்கப் போறவர்களை உடனடியாக நிறுத்த வேணும்.

**சாத்திரியார்:** மூப்பர் சொல்றது சரிதான். அதே நேரம் தகரங்கள், போத்தல்கள் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்களை தீவகத்தில இருந்து அகற்றுவதற்கு ஒரு பொருத்தமான நடைமுறையைப் பின்பற்ற வேணும்.

(சாத்திரியார் இப்படிக் கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். அவரின் எழுகையில் வீரமும் கோபமும் தெரிந்தது.)

**வாத்தியார்:** தீவகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்படுகின்ற உடைந்த பொருட்கள் தொடர்பில் தீவகத்திலுள்ள பிரதேச செயலகங்கள் கடுமையான முறைகள் பின்பற்றவேணும். ஊர்காவற்றுறையில் கொல்லப்பட்ட இளம் கர்ப்பிணிப் பெண்ணின் கொலை தொடர்பில பொலிஸாரின் விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். தீவக மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தீவகத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிய வேணும்.


இவற்றை நாம் தீர்மானமாக நிறைவேற்றுவோம்.

இப்படி வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றி அமர்ந்தனர்.

**விதானையார்:** வாத்தியார் எனக்கொரு சந்தேகம்.

**வாத்தியார்:** என்ன விதானையார் என்ன சந்தேகம்?

**விதானையார்:** யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவகத்திற்கு ஒழுங்காகப் போய் மக்களின்ர குறைகளைக் கேட்டறியவேணும் எண்டு ஒரு தீர்மானம் சொல்லுது. இது சாத்தியப்படுமோ?



(வாத்தியார் சில நிமிடங்கள் மௌன மாகினார். வாத்தியாருடன் சேர்ந்து ஆலடியிலும் மௌனம் ஆட்சி செய்தது. மௌனத் தைக் கலைக்க வாத்தியார் முயற்சித்தார்)

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறதும் சரிதான். எங்கட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒழுங்கு முறையில தீவகத்திற்குச் சென்று மக்களின்ர குறைகளைக் கேட்பினம் எண்டு நான் நம்பல்ல. தொலைபேசியில கூட எங்கட எம்.பி.மாரோட தொடர்பு கொள்ளமுடியாமல் இருக்குது. அவையள் தங்கட வேலை இருந்தாலும் எங்கட மக்கள் நினைத்தால் எல்லாம் சாத்தியமாகும்.

(ஆலடியில் நிலவிய மௌனத்தைக் கலைக்கவே வாத்தியார் குரல் கொடுத்தார். இருந்தும் வாத்தியார் கூறிய கருத்தால் மீண்டும ஆலடியில் நிசப்தம் நிலவியது. இந்த நிசப்தத்தில் ஆலடியில் இருந்தவர்களின் மூச்சு "எங்கட மக்கள் நினைத்தால்..." என்று வாத்தி யார் சொன்னது ஏன்? எதற்கு? எதனை? என்ற கேள்விகளாக வெளிப்பட்டன. இந்நேரத்தில் சாத்திரியார் சதாசிவம் பொறுமை இழந்தவராக வாத்தியார் எங்கட மக்கள் நினைத்தால்... என்று சொல்லுறியளே அது என்ன...? என்று கேட்க)

**வாத்தியார்:** சாத்திரியார் எங்கட மக்கள் இப்ப தேர்தல் காலத்தில வாக்களிக்கவும் தேர்தல் கூட்டங்களை நிரப்பவும்தான் தேவையாக இருக்கினம். இதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றவுடன் நாங்கள் அதற்கு வாக்களித்ததுதான். இதால நாங்கள் மக்களிட்ட எப்ப போனாலும் அவர்கள் எங்களுக்கு வாக்களிப்பினம் என்ற நினைப்பு கூட்டமைப்பிட்ட இருக்கு. அதால அவர்கள் தேர்தல் காலத்தில எங்களிட்ட வருகிற பறவைகளாகி விட்டினம்.

**சாத்திரியார்:** அப்ப வாத்தியார் எங்கட மக்கள் என்ன செய்யவேணும்.

**வாத்தியார்:** வரப்போற உள்ளூராட்சி சபைத் தேர்தலில ஒரு சுயேட்சைக் குழுவை நிறுத்தி தீவகத்தில வேலை செய்யிறவர்களை வேட்பாளர்களாக்கி அவர்களை வெற்றி பெறச் செய்தால் எங்கட அரசியல்வாதிகள் அடிக்கடி எங்களிட்ட வருவினம். அடுத்த தேர்தலில பதவி பறிபோகும் என்ற பயத்தில.

**பண்டிதர்:** அடுத்த தேர்தலில பதவி பறிபோகுமோ? இதென்ன கதை. வாக்குகளை எண்ணிய பிறகு பதிவு செய்யிற அதிகாரி நமக்கு வேண்டியவராக இருந்தால் பிறகும் வெற்றி தானே!

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா எல்லாவற்றிலும் மக்கள் விழிப்பா இருக்க வேணும். வடக்கு மாகாணத்தில கடமை நிறைவேற்று அதிபர்களைப் பணி நீக்கம் செய்தினம். இதைச் செய்யிறதில ஆசிரியர் தொழிற்சங்கம் ஒன்றைச் சேர்ந்த சிங்களப் பேரினவாதியின்ர கைக்கூலி ஒருவர் காரணமாக இருந்தார். அதே நபர் கிழக்கு மாகாணத்திற்குப் போனார். அங்கையும் கடமை நிறைவேற்று அதிபர்களைத் தூக்கலாம் எண்டு. ஆனால் போனவருக்கு செருப்படி கொடுத்து அனுப்பி விட்டினம்.

**விதானையார்:** அப்ப வாத்தியார் கிழக்கில கடமை நிறைவேற்று அதிபர்களைப் பணிநீக்கம் செய்யாமலோ புதிய அதிபர்களை நியமித்தவியள்.

**வாத்தியார்:** விதானையார் கிழக்கு மாகாணத்தில புதிய அதிபர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கிற நிகழ்வில கிழக்கு மாகாண அமைச்சர் துரைராஜசிங்கம் உரையாற்றினவர். அவற்ற உரையில எங்கட மண்ணில சேவையாற்றிய கடமை நிறைவேற்று அதிபர்களை பணிநீக்கம் செய்யமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். அவர் ஆற்றிய உரை வீரகேசரி பத்திரிகையில வந்திருக்கு.

**பண்டிதர்:** அப்ப ஜோசப்பர் தன்ர செயலாளர் பதவியை இராஜினாமா செய்ய வேணுமல்லோ.

**விதானையார்:** இது நடக்கிற காரியமோ? ஒரே பாடசாலையில 7 வருடம் சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களுக்கு இடமாற்றம். ஆனால் ஆசிரியர் தொழிற்சங்கத்தில முக்கிய பதவியில இருக்கிறவர்கள் கல்லறைக்குப் போகும் வரை இருக்கலாம்.

**மூப்பர்:** அட நாசமறுப்பு. அப்ப ஜோசப்பன் வடக்கு மாகாணத்தை மட்டுமோ குழப்பினவன்.

**விதானையார்:** மூப்பர் இதுக்குள்ள கனக்க அரசியல் இருக்குது. இதுபற்றி நாங்கள் ஆராய்வம். ஆனால் எங்கட வடக்கு முதலமைச்சரோட இருக்கிற அந்தப் பெஞ்சனியர்கள் ஒருசிலரை தூக்காவிட்டால் எங்கட முதலமைச்சர் கஷ்டப் படவேண்டி வரும். இப்படி விதானையார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# எழுக தமிழும் ஜல்லிக்கட்டும்

இந்த உலகில் ஈழத் தமிழர்கள் பாவப்பட்ட பிறவிகள் என்று தான் சொல்ல வேண்டும். எவ்வளவு தான் இழப்புகளை துன்பங்களை அனுபவித்தாலும் எங்களுக்காகப் பேசுவதற்கு எங்களவர்களே தயாரில்லை எனும் போது நாம் பாவப்பட்ட பிறவிகள் என்று சொல்வதில் தவறில்லை.

யானை கிடந்தால் குதிரையளவாவது இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால் ஒருபெரும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த ஈழத்தமிழினம் இன்று ஏதுமற்ற இனமாக இருப்பது தான் வேதனையிலும் வேதனை.

எங்களுக்கு உரிமை வேண்டும் என்று கேட்பதற்குக் கூட எங்களால் முடியவில்லை. எங்களுக்காக குரல் கொடுப்பதாகக் கூறி எங்கள் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கொழும்பு அரசியலின் வாழ்வுக்காகக் கடுமையாகப் பாடுபடுகிறது. ஏன் தான் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று நினைக்குமளவிலேயே நிலைமையுள்ளது.

தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து எங்கள் உரிமையைத் தாருங்கள் எங்களையும் உங்களைப் போல வாழவிடுங்கள் என்று கேட்டால் அது கிடைக்கின்ற தீர்வை இல்லாமல் செய்துவிடும் என்று பயமுறுத்துபவர்கள் மத்தியில் தமிழினம் வாழ்வதென்பது முடியாத காரியமே.

தமிழினத்துக்கு தீர்வு கிடைக்கப் போகின்றதா? அவ்வாறு கிடைக்கின்ற தீர்வு, எங்களுக்குத் தீர்வு வேண்டும் என்ற தமிழினத்தின் கோசம் கேட்டாலே கருக்கலைந்து போகும் என்று சொல்கின்ற மூடர்கள் மத்தியில் தமிழினத்தின் இருப்பும் உயிர்ப்பும் கடினமான விடயமே.

தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைப்பது உறுதியானதாயின், கிடைக்கின்ற தீர்வு தமிழினத்தின் உரிமையை-சுதந்திரத்தை உறுதி செய்யுமாயின் தீர்வு வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோசம் அரசு வழங்கும் தீர்வுக்கு இன்னும் வலுச் சேர்க்கும்.

ஆனால் நம்மவர்களோ தமிழ் மக்கள் கோஷம் போட்டால் எல்லாம் கெட்டுப் போய் விடும் என்கிறார்கள். என்ன செய்வது போருக்கு பின்பு எங்களைப் பயமுறுத்தி' தங்கள் அரசியலை நடத்துவது என்ற முடிவை தென்பகுதி அரசியல்வாதிகள் மட்டுமல்ல நம்மவர்களும் எடுத்து விட்டனர் என்பதை உணரமுடியும்.

எது எவ்வாறாயினும் இன்று நம் மத்தியில் இருக்கக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படாமல் உள்ளது. இருந்தும் இதுபற்றி தமிழ் அரசியல் தலைமை எதுவும் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான் மிகப்பெரும் வேதனை. குறிப்பாக தமிழ்மக்களின் மிக முக்கிய பிரச்சினைகளாக; காணாமல் போனவர்களின் விவகாரம், சிறைகளில் வா'ழும் தமிழ் அரசியல் கைதிகள், படையினர் வசமுள்ள எம் நிலங்கள் என்பனவாகக் குறிப்பிட முடியும். இந்த மூன்று விட யங்களையும் நாம் கூர்ந்து கவனிப்போமாக இருந்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்று கேட் கின்றவர்கள் பாதிக்கப் பட்டவர்களாக மட்டுமே இருக்கின்றனர்.

விடுதலைப் போராட்டத்தில் நடந்த சம்பவங்களுக்கு நாம் அனைவரும் கூட்டாகக் குரல் கொடுப்பதே நீதியாக இருந்தும் அந்த நீதியில் இருந்து தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ்மக்களும் விலகிக் கொண்டுள்ளனர். இதனால் யுத்தத்தின் நேரடிப் பாதிப்புக்கு ஆளானவர்கள் மிகுந்த துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.



## ஜல்லிக்கட்டுப்போல எங்களுக்காகவும் எகிறியிருந்தால்

குறிப்பாக காணாமல் போனவர்கள் தொடர்பில் அவர்களின் உறவுகள் ஒன்று கூடி தங்கள் பிரச்சினையை வெளிக்காட்டும் போதெல்லாம் அவர்களுக்கான ஆதரவு மிகவும் குறைவாக இப்பதைக் காணமுடிகிறது.

காணாமல் போனவர்கள் தொடர்பில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு ஓரணியில் நின்று குரல் கொடுப்போமாயின் அதன் மீதான கவனம் வலிமை பெறும் என்பது சர்வநிச்சயம். இருந்தும் பாதிக்கப்பட்டவர்களே பாதிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கட்டும் என்பது போல அவர்களை நாம் அநாதரவாக விட்டுவிட்டோமா என்றுகூட எண்ணத் தோன்றுகின்றது.

இதேபோன்றுதான் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்திலும் சொந்த இடங்களில் மீளக்குடியமரப் போராடுபவர்களின் விடயத்திலும் எங்கள் நிலைப்பாடு உள்ளது.

இத்தகைய பிரச்சினைகளை முன்னிறுத்தி அவற்றை வெளிப்படுத்துவதற்காக தமிழ் மக்கள் பேரவை எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடத்தியது. தொடர்ந்து மட்டக்களப்பில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்த வண்ணமுள்ளன. இருந்தும் தமிழ்மக்கள் பேரவை முன்னெடுக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை தடுப்பதிலும் அதற்குக் குந்தகம் செய்வதிலும் எங்கடவர்கள் சிலர் கடுமையாகப் பாடுபடுகின்றனர். ஏதோ அரசாங்கம் எல்லாம் தந்துவிடப்போகிறது என்பது போல இவர்களின் வாதங்கள் உள்ளன.

அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் காணாமல் போனவர்கள் பற்றிய விபரம் எதுவும் எங்களிடம் இல்லை என்றும் சிலவேளை அவர்கள் வெளிநாடு சென்றிருக்கலாம். என்றும் கூறியிருந்தார்.

காணாமல் போன ஒரு பிள்ளையின் பெற்றோராக நாம் இருந்தால் பிரதமர் ரணிலின் உரை எம்மை எந்தளவுக்குத் தாக்கியிருக்கும் என்பதை நாம் உணர முடியும்.

ஆக, தமிழ்மக்களுக்கான பாதிப்புக்கள், வலிகள், துன்பங்கள் அனைத்தும் தனிமனிதர்களுடன் சங்கமித்து விடக்கூடியதன்று. மாறாக இழப்புக்கள் தனிமனிதர்களுக்காக பிரித்து வழங்கப்படுமாக இருந்தால் எதிர்காலத்தில் தமிழினம் தொடர்பில் எவருமே குரல் கொடுக்கவும் இனத்திற்காகத் தங்களை தியாகம் செய்யவும் முன்வரமாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

இப்போது தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்காக மிகப் பெரியதொரு மக்கள் போராட்டம் நடைபெற்று வருகிறது. எவரும் நினைத்துப் பார்க்கமுடியாத அளவில் தமிழகத்தின் கோடிக்கணக்கான மக்கள் திரண்டு தமது எழுச்சியைக் காட்டியுள்ளனர்.

இதில் நமக்கு இருக்கக் கூடிய கவலை எங்களுக்காக, எங்கள் தமிழ் மக்களுக்காக நாம் ஒன்றுசேர்ந்து ஓரணியாகத் திரண்டு எழுக தமிழ் என்ற கோசத்துடன் பேரணி நடத்துவதை தவறு என்று தமிழர் சிலர் கூறுவது.

மற்றையது ஜல்லிக்கட்டுக்காக அலைகடல் எனத் திரண்டு எழுந்த எங்கள் தமிழக உடன் பிறப்புக்கள் வன்னி யுத்தத்தில் ஈழத் தமிழ் உறவுகள் துடியாய்த் துடித்து உயிர் துறந்த போது விண்ணும் மண்ணும் அதிரும் வண்ணம் ஒன்று திரண்டிருந்தால் எங்களில் பலர் இன்றும் உயிரோடு இருந்திருப்பர். இன்று அவர்களால் கவலை கொண்டிருக்கும் குடும்பங்கள் மகிழ்வாக வாழ்ந்திருப்பர். இதை நினைக்கும் போது நம் கண்கள் கலங்கவே செய்கின்றன.

அதுசரி எங்களுக்காக நாங்கள் ஒன்று சேர்வதையே தடுக்கின்றவர்கள் நம்மினத்தில் இருக்கும் போது, ஜல்லிக்கட்டு போல எங்களுக்காகவும் தமிழகச் சகோதரர்கள் போர்க் கொடி தூக்கியிருக்கலாமே என்று நினைப்பதில் நியாயக் குறைவு இருக்கவே செய்யும்.




விதுரன்




# புத்திசாலி பூனை பிரபு

முன்னொரு காலத்தில் விவசாயி ஒருவர் பூனை ஒன்றை வளர்த்து வந்தார். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை. இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம் என்று நினைத்தார் அவர். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தார். அந்த காட்டில் பூனையே கிடையாது. அங்கே உலவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த்தது.



"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது."நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். நல்ல மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன். ஒரு பிரபுவை கல்யாணம் செய்து கொண்ட பெருமை எனக்குக் கிடைக்கும்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும். பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சிலசமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

"நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்."என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது.இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது. முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

"எப்படியாவது பூனை பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி."உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல்."எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய்.எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருட்கள் பரிமாறப்பட்டன.

"யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது."எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி. "எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய். "ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி. மூன்றும் முயலைப் பார்த்து. "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன. முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது. வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

"பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து. நீங்களும் பூனை பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல்.

"நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள். பூனை பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி.இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது. பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி.

"அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய்.

"உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல்

"அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி. பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன. பலவிதமான உணவுப் பொருட்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. 'மியாவ், மியாவ்' என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது.

"ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல்.மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின.பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது.மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது.சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது.

"மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது. எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி. அங்கிருந்து 'தப்பித்தேன்' என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது.பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது.

அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனை பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்தது. புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விருந்தது அது.அலறி அடித்துக் கொண்டு. ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று கரடியும் ஓடியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன. "பூனை பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி. மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன.அதன் பிறகு பூனை பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை. வயதானாலும், அதிர்ஷ்டத்தாலும், தன் வாய்ச்சொல் திறமையாலும் பூனையானது மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது.

**மனவலிமை உள்ள ஒருவருக்கு முதிர்ச்சி ஒரு பொருட்டே அல்ல.**







## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



ஜல்லிக்கட்டுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் தேவைதானா?

நல்லாட்சி அரசினாலும் காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்க...

ஜல்லிக்கட்டுப் பற்றி?

**வாசன்** — **உரும்பிராய்**

**உணர்வுகள் எப்போது மறுக்கப்படுகின்றன?**

எம்மால் நடைபெறும் போராட்டங்கள் தோல்வி பெறவில்லையானாலும் தோற்கடிக்கப்படுகிறது. இதுவரை எம் உணர்வுசார்ந்து எத்தனை போராட்டங்கள் நடந்துவிட்டன. எம் ஆயுதப் போராட்டம் உலக வல்லரசுகளின் ஆதரவுடன் அழிக்கப்பட்டது.

எம்மால் செய்யப்பட்ட அறவழிப் போராட்டங்களுக்கு யாரும் மதிப்பளிப்பதாய்த் தெரியவில்லை. அகிம்சை தேச இந்தியாவிற்கு சில கோரிக்கையை முன்வைத்து திலீபன் உண்ணாவிரதம் இருந்தான். அகிம்சை எம் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லையே. இப்போதும் கூட எத்தனை போராட்டங்கள். அவை உச்சக் கட்டத்தை எட்டும் கட்டத்தில் சில உறுதியளிப்புகள். அத்துடன் அவை முடிவடைந்துவிடுகிறதே தவிர அதன் தொடர்ச்சி இல்லை என்பதுதான் வேதனையிலும் வேதனை.

**ஜோர்ச்** — **கிளிநொச்சி**

**உறவுகளை கொச்சைப்படுத்துபவர்கள் பற்றி?**

வார்த்தைகள் என்பது துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட தோட்டாக்கள் போல. சில நேரங்களில் அவை உயிர்ச் சேதங்களைக் கூட ஏற்படுத்திவிடும். என்னால் சொல்லப்படும் ஒரு வார்த்தை அந்த வார்த்தைக்கு எத்துணை எதிர்வினை இருக்கும் என்பதை அறியாமல் வார்த்தைகளை உமிழ்ந்து இதயங்களை – உறவுகளை நொருக்கிவிட்டு அதன்பின் எந்தப் பிராயசித்தம் செய்தும் பயனளிக்காது என்பதை புரியாத உறவுகள் மத்தியில்தான் நாம் வாழ்கின்றோம் என்பது தான் கொடுமையிலும் கொடுமை.

**ஈஷா** — **உடுவில்**

**ஜல்லிக்கட்டுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் தேவைதானா?**

உனக்கு கிடைக்க வேண்டிய உரிமை மறுக்கப்படுகிறது என்றால் போராட்டத்தான் வேண்டும். அப்படி போராடாமல் இருந்துவிட்டால் அது இனத்துக்கே ஈனம்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை அங்கொரு காட்டிலே பொந்திடை வைத்தேன் வெந்து தணிந்தது காடு... என்று பாடினான் பாரதி. அலங்கா நல்லூரில் வெறும் நான்கு பேருடன் ஆரம்பித்த போராட்டம் உலக நாடுகளையே உலுக்கிப் போட்டது.

போராடாத வாழ்க்கை வாழ்க்கை அல்ல. போராட்டங்கள் வேறுபடலாம்இ ஆனால் அவற் றின் இலட்சியங்கள் ஒன்றுஇ அதுதான் மறுக்கப்பட்ட எம் உரிமைகளை வென்றெடுப்பது என்பது.

**கமல்** — **உடுவில்**

**ஜல்லிக்கட்டுப் பற்றி?**

பழந்தமிழர் இலக்கியங்களிலும் சிந்து வெளி நாகரிகத்திலும் ஏறு தழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதை மஞ்சுவிரட்டுதல் என்ற பெயரிலும் அழைப்பர். கொல்லக் கூடிய காளையைத் தழுவி போரிட்டு அடக்குவதால் கொல்லேறு தழுவுதல் என சிறப்பித்துக் கூறப்படுகின்றது. சிந்து வெளி காலத்தில் கண்டெடுக்கப்பட்ட ஜல்லிக்கட்டு கல்வெட்டு ஆதாரம் இதோ.


**குறுந்தகவல் (SMS)**

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**

**021 567 1532**


**வேல்நந்தன்** — **புலோலி**

**காளையை அடக்குவதா பசுவை அடக்குவதா கஷ்டம்?**

காளையை வீரத்தாலும் பசுவை அன்பாலும் அடக்குபவன்தான் உண்மையான வீரன். இப்போது பலர் வீரம் என்பது பசுவை (பெண்ணை) அடக்கி, ஒடுக்கி தன் காலின் கீழ் பணிய வைப்பதுதான் வீரம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒருவனிடம் ஆயிரம் திறமை இருக்கலாம். யானையை அடக்கும் வீரம் இருக்கலாம். ஆனால் அந்த வீரத்தை காட்டுபவரிடம் காட்டாமல் பெண்களிடம் காட்டி தன்னைத் தானே இழிவுபடுத்துபவனாகி விடுகிறான். இதைத்தான் சங்ககாலம் வீரமும் காதலும் இருப்பவனே ஆண் என்கிறது.

**தவரூபன்** — **மாணிக்கபுரம்**

**மனோதத்துவ மூலம் முற்பிறப்பை அறியலாமா?**

முற்பிறப்பு பற்றி பல தகவல்களை இணையத்தில் அறிந்து கொள்ளலாம். விஜய் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியில் மனோதத்துவ நிபுணர், ஒருவரை சென்ற பிறப்பில் நீர் கொக்காக பிறந்திருக்கிறீர் என்று கூறுகின்றார். இவ்விடயம் பற்றி அந்த நபரின் தாயிடம் பேசும்போது தன் மகன் ஒற்றைக் காலில் நிற்கும் பழக்கம் இருப்பதாகவும் தான் பல முறை அப்படி நிற்க வேண்டாம் என எச்சரித்த போதும் என்னை அறியாமலே அப்படி வருகிறது என்று தன் மகன் சொல்லுவான் எனவும் அவர் கூறியது ஆச்சரியத்தின் உச்சம்.

**தர்சா** — **மானிப்பாய்**

**நேற்று உங்கள் மனைவி உங்களுக்கு நல்ல அடியாமே உண்மையா?**

எங்களுக்குள் நடக்கும் அன்பு விளையாட்டில் இதுவும் ஒன்று. யார் அடிப்பது யார் அடிவாங்குவது என்பது முக்கியமல்ல. அடி–அடிவாங்கல். இதற்கிடையில் ஒரு பெரிய சமாச்சாரமே இருக்கிறது. எல்லாம் போகப்போக உங்களுக்குத் தெரியவரும் பொறுமை பொறுமை.

**நிதி** — **மானிப்பாய்**

**நல்லாட்சி அரசினாலும் காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களா?**

காணாமல் போனவர்கள் பற்றி நாட்டில் எந்தப் பதிவும் இல்லை. ஒன்றில் அவர்கள் இறந்திருக்கலாம் அல்லது வெளிநாடு சென்றிருக்கலாம். இவ்வாறு நல்லாட்சி அரசு சொல்கிறதே.

**எம்.எஸ்.நித்தி** — **மானிப்பாய்**

**தாய் தந்தையை கவனிக்காமல் கோயிலுக்கு கோடிக்கணக்கில் கொடுத்து ஊர் உலகத்தை ஏமாற்றுபவர்கள் பற்றி?**

தாயை முதியோர் இல்லம் அனுப்புவதற்காக தாயிடமே காரணங்கள் சொல்கிறான் ஒரு மகன். "அம்மா இங்க வீட்டில உனக்கு நேரா நேரத்துக்கு சாப்பாடு கிடைக்காது உன்னைப் பாக்கிறதுக்கு ஆளும் இல்லை. அதவிட நீ பிராக்காக் கதைக்கிறத்துக்கு இங்க ஆக்களும் இல்லை றொகானும், பாணுவும் படிக்கிறத்துக்கே நேரமில்லை. எப்படி உங்களோட இருந்து கதைக்க முடியும். நான் மாசத்தில் இரண்டுதடவை வந்து உங்கள பார்த்திட்டுப் போறேன்" என சிறு குழந்தைக்கு கதை சொல்வது போல் தனது தாய்க்கு கூறினான். குழந்தையைபோல தலை அசைத்து அதை ஆமோதித்தாள் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து தன்மகனைப் பற்றி பல கனவுகளைக் கண்ட அந்தத்தாய்.

**ரகு** — **யாழ்ப்பாணம்**

**காளையை அடக்கினால் தான் தமிழனா?**

தமிழனின் பண்பாடு கலாசாரத்துடன் கலந்த வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு .அதற்கு தடை போட்டு தமிழனை அடக்க நினைப்பவனை எதிர்த்து எம் பழைமைகளை பேண போராடுபவன் தான் தமிழன். காளை அடக்கினால் தான் தமிழன் என்றிருந்தால் வீதிகளில் காளை மாடுகள்தான் திரிந்திருக்கும் தம்பி.

**கனிஸ்ரன்** — **உரும்பிராய்**

**எனக்கு காதல் சரியாக வரமாட்டேன் குதே?**

அப்படியென்றால் உன் வாழ்க்கை பிரகாசமாக அமைவது சர்வ நிச்சயம்.



# கவிதைக் கலசம்

## ஏறு தழுவுதல்

கோடி உணர்வுகள் கூடி
மெரீனா கடற்கரை தனில்வாடி
வாடிவாசல் திறக்க நீதிகோரி
அறவழி வேள்வியாய்
அலையென திரண்டது திராவிடம்
ஜல்லிக்கட்டில் துள்ளிக்கிட்டு
வரும் காளையை
ஏறுதழுவும் விளையாட்டிற்கு
விதித்தது சட்டம் தடை
அதை உடைத்திட தமிழகம் எங்கும்
இணைந்தது இளைஞர்கள் படை...
அடக்கிட வந்தவர்
அரசியல் சாயம்
வெளுத்திடும் வண்ணம்
எழுந்தது தமிழனின் கோசம்
வீழ்ந்திடுவேன் என்று
எண்ணினாயோ
என்று விரைந்தது
பாரதி பலகோடி கூடி
ஏறுதழுவுதல் கலையது
தனிமனிதனின் உணர்வு இது
சங்ககாலத்திலும் நிகழ்வது
அதில் விளைவது எது
வீரத்தமிழன் உயிர்ப்பது
இதில் எங்கு உயிர்ப்பலி நிகழுது...
வாடிவாசல் காத்திருக்கும்
தமிழன் போல்
காளைமாடும் காத்திருக்கு
காதலோடு
வீரத்தமிழன் தன்னை ஏறுதழுவ
எதிர்பார்த்திருக்கு... ஏறு தழுவ

**ஸ்ரீஜோதா**
**மண்டைதீவு**

## ஜல்லிக்கட்டு

தனிமையான புரட்சியிது
தமிழர்தம் உணர்ச்சியிது
தலைவணங்கா புரட்சியிது
தடை தகர்க்கும் முயற்சியிது
எரிமலையின் கொதிப்புயிது
எம் இனத்தின் எழுச்சியிது
வாடிவாசல் திறவாமல்
வாயடைத்து நிற்காது
வீரதீர விளையாட்டை
வீட்டுக்குள் முடக்காது
பாரம்பரிய விளையாட்டை
பட்டிக்குள் அடைக்காது
மரபுவழி விளையாட்டு
மண்டியிடமாட்டாது
தமிழர்தம் விளையாட்டை
தாய்மண் மறக்காது

**இளவரசு**
**ஒட்டுசுட்டான்**

## ஆறுமா ரணங்கள்?

மனிதம் தொலைந்து
மலரும் பொழுதுகள்
பாதைகள் மாறிய
பயணங்கள்
கொடுமையின் பிடியினில்
எரிகின்ற மனங்கள்
நிலையில்லா வாழ்விலே
இன்னும் எத்தனை எத்தனை
வேதனைகள்...
விரக்திகள், பொய்மைகள்
விரட்டிடும்
தொடர்கதைகள்...
எங்கே நல் மனிதமென
உள்ளம் தேட
இங்கே குவலயமோ
நஞ்சுறையும் வஞ்சகரின்
பிடியில் வாட
செய்யும் நிலை தெரியாமல் சில
மனங்கள் வேக
சாத்தான்கள் ஓதும் வேதங்கள்
இங்கே சத்தியவாக்காய்
நிஜமெல்லாம் நீறாகி
நிலைமாறிப் போனால்
கனவாகிப் போகுமோ
தர்மமிங்கே???
கலங்கிடும் மனங்களில்
நிலைக்குமா கண்ணீர்
ஒரு கணமேனும் பொய்மையின்
முகத்திரை கிழிபடும் நேரம்
எரிகின்ற நெஞ்சில்
ஆறுமா ரணங்கள்

**கி.சரண்யா**
**தாவடி**

## இதோ இதுதான்

இதோ இது தான்
என் பாட்டன் வாழ்ந்த பூமி

இதோ இது தான்
என் தந்தை பிறந்த வீடு
வீடு அது இன்று
மண் மேடு

இதோ இது தான்
பசித்தவர்க்கும் பாமரருக்கும்
அள்ளி உணவளித்த
என் பாட்டியின்
அட்சய பாத்திரமாய்
காட்சி தந்த அடுக்களை
அது இன்று இடிந்து
மண் குவிந்து கிடக்கிறது

இதோ இது தான்
நான் ஊஞ்சலாடிய வேப்பமரம்
குண்டுகளால் கதியிழந்து
வெறும் முடமாய் கிடக்கிறது

இதோ இது தான் எம் குலக் கோவில்
ஓ.... அள்ளி அருள் தரும் அன்னை
தன்னந்தனியில் கிடக்கிறாள்.

இதோ இவள் தான்
என் பரம்பரையை
வாழ வைத்த கடல் தாய்
அவள் மடியில் மடிவைத்து
மீனள்ளிய நாள் மறந்தோம்
வெறும் அலையாய்க் கிடக்கிறாள்

ஓ.... இதோ இது தான்
முட்கம்பி வேலி
உயர் பாதுகாப்பு வலயம் என்று
என் அடுத்த பரம்பரையையும்
அகதி பரம்பரையாக்கிய நாசகார வேலி

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்- 338



## எதிர்காலம்

கை பிடித்த விரல்
கரம் நழுவிப் போகாது
பின் பார்த்து ஏங்கும்
பிள்ளை நீ யாரோ
பசு பின் செல்லும்
கன்று போல
தாய் பின் செல்லும்
பிள்ளை நீ
பசியுற்று இருந்தாலும்
கன்றுக்கு பாலூட்டும் பசு
அன்னையவளும் அப்படி
உன்னைக் காப்பாள்
உள்ளத்தின் ஏக்கம்
பார்வையில் தெரிய
உறவுகள் யாவும்
உன்னை அறிய
உறுதியோடு நடை போடு
உருவாகும் நல்ல
எதிர்காலம்

*சி.திவ்வியா*
*யா/ப.மெ.ம.வி.*

## பாதுகாப்பு

பெத்த தாயின் கரங்களை
பிடித்து நடக்கையில் உள்ள
பாதுகாப்பு உலகில்
எதிலுமே எங்குமே
குழந்தைக்குக் கிடைப்பதில்லை

*சு.ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## சிறுவர் நலன்

முகமறியாதவர்களிடம்
வறுமையின் தாக்குதலாலோ
பாதுகாப்பின் நிமித்தமோ
சிறுவர் சிறுமிகளை
ஒப்படைப்பதென்பது
தப்புக்கள் நடப்பதற்கும்
வாய்ப்புக்கள் அதிகமுண்டு
தாய் தந்தையரை நீங்குவது
அடிப்படை உரிமையின்
ஆணி வேரைத் தகர்ப்பதாகும்
பத்திரிகைகள் சஞ்சிகைகளும்
ஆசிரியர் தலையங்கமும்
நடைபெறும் கொடுமைகளை
வகைப்படுத்திக் கூறும்

*க.நாகராசா*
*நுணாவில்*

## ஏக்கம்

பார்வையில் ஏக்கம்
பிடியில் பற்று
விழிப்படை உன்
சமூகத்தில்
விடியல் வந்தாலும்
ஏழ்மைக்கு விடிவில்லை
அன்னையைப் பற்றிக் கொள்
பாரினில் உன் புகழ்
ஓங்கும் நாளை...

*நெல்லை*
*சுகந்தன்*

## அன்பின் விடியல்

இருண்ட அறையில்
முடங்கிக் கிடந்தேன்
புதிதாய் தோன்றிய
ஒளியைப் பற்றிப் பிடித்தேன்
போன போக்கில்
சற்றே திரும்பினேன்
அதே இருளில்
ஆயிரம் ஈசல்கள்
விடியலின் ஒளிக்காய்
ஏங்கித் துடிக்கின்றன...

*ஸ்.அலைஸ்ரிகா*
*ஊர்காவற்றுறை*

## அன்பே கடவுள்

புகைப்படக் காட்சியாக
இல்லாவிட்டாலும்
தத்ரூபமாகிய ஓவியப் படக்காட்சியில்
ஓர் குழந்தையின் ஏக்கப் பார்வை!
தத்தெடுத்து செல்பவரின் கைபிடித்து
நடந்தாலும் பய உணர்வின்
பிரதிபலிப்பு!
பெற்றோரை இழந்த
அநாதையின் பய உணர்வு
அநாதைக் குழந்தைகளிடம்


*சி.சுகிர்தமலர்*
*உரும்பிராய்*

## அப்பா வருவாரா?

உன்னோடு கூடி விளையாடிய
நண்பர்கள் கூட்டம்
குண்டுகள் துளைத்து
குற்றுயிராய்க் குவிந்து
கிடப்பதை கண்டாயோ!
பண்டிகைக்காலம் தன்னில்
முற்றத்தில் பட்டாசு கொளுத்தி
விளையாடிய நீ உன் வீட்டின் மேல்
பாரிய குண்டு வீழ்ந்து
கூரை எரிவதைக் கண்டாயோ!
நிலாச்சோறு ஊட்டிய பாட்டியின்
கைகள் பாதையில் துண்டாய்ச்
சிதறிக் கிடப்பதைக் கண்டாயோ!

*எளிமைக்கவி றொபின்*
*புன்னாலைக்கட்டுவன்*

# மௌனத்தின் தேடல் -339



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.02.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# காதில் தேன்பாயப் பேசுவோமே!



க.கணேசலிங்கம்

"அறமிதென்றும்
மறமிதென்றும் நாம்
அறிகிலாத போது
தமிழ் இறைவனாரின்
திருக்குறளிலே ஒரு சொல்
இயமபிக் காட்டமாட்டாயா...?"
- பாரதிதாசன்

நாநலம் என்று நாவன்மை பற்றிக் குறிப்பிடும் திருவள்ளுவர், இனிமையான பேச்சு ஒரு சிறந்த அணிகலன் (-95) என்றும சிறப்பித்துக் கூறுபவர் தரமான பேச்சை எவ்வாறு நிகழ்த்தலாம் என தமது குறள் களில் விரிவாக, விபரமாக எடுத்துரைக் கிறார், ஆலோசனை தெரிவிக்கிறார்.

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை (-682), என்று குறிப்பிடும் அவர், அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும் திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை (-635) என்கிறார்.

எப்படிச் சொல்வது என்பது பற்றிக் குறிப்பிடுகையில்,

அவை அறிந்து (-711), திறன் அறிந்து (-644), இடை தெரிந்து- நிலைமையை நன்குணர்ந்து (-712), குறிப்பறிந்து (-696), கடன் அறிந்து- கடமை அறிந்து(-687) வகை அறிந்து - சுவையின் வகை அறிந்து (-721), கேட்டார் பிணிக்கும் - விரும்புமாறு (-643), வேட்பன சொல்லி- பயனுடைய வற்றைச் சொல்லி (-697), வேட்பத்தாம் சொல்லி- விரும்பும்படி சொல்லி (-646), எண் பொருளவாகச் செலச் சொல்லி- எளிய நடையில் சொல்லி (-424), தொகச் சொல்லி, தூவாத நீக்கி- பயனற்றவைகளை நீக்கி (-685), சொல்லவேண்டுமெனக் கூறியவர்.

சொல்லுக சொல்லில் பயனுடைய (-200) என்று குறிப்பிட்டு சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச் சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து (-645) என ஆலோசனை வழங்கியவர், நயன் ஈன்று நன்மை பயக்கும் - நன்மையான பயனைத் தந்து இன்பத்தையும் இவை தரும் (-97) என்று இவற்றின் செயற்பாடுகள் பற்றி விளக்கிக் கூறுகிறார்.

எப்படிப் பேசுவது என்று விபரித்தவர் இன்சொல்லின் சிறப்புப் பற்றிக் கூறு கையில்,

நகை ஈகை இன்சொல் இகழாமை (-953) என வகைப்படுத்தியவர், இன்சொலால் ஈந்தளிக்க வல்லார்க்குத் தன் சொலால் தான் கண்டனைத் திவ்வுலகு (-387), விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப்பெறின் (-648) கொடுத்தலும் இன்சொலும் ஆற் றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும் (-525) என்றும் அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின் (-96), துன்புறூ உம் துவ்வாமை இல்லாகும் யார் மாட்டும் இன்புறூ உம் இன் சொலவர்க்கு -வறுமை எனும் துன்பமில்லை (-94) என்றவர்,

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி
அகத்தானாம் இன்சொலினிதே அறம் (-93)
"அகன் அமர்ந்து ஈதலின் நன்றே
முகம் மலர்ந்து இன்சொலன் ஆகப்பெறின்"
(-92) என்றும் குறிப்பிட்டார்.
"பணிவுடையன் இன்சொலன் ஆதல்
ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற" (-95)

என்று இன்சொல்லினை ஒரு சிறந்த அணிகலன் என அழகுற அலங்கரிக்கிறார்.

"தித்திக்கும் தமிழினில் முத்து முத்தாய் குறள் தந்தவர் திருவள்ளுவர்"... என திரைப்பாடல் ஒன்று பெருமைப்படுத்துகிறது.

"வண்ண வண்ண சொல்லெடுத்து வந்தது செந்தமிழ்ப் பாட்டு,வாசமுள்ள மல்லிகைப்பூ மணம் தந்தது செந்தமிழ்ப் பாட்டு..."

"மெல்லத் திறந்தது கதவு என்னை வா எனச் சொன்னது உறவு..."

"தேனினும் இனிதான மொழி பேசியே சிந்தையைக் கவர்ந்தாயே..."


"கனிவான மொழியால் எனையே கவர்ந்தீரே..."

"தேனூறும் சொல்லாலே தீராத துன்பங்கள் தீர்த்தாய்..."

"அன்பு மொழி பேசிவிட்டால் துன்பநிலை மாறிவிடும்..."

"கற்கண்டு பாகும் கனிரசத்தேனும் கசந்திடும் உன் மொழியாலே..."

"செங்கரும்பாய் இனிக்கும்
சொல்லும் எனை மயக்கிடுதே..."
"பேசும் யாழே பெண்மானே
வீசும் தென்றல் நீதானே..."
"யாழும் குழலும்
உன் மொழி தானோ...?"



"சங்கீதம் பாட்டிலா?
நீ பேசும் பேச்சிலா...?"
"மண் என்றால் நான் மரமாவேன்
மழை என்றால் நான் பயிராவேன்
நீ மொழியானால் நான் பொருளாவேன்..."

"தேன் சுவைத் தமிழ் பேசி, தெம்மாங்கு இசை பாடி, கன்னல் மொழி பேசி, கால மெல்லாம் உறவாடி, இன்பமெல்லாம் கண்டிடலாம்..."

"கனி இதழ் வாய்ச்சொல்லில்
இனிமை வழிந்தோடும் கலை அழகே..."

"நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்

நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும்

சொல் என்றும் மொழி என்றும் பொருளென்றும் இல்லை

சொல்லாத சொல்லுக்கு விலை ஏதுமில்லை..."

"தேன் மணக்கப் பேசி விடுவோம், செந்தமிழில் பாடிடுவோம்..."

"செல்லக்கிளியே மெல்லப் பேசு,
தென்றல் காற்றே மெல்ல வீசு..."
"சிங்காரப் பைங்கிளியே பேசு
தமிழ் செந்தேனை அள்ளி அள்ளி வீசு..."

"அள்ளித் தரும் சர்க்கரைக் கற்கண்டும் அன்புத் தமிழாகுமா...?"

"கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா...?
சொல்லெல்லாம் தூய தமிழ் சொல்லாகுமா?
கன்னித் தமிழ் தந்ததொரு திருவாசகம்
கல்லைக் கனியாக்கும் உந்தன் ஒரு வாசகம்..."

"உன்னிடம் சொல்வதற்கு இன்னும் ஒன்றல்ல நூறிருக்கு,

அதை நீயும் கேட்க நானும் சொல்ல ஏது வாசகம்...?

"அன்புடன் அன்று சொன்ன ஆறுதல் வார்த்தைகளை

தித்திக்கும் தேன் தமிழில் குழைத்து தந்தவர் யார் தென்றலே..."

இன்சொல் பற்றிய குறள்களோடு இத் திரைப்பாடல்கள் இசைந்து, இனிமை சேர்த்து, சுவை கலந்து சுகம் தருகின்றன, இன்புற வைக்கின்றன.

எங்கெங்கு தொட்டாலும் இனிமை, இனிமை...

"இதமான, இங்கிதமான, இனிய வார்த்தைகள வெறும் புளுதி மணலிலிருந்து ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களுக்கு எம்மை அழைத்துச் செல்லும் மகத்தான வல்லமை படைத்தவை" என்கிறார் எம்.றொபேர்ட் சைம் என்பவர்.

"Kind words are vechiles that can transport is from the drat sands to the dazzling stars.

- M.Robert Syme.

இன்றைய நவீன விஞ்ஞானம் மனித மனத்தை அமைதிப்படுத்தக் கூடிய சில சொற்ப அன்பான, இதமான, இனிய வார்த் தைகளைவிட மேலும் சக்திவாய்ந்த ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இன்னமும் ஈடுபட்டுக் கொண்டுதானிருக்கிறது என்கிறார் டக்ளஸ் மியடோர்.

"Modern Science is still trying to produce a tranquilizer more effective than a few kind words."

-Douglas Meador.

"சொல்லானை பொருளானை சுருதியானை..."

"பேசப் பெரிதும் இனியானை..."

"பேசுதற்கு அரும்பெரும் பேற்றை..."

"சொல்லும் பொருளுமாய் நிறைந்த சுகமே..."

"பாலினும் சொல் இனியாய்..."

"சொல்லும் பொருளும் என நடமாடும் பூங்கொடியே..."

"சொற் சுவைதோய் வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்..."

"உள்ளம் நெகிழ்ந்துருகி இத்தூய மனத்தொண்டர்கள் இவ்வாறெல்லாம் சொல்லைக் கையாண்டார்கள், சுகம் கண்டார்கள்,

"கோபத்திலே ஒரு சொல்லில் சிரித்துக் குலுங்கிடச் செய்திடுவான்; மனஸ்தாபத் திலேயொன்று செய்து மகிழ்ச்சி தளிர்த்திட செய்திடுவான்..." என்றார் பாரதியார்.

(கண்ணன் என் தோழன் பாடலில்)

"ஒரு மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஒரு காலத்தில் மகிழ்ச்சியுடன் பயன்பட்டதே ஆகும்" என்கிறார் எமர்சன்.

"இதமான, அன்பான சொற்கள் நம்மை அழகுபடுத்தும் ஆடைகள் போன்றவை" ஏன்கிறார் விக்டர் ஹியூகோ- நாவலாசிரியர்.

"பேச்சுக்கலையே நாகரிகம்" என்றார் தாமஸ் பெய்ன்.

"இரண்டும் இரண்டும் நான்குதான், அதையும் கூட இருமுறை சரிபார்த்துச் சொல்லுங்கள்" என்றொரு ஆலோசனை சொல்கிறார் விட்டன் பேர்க் என்பவர்.

"எனைத்தானும் நல்லவை கேட்க,
அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" (-46) என்பதும் வள்ளுவரது ஆலோசனையாக அமைந்துள்ளது.

"கனியோ பாகோ கற்கண்டோ?
காதில் பாயும் மதுரமொழி..."

"அருமை மொழி காதில் அமுதமாகப் பாய்வதால்
அகமே மகிழ்ந்தேன்..."

"சங்கீதம் பொழிகின்ற மொழியல்லவா,
சந்தோசம் வருகின்ற வழியல்லவோ...?"

"தமிழ் எத்தனை முறை கேட்டாலும் சலிப்பதில்லை..."

என்பதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

"தமிழுக்கும் அமுதென்று பேர்"

"பாய்ந்தெங்கும் பரவட்டும் பைந்தமிழின அமுதோடை,

காய்ந்திருந்த காடெல்லாம் கண்குளிர மலரட்டும்..."

இது எஸ்.டி.சுந்தரம் என்பவரது எதிர்பார்ப்பு.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என விரும்பினார் பாரதியார்.

பேச்சு சிறப்புற, செழிப்புற, செழுமைபெற, சீர்பெற, வளமான, தெளிவான, கருத்துக்களை, ஆலோசனைகளைச் சுவைபட எடுத்துக்கூறி பேச்சுக் கலைக்கு பெருமை சேர்த்த, பெருமைப்படுத்திய வள்ளுவர்

"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான்
அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது" (-647)

என்று உறுதி தொனிக்கும் விதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஊக்கம், உற்சாகம், உத்வேகம், மனோ திடம் (Inspiration) உருவாகும் விதத்தில் அமைந்துள்ள இக்குறள்மூலம் இக்கலைக்கு உயர்ந்த, உன்னதமானதொரு இடத்தினை அவர் அளித்துள்ளதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

# பயந்து பயந்து நடக்கலாம்!

உலகின் மிகவும் ஆபத்தான நடை பாதையைப் பார்க்க வேண்டுமா? ஒரு முறை சீனாவுக்குப் போயிட்டு வாங்க.


சீனாவின் மவுண்ட் ஹுவ்ஷான் மலை யில் இருக்கும் இந்த நடைபாதை, கடல்மட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 7 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள் ளது.

கொஞ்சம் கீழே இடறினாலும், நல்லி எலும்பு மிஞ்சாது. ஒன்றரை அடி அகல மரப் பலகைகளால் அமைந்திருக்கும் இந்த நடைபாதையில் பாறைகளில் கட்டப்பட்டிருக்கும் கயிறுகளின் உதவி யோடும் மரண பயத்தோடும் நடந்து செல்ல வேண்டுமாம்.

ஆண்டு முழுவதும் பல்வேறு நாடுக ளைச் சேர்ந்த சாகசப் பிரியர்கள் இதில் நடந்து சென்று செல்ஃபி எடுத்துக் கொள் கிறார்கள். ஒன்றிரண்டு உயிர்ப்பலிகளும் நிகழ்வதுண்டு!

நாங்க ஏன் நடுராத்திரியில் சுடுகாட்டுக்குப் போகணும்?






# "காளைப் புரட்சி" காக்கி அராஜகம்



தமிழ் நாட்டின் மெரினா போராட்டக் களத்தை உலக வரலாற்றில் முதல் முறையாக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை வந்து செல்லும் திருவிழா கொண்டாட்டமாக மாற்றிய பெருமை தமிழர்களுக்கே சொந்தம். சில நிமிடங்களில் அதைப் போர்க்களமாக மாற்றிய சாதனை தமிழக பொலிஸாருக்குச் சொந்தம்.

முந்தின நாள் இரவு வரை தங்களோடு அமர்ந்து சிரித்துப்பேசி உணவைப் பகிர்ந்துகொண்ட காக்கிகளே, விடிந்ததும் லத்திகளோடு வந்து அராஜகம் நிகழ்த்துவார்கள் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆறு நாட்களாக அமைதியாக இருந்த மெரினா கடற்கரையில் 7-வது நாள் (23ஆம் திகதி) அதிகாலை 4 மணிக்கு பீதி தொற்றிக் கொண்டது. திடீரென்று பொலிஸார் குவிக்கப்பட்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மெரினா கடற்கரைக்கு வந்து சேரும் அத்தனை சாலைகளிலும் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இவ்வழியாக போராட்டக்களத்துக்கு வந்தோரையும் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர்.

காலை 5 மணிக்கு விவேகானந்தர் இல்லம் அருகே இருந்த இளைஞர்களைச் சுற்றி வளைத்து பொலிஸார் நின்றனர். அவசரச் சட்டம் குறித்த அறிக்கை அங்கிருந்த இளைஞர்களிடம் கொடுக்கப்பட்டது. அதில், அரசு முத்திரையோ, ஆளுநர் கையெழுத்தோ இல்லாததால் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று எதிர்ப்புக் குரல் கிளம்பியது.

அதே நேரத்தில், மயிலாப்பூர் பொலிஸ் துணை கமிஷனர் பாலகிருஷ்ணன் அங்கிருந்த இளைஞர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். திறந்த வானில் ஏறி நின்று மைக் பிடித்த அவர், "ஜல்லிக்கட்டு நடத்த இருந்த தடை நீங்கிவிட்டது. உங்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டது.

இதற்கு மேல் இங்கே அமர உங்களுக்கு அனுமதி இல்லை. நீங்களே கலைந்து செல்லலாம். அவசரச் சட்டம் குறித்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். அங்கிருந்த இளைஞர்கள், "எங்கள் சட்டத்தரணிகளுடன் இதுபற்றிப் பேச வேண்டும். மதியம் வரை அவகாசம் வேண்டும்" என்றனர். பொலிஸ் மறுத்தது. "2 மணி நேரம் அனுமதி கொடுங்கள்" என்றனர். ஆனால், பொலிஸார், "அதற்கெல்லாம் அனுமதி இல்லை. உடனே கிளம்புங்கள்" என்று எச்சரித்தனர்.

பிறகு கூட்டத்துக்குள் புகுந்த பொலிஸார், ஒவ்வொருவரையும் கூட்டத்தைவிட்டு வெளியே இழுத்து அப்புறப்படுத்தினர். முரண்டு பிடித்தவர்கள் தூக்கி எறியப்பட்டனர். கர்ப்பிணி பெண் ஒருவரின் தலைமுடியைப் பிடித்து இழுத்துத் தாக்கினர். கீழே விழுந்த அந்தப் பெண்ணின் வயிற்றில் பொலிஸார் மிதித்தனர். வேண்டாம். விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சிய செய்தியாளரைப் பார்த்து, "இங்கிருந்து நீங்கள் ஓடிவிடுங்கள். இல்லையென்றால், உங்களுக்கும் இதே கதிதான்" என்று பொலிஸார் மிரட்டினர்.

இளம்பெண்களிடம் பொலிஸார் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டனர். பெண்களைப் பிடித்து இழுத்து வெளியேற்றினர். பொலிஸாரின் தாக்குதலில், பல இளைஞர்களுக்கு கால் உடைபட்டது. போராட்டத்தின் மையப் பகுதியாக இருந்த விவேகானந்தர் இல்லம் பகுதி முழுவதும், ஒரு மணி நேரத்துக்குள் தடாலடியாக பொலிஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

பொலிஸாரின் அடக்குமுறையைத் தொடர்ந்து, நாலாபுறமும் இளைஞர்கள் சிதறி ஓடினர். அவர்களில் ஒரு பகுதியினர், காலை 7.30 மணி அளவில் கடலுக்குள் இறங்கி மனிதச் சங்கிலி அமைத்து கோஷங்கள் எழுப்பினர்.

பட்டினப்பாக்கம் கடற்கரை வழியாகவும், அண்ணா சமாதிக்கு பின்புறம் உள்ள வழியாகவும், படகுகள் மூலம் கடல் வழியாகவும் போராட்டக் களத்துக்கு இளைஞர்கள் வந்தனர். அவர்கள், கறுப்புக் கொடிகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். அருகிலிருந்த மீனவக் குப்பங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு உதவிக்கு வந்தனர்.

இதைத் தொடர்ந்து மீனவக் குப்பங்களில் பல இடங்களில் பொலிஸ் தாக்குதல் நடத்த, இதை எதிர்த்து மீனவர்கள் குரல் கொடுக்க... பீதி இன்னும் எகிறியது.


இன்னொரு பக்கம் விவேகானந்தர் இல்லம், பெசன்ட் சாலை, அவ்வை சண்முகம் சாலை பகுதிகளில் திரண்டிருந்த இளைஞர்களை பொலிஸார் விரட்டிச் சென்றனர். அப்போது பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கும் இடையே திடீர் மோதல் ஏற்பட்டது. கல் வீசி ஒருவரை ஒருவர் தாக்கினர். இளைஞர்கள்மீது பொலிஸார் 5 முறை கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர்.

அவ்வை சண்முகம் சாலை, அன்னிபெசன்ட் சாலைப் பகுதிகளில் குவிக்கப்பட்ட பொலிஸார் தெருத்தெருவாகப் புகுந்து கறுப்புச் சட்டை, பனியன் அணிந்திருந்த இளைஞர்கள், இளம் பெண்களை விரட்டி விரட்டி அடித்தனர். ஜல்லிக்கட்டு வாசகத்தோடு அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு சக்கர வாகனங்கள், கார்களை பொலிஸார் அடித்து நொறுக்கினர். இதற்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மெரினாவில் பொலிஸாரின் தாக்குதல் தொடர்பான செய்திகள் வெளியானவுடன், சென்னை மாநகரில் ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள் ஆங்காங்கே சாலை மறியலில் ஈடுபட்டனர். சென்னை மாநகரமே முடங்கிப்போயிருக்க, பலரும் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தாலும், கடலுக்குள் நின்ற இளைஞர்கள் கலைந்து போகவில்லை.

கடைசி முயற்சியாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி அரி பரந்தாமன் சென்று ஜல்லிக்கட்டு சட்டம், நிரந்தர சட்டமாகிவிடும் என விளக்கினார். அதேநேரத்தில் சட்டசபையில் ஜல்லிக்கட்டுக்கு நிரந்தர சட்டமும் நிறைவேற்றப்பட, இயக்குநர் கௌதமன் அந்தக் காட்சிகளைப் பார்த்துவிட்டு நேரில் வந்து விளக்கினார். இதைத் தொடர்ந்து இளைஞர்கள் கலைந்து சென்றனர்.

– ஜூனியர் விகடன்











# காணாமற்போனவர்கள் எங்கே?







காணாமற்போன தமது உறவினர்களை மீட்டுத் தரக்கோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகளுக்கு மீண்டுமொரு முறை அரசு வாக்குறுதி யளித்து போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளது.

வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரையிலான உண்ணா விரதப் போராட்டம் பலரின் ஆதரவுடன் அரசிற்கு பாரிய நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் அமைந்திருந்தது.

வவுனியாவில் நடந்த இப்போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆலயச் சூழலில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.அதேவேளை முல்லைத்தீவிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமற்போனவர்களின் உறவினர்களால் வடக்கு-கிழக்கில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் ( 2009.05.18 –2017.01.26 ) பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மகிந்த ஆட்சிக்காலத்தில் ஐ.நா. ஆணையாளர், சர்வதேச நாடுகளின் தலைவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்த போதும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் பல முன்னெடுகப்பட்டன.

ஆனால், அரச தரப்பால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளோ? வாககுறுதிகளோ? வழங்கப்படவில்லை. மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பல போராட்டங்கள் காணாமற்போனவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக அண்மையில் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டு நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்த . உண்ணாவிரதப் போராட்டம் கடந்த 26 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே இந்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்தப் போராட்டத்தை அரசு தலையிட்டு முடிவுக்கு கொண்டு வருவதற்கான அதுவும் ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த அமைச்சர் தலையிட்டு முடிவுக்கு கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணம் நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காணாமற்போனவர்கள தொடர்பாகக் கூறிய பொறுப்பற்ற பதிலே ஆகும்.

காணாமற்போனவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இலங்கையில் இல்லை என்றும் அவர்களை நாட்டிற்குள் புதிதாகத் தேடிப் பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை என்றும் அவர்கள் வெளிநாட்டிற்கு சென்றிருக்கலாம் என்றும் பிரதமர் ரணில் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில், நாடாளுமன்றத்தில் (25.01.2017) இவ்வாறு பொறுபற்ற விதத்தில் கூறியதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் யாழில் கடந்த 26 ஆம் திகதி நடந்த நிகழ்வில் கண்டனம் வெளியிடும் வகையில் கருத்துரைத்த அதேவேளை காணாமற்போனவர்கள் தொடர்பாக பொறுப்பற்ற பதில்கள் எமக்குத் தேவையில்லை. காணாமற்போனவர்களைக் கண்டறிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் யாழில் காலையில் நடந்த நிகழ்வில் முன்வைத்த கருத்துக்களை ஏற்றால்போல் அன்று மாலையில் அமைச்சர் ருவான் விஜயவர்த்தன காணாமற்போனவர்களின் உறவினர்கள் முன்னெடுத்த சாகும் வரையிலான போராட்ட இடத்திற்கு சென்று அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.

ஐ.தே.கவின் தலைவரான பிரதமர் ரணில், காணாமற்போனவர்கள் தொடர்பாக கூறிய பொறுப்பற்ற கருத்துக்களுக்கு வடக்கில் முதலமைச்சர் மட்டும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை, காணாமற்போனவர்களை மீட்டுத் தரக்கோரி போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் கண்டனங்களை முன்வைத்தனர்.

ஐ.தே.க. மீதும் அரசு மீதும் பழி வந்துவிடக்கூடாது என்பதற்காகவும் ரணில் கூறிய கருத்துக்கள் பாரிய பிரச்சினையை தோற்றுவிப்பதற்கு முன்னரே முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்ற நோக்கிலுமே அரசு உண்ணா விரதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர முற்பட்டது.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி அலரி மாளிகையில் உயர்மட்ட சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருவதாக எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதியையடுத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை காணாமற்போனவர்களின உறவினர்கள் முடிவுக்கு கொண்டு வந்தனர்.

காணாமற்போனவர்களை மீட்டுத் தருவோம் என்று அமைச்சா ருவான் எழுத்து மூலம் வாக்குறுதி வழங்கியிருந்தால் நல்லாட்சி அரசிற்கும் ரணில் தலைமையிலான ஐ.தே.கவுக்கும் பெருமையைச் சேர்த்திருக்கும். ஆனால் அவ்வாறு வாக்குறுதி வழங்க அமைச்சர் ருவான் முன்வரவில்லை.

தமிழ் மக்களின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க முற்பட்டுள்ளது வரவேற்க வேண்டிய விடயமாகவிருந்தாலும் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் வகையில் பிரதமர் ரணில் உட்பட பல அமைச்சர்கள் பேசி வருவதை ஏற்க முடியாது.

மகிந்த காலத்தில் நடந்த ஊழல் மோசடிகளை விசாரித்து அரசியல் ரீதியாக நெருக்கடிகளைக் கொடுத்தாலும் இனப்படுகொலையை முன்னெடுத்த கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகக் கருத்துக்கூட வெளியிட மறுப்பு தெரிவிப்பது தமிழர்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

அதுமட்டுமன்றி தமிழர் நலன் சார்ந்த உரிமைசார் நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் நீதியை நிலைநாட்டுவதிலும் நல்லாட்சி அரசு என்று கூறும் இந்த அரசும் எந்தவித நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

காணாமற்போனவர்கள் விவகாரம், சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் என்பன தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினை என்பதை சிங்கள அரசு உணர்ந்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழினத்தின் நீண்டகாலக் கோரிக்கையாக அமைந்துள்ளது.

**எஸ்.ஆர்.கரன்**

# உலகு சந்திக்கப் போகும் சவால்கள்



**பிரதமர் அல்லது ஜனாதிபதி, தான் நினைத்ததை எல்லாம் செய்துவிட முடியாது. பெரும்பான்மை வாக்குகள் பெற்ற ஒருவர் சர்வாதிகாரியாக மாறிவிடமாட்டார். ஆனால், இன்று பல ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தை இப்படித்தான் புரிந்துவைத்திருக்கின்றனர்.**

டொனால்ட்ட்ரம்பின் வருகையோடு பிறந்திருக் கிறது 2017. சர்வதேச அரசியல் எந்தப் பாதையை நோக்கிச் செல்கிறது என்பதற்கு ட்ரம்பின் வருகை மிக முக்கியமான குறியீடு. 2017 ஆம் ஆண்டில் உலகம் மிக முக்கியமான பல பிரச்சினைகளைச் சந்திக்க இருக்கிறது. எதிர் காலம் என்பது இறந்த காலத்தின் தொடர்ச்சியே என்பதால், சென்ற ஆண்டின் தீர்க்கப்படாத பிரச்சி னைகள் அனைத் தும் இந்த ஆண்டு மேலும் பலம்பெற்று, நம்மை அச்சுறுததும். இந்த அச்சுறுத்தலைப் போக்க் என்ன வழி?

### போரும்... சமாதானமும்...

'வரலாறு காணாத கொடூர தாக்குதல்கள் சிரியாவின் மீது நடத்தப்பட்டுள்ளன' என ஒப்புக்கொள கிறது ஐ.நா. சபை. சிரியாவின் மிகப்பெரிய நகரம் அலெப்போ முற்றிலும் சீரழிக்கப்பட்டுள்ளது. "தி எக்கனாமிஸ்ட்" குறிப்பிடுவதைப் போல் அழிக்கப் பட்டதன் மூலம் பிரபலம் அடைந்த ஒரு பிரதேசமாக அலெப்போ இன்று மாறியிருக்கிறது. கிட்டத தட்ட நான்கு இலட்சம் பேர் கொல்லப்பட்டிருக்கிறார கள். ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப் பட்டிருக்கிறார்கள், காணாமல் போயிருக்கிறார் கள். மனிதர்களோடு சேர்ந்து ஆயிரம் ஆண்டு கால இஸ்லாமியப் பாரம்பரியமும் அழிக்கப்பட் டுள்ளது. பாடசாலைகள், வைத்தியசாலைகள், வழி பாட்டு இடங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டுள்ளன.

ஏன் இந்த அழிவு ஏற்பட்டது? எதற்காக ஆயிரக் கணக்கானவர்கள் இறக்க வேண்டும்? இதற்குக் காரணம் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதமா அல்லது ஆளும் ஆசாத் அரசாங்கமா அல்லது அவர்களுக்கு உதவுவதாகச் சொல்லி போர் விமானங்களை அனுப்பி, மேலும் அழிவைத் துரிதப்படுத்திய ரஷ்யாவா, அல்லது மூவருமா? இந்தக் கேளவிகளைச் சற்றே ஒதுக்கிவைத்து விட்டு ஓர் அடிப்படை உண்மையை ஒப்புக்கொளவோம். சிரியா, நம் கண் முன்னால் அழிந்திருக்கிறது. நம் கண் முன்னால் அலன் குர்தியின் குழந்தை உடலை, கடல் அலைகள் கொண்டு வந்து தள்ளியிருக்கின்றன. நம் கண் முன்னால் ஒரு தேசம் அழிந்திருக்கிறது.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து சிரியாவை ஏமாற்றியிருக்கிறோம். 2016 ஆம் ஆண்டு நமக்குப் போதித்திருக்கும் அச்சுறுத்தும் உண்மை இதுதான். உலகம் மூர்க்கமானது. எப்போதும், எங்கும் போர் மூளலாம். கழுத்தை அறுத்துக் கொல்லும் ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற பயங்கரவாதிகள் மட்டும் அல்ல, ஜனநாயகத்தை உயர்த்திப் பிடிகரும் அரசாங்கங்களாலும் அப்பாவி மக்களைப் பாரபட்சம் இன்றி கொல்லமுடியும் என்பதை அலெப்போ நிரூபித்திருக்கிறது. மேற்கத்திய நாடுகள் மேலா னவை, ஜனநாயகம், மனித உரிமைகள் போன்ற மாண்புகளை உயர்த்திப் பிடிப்பவை எனும் நம்பிக்கையை அலெப்போ உடைத்து எறிந்திருக் கிறது. அலெப்போவின் அழிவுக்குக் காரணம் 'நமக்கு என்ன?' என்னும் மனநிலை. 'எங்கோ, யாருக்கோ நடைபெறும் அநீதி என்னையும் என் குடும்பத்தையும் பாதிக்காது' என்னும் சமாதானம். இந்தச் சமாதானம் போரையும் அழிவையும்தான் ஏற்படுத்தும் என்பதை 2016 ஆம் ஆண்டு உணர்த் துகிறது. இந்த மன நிலையை இந்த ஆண்டாவது உதறித்தள்ள முடியுமா?

### பெருகும் வேலிகள்

அமெரிக்காவுக்கு மட்டும் அல்ல உலகத்துக்கே ட்ரம்பின் வெற்றி என்பது சுயநலத்தின் வெற்றி. நான் ஏன் மற்றவர்களுக்காகப் பாரம் சுமக்க வேண்டும் என்னும் சலிப்பின் வெற்றி. என் வளம், என் நாடு, என் எல்லை என்னும் தேசியப் பெருமிதத்தின் வெற்றியும்கூட.

ஐரோப்பிய யூனியனிடம் இருந்து துண்டித்துக் கொண்டதன் மூலம் பிரிட்டன் தெரிவித்திருக்கும் செய்தி, ட்ரம்பின் செய்தியோடு ஒன்றிப்போகிறது. 'உங்களுக்கு இலாபம் கிடைக்காத எந்தக் கூட்டமைப்பிலும் நீங்கள் அங்கம்வகிக்கத் தேவையில்லை. மற்றவர்களுடன் உங்கள் செல்வத்தைப் பகிர வேண்டிய அவசியம் இல்லை.' "உலகமே ஒரு கிராமம்" என்பது உலகமயமாக்கலின் முழக்கம் என்றால், பிரெக்ஸிட்டின் முழக்கம் அதற்கு நேர் எதிரானதாக இருக்கிறது. அரசியல்வாதிகள் மட்டும் அல்ல, மக்களில் ஒரு பெரும் பகுதியினரும் கூட நாம் நன்றாக இருந்தால் போதும் எனும் மன நிலையைத் தழுவிக்கொண்டதையே பிரெக்ஸிட் உணர்த்துகிறது. இந்த உணர்வை அரசியல் ஆதாயங்களுக்காக அரசியல்வாதிகள் மேலும் வளர்த்து எடுப்பார்கள். பிரெக்ஸிட் மொடலை நாமும் பின்பற்றுவோம் என மற்ற நாடுகளும் யோசிக்கும். புத்தாண்டின் ஆகப் பெரிய சவால் இதுதான். நாம் மேலும் மேலும் வேலிகளை உருவாக்கிக்கொண்டே போகப்போகிறோமா அல்லது பாலங்கள் அமைக்கப்போகிறோமா?

### அதிகாரமும்... அலட்சியமும்...

அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா என பல இடங்க ளில் வலதுசாரிகள் பலம்பெற்றுவிட்டனர். ஈராக்கில் முதலாளித்துவம் நிலைபெற்றுவிட்டது. ரஷ்யாவில் இருப்பது ஒரு வகையான கேங்ஸ்டர முதலாளித்துவம். மத்திய ஆசியாவில் உள்ள ஜனாதிபதிகள் எல் லாம் கிட்டத்தட்ட வாழ்நாள் ஆட்சியாளர்களாக நிரந் தரமாக நாற்காலியில் அமர்ந்திருக்கின்றனர். முடி யாட்சி, நிலப்பிரபுத்துவச் சிந்தனையுடன் அலட்சி யமாகச் செயற்பட்டும் ஆட்சியாளர்களின் எண்ணி க்கை அதிகரித்து வருகிறது. ஜனநாயக உணர்வுகளுக்கும் லிபரல் சிந்தனைகளுக்குமான வெளி முன்னெப்போதைக் காட்டிலும் இப்போது குறைந்து வருகிறது. ஜனநாயகம் என்பதற்கான பொருளே இன்று முற்றிலுமாகத் திரிந்துவிட்டது. பாகிஸ்தானும் ஈராக்கும் ஆப் கானிஸ்தானும் சிரியாவும் ஜனநாயக, குடியரசு நாடுகள் என்றுதான் தங்களை அறிவித்துக் கொள்கின்றன. டொனால்ட் ட்ரம்ப் ஜனநாயகம் தேர்ந் தெடுத்த ஓர் ஜனாதிபதி. ஜனநாயக முறையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படிதான் பிரெக்ஸிட் நடைபெற்றிருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் உள்ளவர்கள் கூடிப் பேசி விவாதித்துதான் இன்னொரு ஜனநாயக நாட்டின் மீது குண்டுகளைப் போடுகிறார்கள். எனில், ஜனநாயகம் என்பதன் பொருளை இவர்கள் எவ்வாறு அர்த்தப்படுத்துகிறார்கள், மக்க ளாட்சி என்பதை இவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள்... இந்தக் கேள்விகளுக்கு இந்த ஆண்டாவது நாம் தெளிவான விடைகளைக் கண்டறிய வேண்டும்.

மக்களால் தோந்தெடுக்கப்பட்டவர் என்பதாலேயே ஒரு பிரதமர் அல்லது ஜனாதிபதி தான் நினைத்ததை எல்லாம் செய்து விட முடியாது. பெரும்பான்மை வாக்குகள் பெற்ற ஒருவர் சர்வாதிகாரியாக மாறிவிடமாட்டார். ஆனால் இன்று பல ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தை இப்படித்தான் புரிந்து வைத்திருக்கின்றனர்.

என்ன வேண்டுமானாலும் செய்வதற்கான அதிகாரத்தை, தேர்தல் வெற்றி உங்களுக்கு அளித்து விடவில்லை என்பதை, ஆட்சியாளர்களுக்கு மக்கள் அழுத்தமாக உணர்த்த வேண்டும். அதற்கு ஒரு வழிதான் இருக்கிறது. போராடுவதற்கான வலுவை வளர்த்துக்கொள்வது.

### அதிகரிக்கும் வெறுப்பு அரசியல்

ட்ரம்பின் வெற்றியைத் தொடர்ந்து அமெரிக்காவில் இன, நிற, வர்க்கப் பாகுபாடுகள் மேலும் கூர்மையடையும் என அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். அதற்கான தெளிவான அறிகுறிகள் செனற ஆண்டு இறுதியிலேயே தெரிந்துவிட்டன. அமெரிக்காவில் மட்டும் அல்ல பிரான்ஸ், ஜேரமனி, ரஷ்யா, சீனா, இந்தியா... போன்ற பல நாடுகளிலும் பாகுபாடுகள் அதிகரித்துவருகின் றன. இங்கு உள்ள அரசாங்கங்கள் அனைத்தும் பெரும்பான்மை மக்களின் அரசாங்கமாகச் செயற்பட்டுவருவதும், இந்த நிலை ஏற்பட்டதற்கு ஒரு காரணம். சமூகத்தில் நிலவும் பாகுபாடுகளை அகற்றுவதற்குப் பதிலாக அவற்றை மேலும் வளர்த்து எடுத்து அரசியல் ஆதாயம் அடைந்துவருகிறார்கள் அரசியல் தலைவர்கள். டொனால்ட் ட்ரம்ப் ஓர் உதாரணம் மட்டுமே. தங்களுடைய வெற்றிக்கு அவர்கள் வெறுப்பு அரசியலை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாதிப்பு எப்போதும்போல் மக்களுக்குத்தான். இந்த நிலை மாற, பெரும்பான்மை வாதத்தையும் வெறுப்பு அரசியலையும் முறியடிப்பதற்கான வழிமுறைகளை நாம் உடனடியாகக் கண்டறிய வேண்டும்!

ஜூனியர் விகடன்



# வயதானாலும் இங்தான் யுவராஜ்சிங்

"நான் திரும்ப வருவேனான்னு தெரியாது. சிகிச்சைக்குப் பிறகு எப்படி என் உடல்நிலை இருக்கும்னும் தெரியாது. ஒருவேளை நான் உயிரோடு வந்தால், நிச்சயம் இந்தியாவுக்காக ஆடுவேன். என் கிரிக்கெட் வாழ்வை ஒரு நோய் முடிவுக்குக் கொண்டுவரக் கூடாது" - 2011 ஆம் ஆண்டு நுரையீரல் புற்றுநோய் சிகிச்சைக்கு முன்பாக யுவராஜ் சிங், சச்சின் டெண்டுல்கருக்கு அனுப்பிய எஸ்.எம்.எஸ் இது.

2011 ஆம் ஆண்டு உலகக்கோப்பையை இந்தியா வெல்லக் காரணமாக இருந்து, தொடர் நாயகன் விருது வென்று, கிரிக்கெட் வாழ்க்கையில் உச்சக்கட்ட போர்மில் இருந்தபோதுதான் யுவராஜ் சிங்கைப் புற்று நோய் தாக்கியது. "சாவில் இருந்து காப்பாற்றி விடலாம். ஆனால், திரும்ப கிரிக்கெட் விளையாட முடியுமா? என்பது சந்தேகம்தான" என்றார்கள் வைத்தியர்கள்.

ஆனால், யுவராஜ் சிங் 150 ஓட்டங்கள் குவித்து மீண்டும் இங்கிலாந்து அணியை நொறுக்கியிருக்கிறார். 21 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் எனத் தெறிக்கவிட்டிருக்கிறார். 3 மணி நேரம், 40 ஓவர்கள் களத்தில் நின்று அதகளம் செய்திருக்கிறார். 2011 ஆம் ஆண்டு உலகக்கோப்பையில் மேற்கு இந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக, சென்னையில் அடித்த சதத்துக்குப் பிறகு, யுவராஜ் சிங் அடித்திருக்கும் முதல் சதம் இது. மீண்டும் சதம் அடிக்க அவர் எடுத்துக் கொண்ட நாட்கள் மொத்தம் 2,133.

இந்த நாட்களுக்கு இடையில் யுவராஜ் சிங் எடுத்துக்கொண்ட சிகிச்சைகளும் பயிற்சிகளும் ரஞ்சி கோப்பை ஆட்டங்களும் சந்தித்த அவமானங்களும் கொஞ்ச நஞ்சம் அல்ல.

யுவராஜ் சிங்குக்கு இது மூன்றாவது கம்பாக். புற்றுநோய்ச் சிகிச்சைகள் முடிந்து ஒரே ஆண்டில் மீண்டும் இந்திய அணிக்குள் வந்தார் யுவராஜ். சென்னையில் நியூசிலாந்துககு எதிராக நடைபெற்ற இருபது-20 போட்டிதான் சிகிச்சைக்குப் பிறகு யுவராஜ் சிங் ஆடிய முதல் போட்டி.

26 பந்துகளில் 34 ஓட்டங்கள் குவித்தார். இரண்டு சிக்ஸர்கள் தெறித்தன. ஆனால் அடுத்தடுத்த பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான போட்டிகளில் யுவராஜால் சரியாக ஆட முடியவில்லை. உலகக் கோப்பையைப் பெற்றுத்தந்த நாயகன், இரண்டே மாதங்களில் அணியில் இருந்து தூக்கியடிக்கப்பட்டார்.

இப்படி ஒரு நிலை தனக்கு ஏற்படும் என யுவராஜ் சிங் கொஞ்சமும் நினைக்கவில்லை. ஆனால், சோர்ந்துவிடவில்லை, கலங்கி விடவில்லை. டோனியின் பழிவாங்கல், தேர்வாளர்களின் சதி என எந்த ஆவேசப் பேட்டியும் புலம்பலும், யுவராஜ் சிங்கிடம் இருந்து வரவில்லை. மாறாகத் தொடக்கத்தில் இருந்து ஆரம்பித்தார் யுவராஜ்.

20 வயது இளைஞனாக இந்திய அணிக்குள் முதல்முறையாக நுழைய எந்த அளவுக்குக் கடுமையாக உள்ளூர் போட்டிகளில் விளையாடினாரோ, அதேபோல விளையாட ஆரம்பித்தார். ரஞ்சி கோப்பை, இரானி கோப்பை, துலீப் டிராஃபி என ஓர் உள்ளூர் போட்டிகளைக்கூட விடவில்லை. காரணம், அவர் கிரிக்கெட் மீது வைத்திருந்த தீராக்காதல்.

36 வயதான ஒரு கிரிக்கெட் வீரர் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்தியாவின் ஒருநாள் அணிக்குள் வந்து, அதுவும் இரண்டாவது போட்டியிலேயே 150 ஓட்டங்கள் அடிப்பது என்பது எல்லாம் கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாத சாதனை. சிலர் பிட்னஸ்ஸை இழப்பார்கள், சிலர் காயம் அடைந்துவிடுவார்கள், சிலர் ஒதுங்கி விடுவார்கள், சிலர் ஒதுக்கப்படுவார்கள். ஆனால், ஒதுக்கவே முடியாத மனிதனாக மீண்டுவந்திருப்பதில்தான் யுவராஜ் சிங்கின் சாதனை இருக்கிறது.

கடந்த ஆண்டு பஞ்சாப் அணிக்காக ரஞ்சி கோப்பை போட்டிகளில் ஆடிய யுவராஜ் சிங், ஐந்து டெஸ்ட் போட்டிகளில் 672 ஓட்டங்கள் குவித்தார். இதில் பரோடாவுக்கு எதிரான ஆட்டத்தில் 260 ஓட்டங்கள். கிட்டத்தட்ட 8 மணி நேரம், இரண்டு நாட்கள் களத்தில் நின்றவர் 26 பவுண்டரிகள், நான்கு சிக்ஸர்கள் வெளுத்தார். அணியில் நிச்சயம் இடம் கிடைக்கும் என நினைத்தார் யுவராஜ்.


ஆனால், "உள்ளூர் பந்துவீச்சாளர்களைச் சந்திப்பது ஈஸி. அவர்களின் பந்துகளில் சிக்ஸர் அடிப்பது ஒன்றும் சிரமம் இல்லை. சர்வதேசப் போட்டிகளில் வேகப்பந்து வீச்சாளர்களை சந்திக்கத் திணறுவார் யுவராஜ்" எனக் கேலிப் பேச்சோடு யுவராஜ் சிங் புறக்கணிக்கப்பட்டார்.

ஆனால், அவர் சோர்வடையவில்லை. ஹரியானா மாநிலத்தில் லாலி கிரிக்கெட் மைதானத்தில், வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான மைதானத்தில் 177 ஓட்டங்கள் குவித்தார். மத்திய பிரதேச அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஈஷ்வர் பாண்டே எட்டு விக்கெட்டுக்கள் கைப்பற்றிய இந்தப் போட்டியில்தான், யுவராஜ் சிங்கின் பவுண்டரிகள் நான்கு பக்கங்களிலும் சிதறின. இரண்டாவது இன்னிங்ஸிலும் 76 ஓட்டங்கள் அடித்து பஞ்சாப் அணியை வெற்றிபெற வைத்தார் யுவராஜ். ஒட்டுமொத்தத் தேர்வாளர்களின் பார்வையும் யுவராஜ் சிங்கின் மீது திரும்பியது. தவிர்க்கவே முடியாத வீரராக உயர்ந்து நின்றார் யுவராஜ் சிங்.

"கோலியின் யுகம் ஆரம்பமாகியிருக்கிறது. இளம் தலைவர் வழிநடத்தப்போகும் அணியில், எதற்காக ஒரு சீனியர் வீரரை மீண்டும் கொண்டுவருகிறீர்கள்?" என இந்தியக் கிரிக்கெட் தேர்வுக்குழு தலைவர் எம்.எஸ்.கே பிரசாத்திடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

"இவ்வளவு நாட்களாக நாங்கள் யுவராஜ் சிங் நீளமான இன்னிங்ஸ் ஆட மாட்டார். அவர் உடல் ஒத்துழைக்காது என்றே நினைத்தோம். ஆனால், 260, 177 ஓட்டங்கள் என எங்கள் எண்ணத்தைப் அவர் பொய்யாக்கி விட்டார். அவருக்கு இந்திய அணியில் இடம்பிடிப்பதற்கான அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன" என்றார் பிரசாத்.

ஆமாம், பாவம் பார்த்து, ஏதோ போனால் போகட்டும் என, மீண்டும் வாய்ப்பு கொடுத்தால் என்ன செய்கிறார் எனப் பார்ப்போமே என, கொடுக்கப்பட்ட வாய்ப்பு அல்ல யுவராஜ் சிங்குக்குக் கொடுக்கப்பட்டது. மீண்டும் வாழ்வா... சாவா... போராட்டம்தான்.




தேர்வாளர்கள் நம்பிக்கை வைத்தது போலவே தன் வாழ்நாளின் அதிகபட்ச ஸ்கோராக, நீளமான இன்னிங்ஸாக 150 ஓட்டங்கள் என்னும் மைல்ஸ்டோனை எட்டியிருக்கிறார் யுவராஜ்.

"கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஜெர்ஸியுடன்மீண்டும்களம்இறங்கினேன். மைதானத்தில் காலை வைத்ததும் என் கண்கள் கண்ணீரால் நிரம்பின. உணர்ச்சிவசப்பட்டு உணர்வுகளற்று நின்ற அந்த நேரத்தில், எந்த ரி.வி, கமராவும் க்ளோஸ்அப்பில் என் முகத்தைக் காட்ட முயற்சிக்காததற்கு என் மனமார்ந்த நன்றி' என்றார் யுவராஜ் சிங்.

"2011 ஆம் ஆண்டு உலகக்கோப்பையில் தொடர் நாயகன் விருது வென்ற நான், 2015 ஆம் ஆண்டு உலகக்கோப்பை அணியில் இல்லை என்பது மிகப்பெரிய வேதனை. என்னால் கிரிக்கெட் இல்லாமல் இருக்க முடியாது. நான் பிட்டாக இருக்கிறேன். என்னால் மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். அதை நிரூபிப்பேன். என் இலக்கு எல்லாம் 2019 ஆம் ஆண்டு உலகக் கோப்பை அணியில், இந்தியாவுக்காக நான் விளையாட வேண்டும். இந்திய அணிக்கு மீண்டும் ஒரு கோப்பையை வென்று தர வேண்டும் என்பதுதான். அதற்காகக் கடுமையாகப் பயிற்சி எடுக்கத் தயாராக இருக்கிறேன். என் ஆட்டம் இனிமேல்தான் உக்கிரமாக இருக்கும்" என்கிறார் யுவராஜ் சிங். கோலியின் படைக்கு தல, தளபதிகள் தேவை. "தல" டோனி இருக்கிறார். தளபதியாக இதோ மீண்டும் வந்துவிட்டார் யுவராஜ் சிங். (க)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: விவசாயி
பாடல்: மருதகாசி
பாடியவர்: ரி. எம். சவுந்தரராஜன்
இசை: கே.வி.மகாதேவன்




கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி
விவசாயி ... விவசாயி ... கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி ... விவசாயி ...

முன்னேற்ற பாதையிலே மனதை வைத்து
முழு மூச்சா அதற்காக தினம் உழைத்து
முன்னேற்ற பாதையிலே மனதை வைத்து
முழு மூச்சா அதற்காக தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ
மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ
வழங்கும் குணம் உடையோன் விவசாயி (விவசாயி ...)
என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய் பாடுபடு வயல் காட்டில்
ஒழுங்காய் பாடுபடு வயல் காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல் நாட்டில் (விவசாயி ...)

கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய்
கருதாமல் எல்லோரும் ஒற்றுமையாய்
கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய்
கருதாமல் எல்லோரும் ஒற்றுமையாய்
பொறுப்புள்ள பெரியோர்கள் சொன்னபடி
பொறுப்புள்ள பெரியோர்கள் சொன்னபடி
உழைத்தால் பெருகாதோ சாகுபடி (விவசாயி ...)

இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி
எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி
இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி
எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி
பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக் கொடி
அது பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி
பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி (விவசாயி ...)

# கனவுகளும் பலன்களும்



ஆக ஒரு குழந்தை பிறந்தால் வாசகியின் ஒப்சசிவ் லவ் கணவன் மேலிருந்து கொஞ்சம் குழந்தை வழியும் ஓடினால் ஒருவகை பேலன்ஸ் கிடைக்கும்.நிம்மதியில்லை என குறிப்பிட்டிருக்கிறார். வாசகி கணவனுடன் அதிக நேரம் செலவிடுவதில்லை என நினைக்கிறேன். வாசகியின் கணவன் மனைவியிடம் அதிக நேரம் செலவழித்து அன்பாக பேசி மனைவியின் இன்செக்யூரிடி ஃபீலிங்க்சை களைந்திட வேண்டும்.

அடுத்தது நாம் பார்க்க வேண்டியது கணவன் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறாய் என்று. அந்த பெண்ணின் முகம் கனவில் தெரிந்ததா? அது தெரிந்தா பெண்ணா? போன்ற விபரங்களை வசகி தெரிவிக்கவில்லை. ஆனால் நாம் அனுமானித்ததில் இருந்து அந்த வேறொரு பெண் ஒரு முகமறியா பிம்பமாகத்தான் கனவில் வந்திருக்க வேண்டும்.ஆகவே இது வாசகி தன் வாழ்க்கையில் வரக்கூடிய ஆபத்துக்களைத் தான் இந்தப் பெண்ணின் வடிவில் உருவகித்திருக்கிறார். ஆகவே வாசகி ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய காலம் இது. குறிப்பாக பேச்சில் நிதானம் கடைப்பிடிக்க வேண்டும். உறவுமுறை விபரங்களில் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக பழக வேண்டும். இதுதான் இந்தப் பெண்ணின் பிம்பம் சிம்பாலிக்காக சொல்வது. அடுத்ததாக கனவில் வந்த சம்பவம் திருமணம். ஏன் திருமணம் கனவில் வந்திருக்கிறது? திருமணம் உறவு முறைகளை சிம்பாலிக்காக குறிக்கும் ஒரு நிகழ்வு.

அது கனவில் வந்ததன் மூலம் வாசகியின் கவலை ஆழ்மன ஏக்கங்கள் உறவு முறைகளைப் பற்றியது என தெரிகிறது.

வாசகி வேறெந்த விபரமும் குறிப்பிடவில்லை. வயது, படிப்பு போன்ற விபரங்களை குறிப்பிடவில்லை.இதுபோன்ற கனவு பலன்களை கேட்கும் வாசகர்கள் கூடுதல் விபரங்கள் அளித்தால் இன்னும் துல்லியமாக பலன்கள் கூறலாம்.ஆயினும் கொடுத்த விபரங்களை வைத்து நம்முடைய பலன்கள் தொகுத்துள், ளோம்.

### கனவில் மனிதர்கள் வந்தால்...

பல்வேறு வகையான மனிதர்களைக் கனவில் கண்டதால் உண்டாகும் பலன்கள் பற்றிய விபரம் வருமாறு,

அரசனைக் கனவில் கண்டால் அரசாங்கத்தினால் நன்மை உண்டாகும்.தனலாபம் ஏற்படும்.

ஆண்களும் பெண்களும் உள்ள கூட்டத்தைக் கனவில் கண்டால் தொழில் மேன்மை அடையும்.

துறவியைக் கனவில் கண்டால் பெரியவர்களின் ஆசியினால் காரிய சித்தி உண்டாகும்.

ஊமை,செவிடு ஆகியோரைக் கனவில் கண்டால் பலவிதத் துன்பங்கள் ஏற்படும். அங்கவீனமுள்ளவர்களைச் சிந்திப்பது போலக் கனவு கண்டால் இரகசியம் அம்பலமாகி அதனால் துன்பம் உண்டாகும். பைத்தியத்தைக் கனவில் கண்டால் நிதானம் தவறி சில தவறுகளைச் செய்வதால் துன்பம் வரும்.

பெற்றோரைக் கனவில் கண்டால் காரிய சித்தி உண்டாகும்.செல்வம் வந்து சேரும்.குருவைக் கனவில் கண்டால் தொழில் அபிவிருத்தி அடையும்.பதவி உயர்வு கிடைக்கும்.

பெண்கள் கணவனைக் கனவில் கண்டால் மாங்கல்ய பாக்கியம் உண்டு. வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கும்.

இறந்து போனவரிடம் பேசிக் கொண்டிருப்பது போலக் கனவு கண்டால் நோய்கள் ஏற்படும்.பொருள் இழப்பு உண்டாகும்.

கனவில் கிழவியைப் பார்த்தால் தனலாபம் உண்டாகும். கர்ப்பிணிப் பெண்ணைக் கனவில் பார்த்தால் புத்திர பாக்கியம் உண்டாகும். இரண்டு கர்ப்பிணிப் பெண்களைக் கண்டால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும்.

நமக்கு வேண்டிய யாராவது' இறந்து விட்டதாகக் கனவு கண்டால் துன்பங்கள் விலகும். விரோதிகளைக் கனவில் கண்டால் கஷ்டங்கள் ஏற்படும்.

குள்ளர்களைக் கனவில் கண்டால் கைப்பொருளை இழப்பதும் பிறரால் ஏமாற்றப்படுவதும் ஏற்படும். குழந்தைகள் இறப்பது போலக் கனவு கண்டால் எதிர்காலத்தில் ஆபத்துகள் ஏற்படும்.

குடுகுடுப்பைக்காரனைக் கனவில் கண்டால் நல்ல செய்தி வரும். பாகவதர்களைக் கனவில் கண்டால் பொருள் வரவு ஏற்படும். பாணர்களைக் கனவில் கண்டால் தொழிலில் மேன்மை ஏற்படும்.

(அடுத்த வாரம் தொடரும்)

# பசுவதை ஒழிப்போம்

கடவுள் இவ் உலகத்தை படைத்து பல்கிப் பெருகி நல்வாழ்வு வாழ மனிதர்களையும் படைத்தார்.

நாங்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும் உகந்த வசதிகளையும் , உணவுகளையும் படைத்தார். அவற்றில் ஒன்று ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்த பாலைப் பருகுவதற்கும் ஜீவ சத்துக்கள் நிறைந்த பாலைப் பருகுவதற்கும். இல்லங்களில் தோசங்கள் விலகி நலமுடன் வாழ தெய்வீக அருள் ஆசி கிடைக்க தாவர பட்ஷனியாகிய பசு இனத்தையும் பசு இனம் பெருக காளையையும் படைத்தார்.

எங்கள் தேகத்தில் நோய் அணுகாது இருக்க நோய் எதிர்ப்பு சக்தி வாய்ந்த பாலைப் பருகுவதற்கு



ஆட்டினத்தையும் மாட்டு இனத்தையும் வீட்டு மிருகங்களாக படைத்தார்.

வீட்டில் பிள்ளைகளை போல் வளர்த்த ஆடு, மாடு பசுக்களை அவைகள் பாலைப் பொழிந்து தந்து ஓய்வெடுக்கும் காலங்களில் பிரயோசனம் குறைந்த காரணத்தினால் கொலைக் களத்திற்கு அனுப்புகிறோம், கொலைக் களத்தின் பாவமான பணத்தையும் இலாபமாகப் பெறுகிறோம்.

எம்முடன் கூட்டமாக சந்தோஷமாக வாழ்ந்த வாழ்க்கை கைவிடப்பட்டு கொலைக் களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு அவை தேகம் முழுவதும் நடுங்கி பயந்து பின் இழுக்க பலவந்தமாக முன் இழுத்து விழுத்தி காலைக்கட்டி அதன் கழுத்தை கத்தியால் அரியும் போது,தாங்கொணா கொடு வேதனை தாங்க முடியாமல் சலம், இரத்தம் சிந்திட வேதனை, வலி தாங்க முடியாமல் தன் நாக்கை தானே கடித்து உயிர் நீத்த பழி பாவமான இறைச்சி உணவு உண்பதை மட்டும் தவிருங்கள் மாமிச உணவில்.

இப் புண்ணிய செயலால் தர்மம் பின் தொடரும். தக்க சமயத்தில் உயிர் காக்கும் எமது விதி வசத்தால் துன்ப, துயரங்கள், நோய் பிணிகள் வருத்திடும் காலத்திலும் தர்ம தேவதையின் அருளால் துன்பங்கள் குறைவுபடும் அல்லது துன்ப, துயரங்களில் இருந்து காப்பாற்றப்படுவோம்.

எங்களின் இறுதிக் காலத்திலும் இறந்தபின்பும் நாங்கள் செய்த இப் புண்ணிய வசத்தால் தர்மம் பின் தொடரும்.

சந்ததி தழைத் தோங்கும். இறைவனின் நல்லாசி கிடைக்கப் பெற்று இப் பிறப்பிலேயே நல்வாழ்வு கிடைக்கும்.

T.V.பாலா
சுதுமலை.

சினிமா செய்தி

# அதே கண்கள்





திரைவிமர்சனம்

தமிழ் சினிமாவில் எப்போதாவது தான் த்ரில்லர் சம்பந்தப்பட்ட கதைகள் வரும். அப்படித்தான் 1967ல் ஒட்டுமொத்த சினிமா உலகத்தையே மிரட்டிய படம் அதே கண்கள். அந்த படத்தின் தலைப்புடனே ரோகின் இயக்கத்தில், கலையரசன் நடிப்பில் இன்று வெளிவந்துள்ள படம் தான் அதே கண்கள். பழைய அதே கண்கள் அளவிற்கு இது இருந்ததா? பார்ப்போம்.

படத்தின் ஆரம்பத்திலேயே ஒரு விபத்து ஏற்படுகின்றது. அதை தொடர்ந்து கண் தெரியவில்லை என்றாலும், திறம்பட சமையல் செய்து ஒரு ரெஸ்டாரண்ட் நடத்தி வருகிறார் கலையரசன்.

அவரை சிவதா தினமும் யதார்த்தமாக சந்திக்க ஒரு கட்டத்தில் காதலாக மாறுகின்றது. இதை தொடர்ந்து சிவதா குடும்பம் பெரும் பணக்கஷ்டத்தில் இருக்க, அதற்கு கலையரசன் உதவுவதாக வாக்கு கொடுக்கின்றார்.

அன்று இரவே கலையரசனுக்கு ஒரு விபத்து ஏற்பட அதை தொடர்ந்து அவருக்கு நடக்கும் கண் அறுவை சிகிச்சையால் பார்வை வருகிறது. இந்த இடைப்பட்ட நாட்களில் சிவதா மாயமாக, அவரை தேடும் பயணத்தில் கலையரசன் பல அதிர்ச்சிகரமான சம்பவங்களை சந்திக்கின்றார்.

யார் இந்த சிவதா? என்பதை அடுத்தடுத்த காட்சிகளில் இயக்குநர் ரோகில் ஓடியன்ஸை சீட்டின் நுனிக்கு வரவைக்கின்றார். பலரும் முதலில் கலையரசனை ஹீரோவாக ஏற்றுக்கொள்ளவே இல்லை. ஏனெனில் மெட்ராஸ், கபாலி என அனைத்து படங்களிலும் குணச்சித்திர கதாபாத்திரத்திலேயே அசத்தினார்.

இவர் நடித்த டார்லிங் படமும் பெரிய வெற்றியை கொடுக்கவில்லை. ஆனால், இந்த படத்தில் ஆரம்பத்தில் தடுமாறினாலும் ஒரு ஹீரோவாக வெற்றி பெற்றுவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

படத்தின் சாயல் நிறைய தெகிடி போலவே இருப்பதால் அதே ஹீரோயினை கமிட் செய்து விட்டார்கள் போல. ஜனனி பெரிதும் நடிக்கும் ஸ்கோப் இல்லை. ஆனால், மொத்த படத்தையும் தூக்கி செல்வது சிவதா தான்.

யார் இந்த பெண்? என்று கவனிக்க வைக்கின்றார். அதிலும் இரண்டாம் பாதியில் மெல்லிய புன்னகையில் இவர் கடந்து செல்லும் பல காட்சிகள் விசில் பறக்கின்றது. படத்தின் முதல் பாதி கதைக்குள் செல்ல கொஞ்சம் நேரம் எடுக்கின்றது.

இரண்டாம் பாதி அளவிற்கு விறுவிறு காட்சிகள் இல்லாததால் முதல் பாதி கொஞ்சம் தடுமாறுகின்றது. பாலசரவணன் காமெடி காட்சிகளும் கைகொடுக்கவில்லை.

ஜிப்ரான் இசையில் பாடல்களை விட பின்னணி இசை மிரட்டல். அதிலும் சிவதாவிற்கு வரும் அந்த பின்னணி பாடல் கவர்கிறது. படத்தின் இரண்டாம் பாதி, விறுவிறுப்பாக செல்லும் திரைக்கதை.
சிவதாவிற்கான அழுத்தமான காட்சியமைப்புக்கள்.

கிரைம் படம் என்றாலே லொஜிக் மிக அவசியம், ஆனால், இதில் பல இடங்களில் லொஜிக் மீறல். குறிப்பாக தன்னை பத்திரிகையாளர் என்று கலையரசன் கூற, ஐடி கார்ட் கூட கேட்காமல் பாலசரவணன் நம்புவது எப்படி சார்?

மொத்தத்தில் கண்டிப்பாக த்ரில்லர் படத்தை விரும்பும் ரசிகர்கள் கவனிக்கப்பட வேண்டிய கண்கள் இந்த அதே கண்கள்.







40/100





# மீண்டு(ம்) எழுவாரா மகிந்த?

ஆட்சியை இழந்த பின்னர் மகிந்த தலைமையில் உருவான கூட்டு எதிரணி, அரசிற்கு எதிராக பல்வேறு கட்டப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

நல்லாட்சி அரசிற்கு எதிராக பாத யாத்திரையில் இறங்கிய கூட்டு எதிரணியினர் தேங்காய் உடைத்தும் போராட்டமும் நடத்தினர்.

கடந்த வருடத்தை இப்படியாகக் கடத்திய கூட்டு எதிரணியினர், இந்த வருடமும் அரசிற்கு எதிராகப் பல போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கூட்டு எதிரணியின் ஏற்பாட்டில் நுகேகொடையில் நேற்று முன்தினம் நடந்த பொதுக்கூட்டத்தின் போது இதனை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இக்கூட்டத்தில் பங்கேற்று விசேட உரை நிகழ்த்தியிருந்தார்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியுற்றதும் அரசியலிலிருந்து ஒதுங்க நினைத்து தான் அலரிமாளிகையிலிருந்து மறுநாள் வெளியேறியதாகவும் ஆனால் மைத்திரி தன்னை மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்துவிட்டார்.

நான் மீண்டும் ஆட்சிக்கு வருவேன். இந்த ஆட்சியாளர்கள் மோசடிகள் மூலம் சேர்த்த சொத்துக்கள் அனைத்தையும் மீண்டும் பறிமுதல் செய்வேன். ஆட்சியாளர்களே கவனமாக இருங்கள். அரசாங்கச் சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகிறது. அதனை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

போர் வெற்றியை காட்டிக்கொடுக்கும் வகையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. அதனையும் ஆட்சியாளர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் மகிந்த எச்சரித்தார்.






பெருந்திரளான மக்கள் மத்தியில் மகிந்த விடுத்த எச்சரிக்கையை சாதாரண விடயமாக தட்டிக்கழித்து விடமுடியாது.

2017 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு நிச்சயம் என்று கூறிய மகிந்த அதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கிவிட்டாரோ என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் நுகேகொடையில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு வந்த மக்கள் கூட்டம் ஆட்சியாளர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அரசிற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்த மகிந்த ஆட்சி அதிகாரத்திற்கு நான் மீண்டும் வருவேன் என்பதை உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இரண்டு முறை நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் மற்றும் அமைச்சர் பதவிகளை தொடர்ந்து வகித்து வந்தவர்.

ஆட்சி அதிகாரத்திலுள்ள கட்சியின் தலைவராகவும் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடிக்கும், ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைக்கும் ஆற்றலும் மிக்கவர் என்பதையும் மறந்துவிட முடியாது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து அவரின் சொத்துக்களையும் முடக்கி அடக்குமுறை நிர்வாகத்திற்குள் வைத்திருந்தவர் மகிந்த.

அதுமட்டுமன்றி முன்னாள் இராணுவத் தளபதியான தற்போதைய அமைச்சர் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து சித்திரவதைப்படுத்தி அதிகார துஷ்பிரயோகங்களின் எல்லையைக் கடந்தவர்.

ஆட்சியில் இருக்கும் போதும் ஆட்சியை இழந்த போதும் யாருக்கும் அஞ்சாமல் தனது அரசியலை முன்னெடுத்துவரும் மகிந்தவுக்குப் பின்னால் பெருங்கூட்டம் ஒன்று உள்ளதை யாரும் மறந்துவிட முடியாது.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில , வாசுதேவ நாணயக்கார , தினேஷ் குணவர்த்தன , ஜி.எல்.பீரிஸ் போன்றவர்கள் தற்போதும் தமது கட்சிகளுடன் இணைந்து மகிந்தவுக்கு ஆதரவளித்து வருகின்றனர். நல்லாட்சி அரசிற்கு எதிராக நடந்த நுகேகொடை கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ மட்டும் எச்சரிக்கை விடவில்லை, அங்கு உரை நிகழ்த்திய அனைத்து அரசியல் வாதிகளும் எச்சரிக்கை விடுத்தனர்.

மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியின் கூச்சல்களுக்கு நல்லாட்சி அஞ்சாது என்றும் 2020 இற்கு முன்னர் ஆட்சி மாற்றம் இல்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட பலர் கருத்துரைத்து வருகின்றனர்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் போது அலட்சியப் போக்குடன் செயற்பட்டுத்தான் மகிந்தவும் தோற்றுப் போனார். இதை இந்த ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

நல்லாட்சியை தக்கவைப்பதிலும் நாட்டை நல்ல வழியில் நகர்த்திச் செல்லவும் ஆட்சியாளர்கள் தயாராக வேண்டும்.

நல்லாட்சியை உருவாக்குவதிலும் மகிந்த ஆட்சியைக் கவிழ்க்கவும் தமிழர்கள் ஆதரவளித்தனர். இதைப் பலமுறை மகிந்தவே வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி செல்ல முன்பு அரச தரப்பினர் அதனை முறியடித்து ஆட்சியை 2020 வரைக்குமாவது காப்பாற்ற வேண்டும்.


ஏனெனில் சிங்கள மக்களுக்கு யார் ஆட்சிக்கு வந்தாலும் பிரச்சினையில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு பிரச்சினை கொடுக்காத ஆட்சியாளர்கள் யாரும் இல்லை. மீண்டுமொரு இனப் படுகொலைக்கு உள்ளாகும் நிலையில் தமிழினம் இல்லை.

மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் யாருக்கு பாதகமோ இல்லையோ? தமிழருக்கு நிச்சயம் பாதகம்.

எனவே ஆட்சியாளர்கள் தங்களைப் பாதுகாப்பதோடு தங்களை நம்பி வாக்களித்த தமிழர்களையும் பாதுகாக்க வேணடும்.

**காண்டீபன்**

# கதிகலங்கவைத்த கர்ப்பிணி படுகொலை





யாருமற்ற வீடு. சுற்றிலும் பற்றைக் காடுகள். யார் அங்கு சென்றாலும் ஒருவித பய உணர்வு ஏற்படும் வகையில் தனிமை, இவற்றை எல்லாம் சமாளித்துக்கொண்டு மதிய உணவை சமைத்து விட்டு பாடசாலை சென்ற தனது நான்கு வயது பிள்ளைக்கு உணவு ஊட்டி விடுவதற்காகவும் மற்றுமொரு பிள்ளைக்கு தாயாக போகும் பூரிப்பிலும் வேலைக்கு சென்ற கணவனை எதிர்பார்த்து காத்திருக்கின்றாள் இளம் தாயொருத்தி. அப்போது தான் அந்த கொடூரம் நடந்தேறியது.

நெடுந்தீவை சொந்த இடமாகக் கொண்ட, ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் வசித்து வந்த, நான்கு வயது சிறுமி ஒருவரினது தாயாரும் ஏழு மாத கர்ப்பிணியுமான ஞானசேகரன் மேரிரம்சிகா (வயது - 27) என்ற இளம்பெண் பட்டப்பகலில் அவரது வீட்டில் வைத்தே கொலை செய்யப்படுகின்றார். இந்த சம்பவத்தினால் தீவகம் மீண்டும் அதிர்ச்சிக்கு உள்ளாகின்றது. வழமை போனறு கொலையாளிகள் தப்பித்து விடுகின்றார்கள். இந்த நிலையில் தான் வடக்கில் பெண்களின் பாதுகாப்பு உள்ளது என்பதனை வித்தியா, சேயா ஆகியோரின் வரிசையில் மேரிரம்சிகாவின் கொலையும் உணர்த்தி சென்றுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த ஞானசேகரன் மேரிரமசிகா குடும்பத்தில் கணவர் ஞானசேகரம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருவதால் நெடுந்தீவில் இருந்து ஊர்காவற்றுறைக்கு ஒவ்வொரு நாளும் கடல் பயணத்தின் ஊடாக வேலைக்கு வருவது கடினமாக இருந்த காரணத்தினால், ஊர்காவற்றுறையில் வந்து குடியேறியிருந்தனர். இவர்களுடைய நான்கு வயது மகளும் ஊர்காவற்றுறையில் உள்ள ஆரம்பப்பள்ளி ஒன்றில் கல்வி கற்று வந்துள்ளார். ஒவ்வொரு நாளும் தனது மகளை ஞானசேகரமே ஆரம்ப பள்ளிக்கு ஏற்றி செல்வது வழமை.

பின்னர் குறித்த சிறுமியை பள்ளியின் ஆசிரியர் பள்ளி முடிவுற்றதும், வீட்டில் கொண்டு வந்து விடுவதும் வழமை. இதேபோன்று கடந்த 25 ஆம் திகதி அன்று காலையும் ஞானசேகரன் தனது பிள்ளையை ஆரம்ப பள்ளிக்கு கூட்டிச் சென்று சேர்த்து விட்டு, பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு கடமைக்காக சென்றுள்ளார். இதன் போது ஏழு மாத கர்ப்பிணியான மேரிரம்சிகா வீட்டில் தனித்து இருந்துள்ளார். தனித்து இருந்த மேரிரம்சிகா வழமை போன்று வீட்டில் சமையல் வேலைகளை பார்த்து கொண்டிருந்துள்ளார். அப்போது பகல் 11 மணியிருக்கும், ரம்சிகா இனந்தெரியாத நபர்களால் அடித்துக் கொலை செய்யப்படுகின்றார்.

கொலையாளிகள் கொள்ளையிடுவதற்காகத்தான் வீட்டிற்குள் சென்றதாக ஆரம்பத்தில் கூறப்பட போதிலும், பின்னர் வீட்டில் எந்த பொருளும் கொள்ளையிடப்படவில்லை என்பதனை பொலிஸாரின் விசாரணைகள் உறுதிப்படுத்தியுள்ளன. வன்புணர்வுக்கும் குறித்த பெண் உட்படுத்தப்படவில்லை என்பதனை யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி மயூரனின் பிரேத பரிசோதனை அறிக்கையும் உறுதிப்படுத்தியுள்ளது. அவ்வாறாயின் எதற்காக ஏழு மாத கர்ப்பிணி கொல்லப்பட்டார் என்பதற்கு விடை தெரியாமல்தான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முதலில் வீட்டின் சாமி அறைக்குள் வைத்து ரம்சிகாவை கொலையாளிகள் தாக்குகின்றார்கள். ரம்சிகா தனது ஏழு மாத சிசுவின் உயிரை பாதுகாப்பதற்கும், தனது உயிரை காப்பாற்றி கொள்ளவும் கொலையாளிகளுடன் நீண்ட போராட்டம் ஒன்றை நடத்துகின்றார். எனினும் கொலையாளிகள் துரத்தி துரத்தி தாக்குகின்றனர். இதன் பின்னர் வீட்டின் வெளியில் உள்ள கிணற்றுக்கு அருகில் வைத்து வீட்டிற்குள் தாக்கப்பட்ட ரம்சிகா எவ்வாறு வெளியில் வந்தார்? அதுவும் கர்ப்பிணி பெண்ணான அவரால் கொலையாளிகளை மீறி போராட்டம் நடத்த முடிந்ததா? அவ்வாறு என்றால்ஒரே ஒருவர்தான் குறித்த கொலையை மேற்கொண்டாரா?

நேரம் பகல் 11.45 மணியளவில் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய ரம்சிகாவின் கணவருக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. தொலைபேசி அழைப்பை மனைவி எடுக்க தவறியதால் அருகில் உள்ள வீட்டாரிடம் தனது மனைவியை பார்க்குமாறு கூறியுள்ளார். ரம்சிகாவின் வீட்டிற்கு சென்ற அயல் வீட்டார் ரம்சிகாவை வாசலில் நின்று அழைத்துள்ளனர்.

எனினும் ரம்சிகா வெளியே வராத காரணத்தினால் வீட்டில் தேடியுள்ளனர். ரம்சிகா வீட்டின கிணற்றுப்பகுதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார். அவரை காப்பாற்றும் முயற்சியில் உடனடியாக ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் ஏற்கனவே இறந்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

ரம்சிகாவின் வீட்டிற்குள் இரத்தம் சிந்தி காணப்படுவதோடு தலையணை ஒன்றிலும் இரத்தம் சிந்தி காணப்பட்டது. இவ்வாறெனில் ரம்சிகா தூங்கிக்கொண்டு இருக்கும் போது தான் கொலை நிகழ்த்தப்பட்டதா? என்பதும் சந்தேகமே. கொலையாளிகள்ரம்சிகாவை கொலை செய்யும் நோக்கத்தோடு நெருங்காவிட்டால் எதற்காக இரத்தம் சிந்திய இடத்தை தண்ணீர் ஊற்றி கழுவியிருக்க வேண்டும்? கொலையாளிகள் ரம்சிகாவின் வீட்டில் நின்று நிதானித்து கொலைக்கான தடயங்கள் எவையும் சிக்காமல் அளித்து விட்டு சென்றுள்ளனர்.

எனினும் அயலவர்கள் விரைந்து செயற்பட்ட நிலையில், ஊர்காவற்றுறை பொலிஸார மண்டைதீவு சந்தியில் வைத்து ஆட்டோவில் வந்த இரு இளைஞர்களை அவர்களுடைய மேற்சட்டையில் இரத்தம் காணப்பட்டதென்ற ஒரு காரணத்தை முன்வைத்து கைது செய்திருந்தனர். இவர்களோடு ஒரு பெண் உட்பட மேலும் இருவரையும் கைது செய்திருந்தனர்.

எனினும் குறித்த பெண்ணும் மற்றைய வரும் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல எனக்கூறப்பட்டு மறுநாள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஏனைய இருவரும் ஊர்காவற்றுறை நீதவான் வை.எம்.எம்.றியால் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இருவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கொலையாளிகளை அடையாளம் காணுவதற்கு ஒரேயொரு துரும்பாக வாய்பேச முடியாத சிறுவன் ஒருவனே உள்ளான். கொலையாளிகள் மோட்டார் சைக்கிளில் வந்ததாக முதலில் கூறிய அவன்பின்னர்வாகனமொனறில் வந்ததாகவும் சைகைமொழி மூலம் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளான்.

இந்நிலையிலேயே எதிர்வரும் எட்டாம் திகதி அடையாள அணிவகுப்பு நடைபெறவுள்ளது. அன்றையதினம் கொலையாளிகளை சிறுவன் அடையாளம் காட்டினால் வழக்கை முன்னெடுத்துச் செல்வது இலகுவாக இருக்கும்.

குறித்த பெண்ணின் கணவரிடம் பொலிஸார் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர். தனக்கு இக்கொலை தொடர்பில் யார் மேலும் சந்தேகமில்லையெனவும் எங்களுடைய குடுமபம்பிரச்சினைகள் எதற்கும் போவதில்லை எனவும் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கூட்டு பாலியல் வன்புணர்வின் பின்னரான கொலை, தற்போது ஏழு மாத கர்ப்பிணியின் கொடூர கொலை இவ்வாறு தொடரும் கொலைகளால தீவகம் முழுவதும் ஒரு அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது. இந்த கொலைகளுக்கான நீதி இன்னமும் கிடைக்காத நிலையிலேயே மற்றுமொரு கொலை நடந்தேறியுள்ளது. தீவகத்தில் பாதுகாப்பற்ற நிலை தான் தற்போது உள்ளது. அங்கு இருப்பதற்கே தமக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

தீவகத்திற்கு ஒரேயொரு தரைவழி பாதையும், ஊர்காவற்றுறை கடற்பாதையுமே இருக்கின்றது. இவ்வாறு உள்ள நிலையில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் குற்றங்களை கட்டுப்படுத்முடியும்.

மணடைதீவு சந்தியில் 24 மணி நேரமும் கண்காணிப்பு கமராக்களை பொருத்தினால் தீவகத்திற்கு உள்ளே,வெளியே செல்பவர்களை பொலிஸாரால் கண்காணிக்க முடியும்.

பொலிஸ் பாதுகாப்பு இல்லை என குரல் எழுப்பப்படும் அதேவேளை பாடசாலை மாணவி, ஏழு மாத கர்ப்பிணி பெண் கொல்லப்படும் அளவிற்கு இரக்கமற்றவர்களாக இந்த சமுதாயம் மாறி வருகின்றதா? என்ற கேள்வியும் இங்கு எழத்தான் செய்கின்றது. எதுவாகினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் எவ்வாறு மக்கள் பாதுகாப்பாக இருந்தார்கள்? என்பதை நாம் நினைவுபடுத்த வேண்டும்.

தீவகத்தில் தனித்து விடப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

உ.சாலின்








ரம்சிகாவை மிகக் கொடூரமாக தாக்கி கொலை செய்துவிட்டு கொலையாளிகள் தப்பித்து சென்று விடுகின்றனர்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 70

## நீரிழிவினால் ஏற்படும் நரம்புத் தொகுதிப் பாதிப்புக்கள்




### நீரிழிவு ஓர் அறிமுகம்

நீரிழிவு நோயானது, சதையினால் சுரக்கப்படும் இன்சுலின் ஓமோன் சுரப்பு பெரும்ளவில் குறைவடையும் போது அல்லது அதன் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படும் போது, குருதியில் குளுக்கோஸ் எல்லை மீறி அதிகரிப்பதால் ஏற்படுகிறது.

அதிகரிக்கும் குருதிக் குளுக்கோஸானது உடலின் பல அங்கங்களில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. முக்கியமாக கண், நரம்புத் தொகுதி இதயம் மற்றும் சிறுநீரகத்தை இது வெகுவாக பாதிக்கின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் நீரிழிவு நோயானது பெருமளவில் அதிகரித்துள்ளது. ஆண்,பெண் இருபாலாரையும் நீரிழிவு சரி சமனாகவே பாதிக்கிறது. நீரிழிவு ஏற்படும் சந்தர்ப்பமானது, பின்வரும் காரணிகளால் அதிகமாகியுள்ளது.

1. குடும்பத்தில் நீரிழிவு நோயாளர்கள் உள்ளமை.
2. அதிக உடல்நிறை (உடற்திணிவுச் சுட்டி $\geq$25kg/m$^2$ )
3. உடற் பயிற்சியின்மை.
4. இனம்.
5. ஏற்கனவே அறியப்பட்ட நீரிழிவிற்கு முன்னானநிலை.
6. கர்ப்ப கால நீரிழிவு / உடல் நிறை கூடிய பிள்ளைப் பேறு >4 kg
7. உயர்குருதியமுக்கம் ($\geq$140/90 mmHg )
8. அதிகரித்த கொலஸ்ரோல் (HDL $\leq$35mg/dl, TG$\geq$250mg/dl)
9. சூலக நீர்க்கட்டிகள், தோல் மடிப்புக்களில் கருமை படர்ந்த நிலை

உலக சுகாதார நிறுவனமானது நீரிழிவுநோய் நிர்ணய எல்லையை பின்வருமாறு கூறுகிறது. குணங்குறிகள் உள்ள நோயாளரில் பின்வரும் ஓர் ஆய்வு கூட முடிவும், குணங்குறிகளில்லாதவர்களிற்கு இரு வெவ்வேறு ஆய்வுகூட முடிவுகளும் தேவைப்படுகிறது.

1. 08 மணித்தியாலங்கள் உணவு எதுவும் உட்கொள்ளாமல் குருதியில் குளுக்கோஸ் அளவு $\geq$7.0 mmol/l (126mg / dl ) (Fasting Plasma Glucose)

2. எழுந்தமான குருதிக் குளுக்கோஸ் அளவு $\geq$11.1mmol /l (200 mg /dl) (Random Plasma Glucose )

3. HbA 1c >6.5 நீரிழிவானது குணப்படுத்த முடியாததாயினும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியது.

### நரம்புத் தொகுதி ஓர் அறிமுகம்

மனித நரம்புத் தொகுதிமுழுவதும் சிறப்புக் கலங்களான நரம்புக் கலங்களால் (Neurone) ஆனது. அது தூண்டல்களை வாங்கி நரம்புகளினூடான கணத்தாக்கங்களாக விளைவு அங்கங்களிற்கு கடத்தும் தொழிலைச் செய்கிறது. இதனால் மனித உடலானது தூண்டல்களிற்கேற்ற ஒருங்கிணைந்த துலங்கல்களை விளைவுகளாக காட்டக் கூடியதாகவுள்ளது.

மனித நரம்புத் தொகுதியானது விசேடமாக கடந்த காலங்களில் பெற்ற தரவுகளை சேமித்து ஒருங்கிணைத்து தேவையான பொழுதுகளில் வழங்கி பகுத்தறிவாகிய ஆறாம் அறிவால் உயர்ந்து விளங்குகின்றது.

நரம்புத் தொகுதியானது மைய நரம்புத் தொகுதி, சுற்றயல் நரம்புத் தொகுதி, தன்னியக்க நரம்புத் தொகுதியையும் கொண்டது.

மையநரம்புத் தொகுதியானது, மூளையையும் முண்ணாணையும் கொண்டது. சுற்றயல் நரம்புத் தொகுதியானது, மண்டையோட்டு நரம்புகளையும் முன்னாண் நரம்புகளையும் கொண்டது.

தன்னியக்க நரம்புத் தொகுதியானது பரிவு, பராபரிவு நரம்புகளைக் கொண்டது. தன்னியக்க நரம்புகள் இதயம் சுரப்புக்கள் மற்றும் வழவழப்பான தசைகளின் தொழிற்பாட்டிற்கு உதவுகிறது. உடலில் அவசர நிலைமைகளின் போது பரிவு நரம்புகளும் சக்திசேமிப்புக்கும் புதுப்பித்தலுக்கும் பராபரிவு நரம்புகளும் தொழில் ஆற்றும்.

மூளை மற்றைய அங்கங்களைப்போலன்றி குளுக்கோஸை மாத்திரமே போசணைப் பொருளாக பயன்படுத்துகிறது. அதனால் குருதிக் குளுக்கோஸ் கூடிய நிலையிலும் குறைந்த நிலையிலும் மூளையானது பாதிப்படைகிறது.

### 1) நீரிழிவு நோயாளர்களில் ஏற்படும் நரம்புப் பாதிப்புக்கள். (Diabetic Neuropathy)

நீரிழிவினால் ஏற்படுகின்ற உயர்மட்ட குளுக்கோஸ் ஆனது குருதிக்குழாய்களில் இரு வேறுவிதமான சிக்கல்களை உருவாக்கும்.

1. பருமனான குருதிக்குழாய்ச் சிக்கல்கள் உதாரணம் - பாரிசவாதம்
2. நுண்ணிய குருதிக்குழாய்ச் சிக்கல்கள் உதாரணம் - நீரிழிவு நரம்புப் பாதிப்பு

### பாரிசவாதம்

மூளைக்கு குருதியானது இரு பெரும் நாடிகளூடாக வழங்கப்படுகிறது. அந்நாடிகளிலோ அல்லது அதன் கிளைகளிலோ ஏற்படும் கொழுப்புப் படிவுகளாலும் அவை உடையும் போது ஏற்படும் இரத்த உறைவுக் கட்டிகளாலும் உண்டாகும் அடைப்பு மூளையில் ஏற்படுத்தும் பாதிப்பினாலேயே பாரிசவாதம் உருவாகிறது.

திடீரென ஏற்படும் இரத்தோட்டக் குறைவினால் மூளையின் அப்பகுதி படிப்படியாக இறப்படைய நேரிடுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மூளைப்பகுதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் உடல் பகுதி செயலிழக்கிறது.

பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பம் சாதாரண ஒருவரிலும் பார்க்க நீரிழிவு நோயாளர்களில் இரு மடங்காகவும் துரிதமாகவும் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.



நீரிழிவு நோயாளர்களில் பாரிசவாதம் ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகளாவன,

1. குருதிக் குளுக்கோஸ் கட்டுப்பாடில்லாமல் இருத்தல்.
2. அதிகரித்த உடற்பருமன் (Metabolic Syndrome)
3. அதிகரித்த குருதிக் கொலஸ்ரோலின் அளவு.
4. புகைப்பிடித்தல்.
5. குடும்பத்தில் பாரிசவாதம் உள்ளமை.
6. அதிகரித்த வயது.
7. சிறுநீரில் அல்புமின் வெளியேறல்.

### நீரிழிவு நோயாளர் பாரிசவாதத்தை தடுக்க செய்ய வேண்டியவை.

1. குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
2. உடல் பருமனை குறைத்தல்.
3. இரத்தஅழுத்தத்தை கட்டுப்படுத்தல்:- ( $\leq$130/80 mmHg)
4. இரத்தத்தில்குளுக்கோஸின் அளவைக் குறைத்தல்.
5. புகைப்பிடித்தலை தவிர்த்தல்.
6. பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள். (Aspirin, Clopidogrel) போன்றவற்றை தவறாது உள்ளெடுத்தல்.

பாரிசவாதம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுமாயின் (ஒரு பக்க கையோ அல்லது காலோ அல்லது கையும் காலுமோ செயலிழத்தல், பேச்சுத் தடை, நடைத்தள்ளாட்டம், திடீர் கண்பார்வைக் குறைவுகள்) உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல வேண்டும். ஏனெனில் குருதிக்கட்டியை கரைக்கும் மருந்து (Thrombolytictherapy) பாரிசவாத அறிகுறி ஏற்பட்டு முதல் 4 ½ மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படல் வேண்டும்.

பாரிசவாதம் ஏற்பட்ட பின்னும் தவறாது மருந்துகளை உட்கொள்வதோடு உடற்பயிற்சிகள், ஆலோசனைகள் என்பவற்றை ஒழுங்காகபெற்றுக் கொண்டு மேலுமொரு தாக்கம் வராமல் பாதுகாக்க வேண்டும்.

### 1) நீரிழிவால் ஏற்படும் நரம்புநோய் (Diabetic Neuropathy)

நரம்புகளிற்கு குருதியை வழங்கும் நுண் குருதிக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் நீண்டகால உயர் குருதிக் குளுக்கோஸ் ஆகியவற்றால் அது ஏற்படுகிறது. வயதான நோயாளர்களில் இது நீரிழிவை கண்டுபிடிக்கும் போதே இனங்காணப் படலாம்.

ஆனால் இன்சுலினில் தங்கியிருக்கும் நீரிழிவை உடையவர்களில் நீரிழிவுஏற்பட்டு 10-20 வருடங்களின் பின்பே இது வெளிக்காட்டப்படுகிறது.இது பின்வருமாறு வகைப்படும்.

1. சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு
2. சடுதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு
3. ஒற்றைநரம்புப் பாதிப்பு / பல்வேறு ஒற்றை நரம்புகள் தனித்தனியாகப் பாதிக்கப்படல்.
4. சமச்சீரற்ற இயக்கநரம்புப் பாதிப்பு
5. தன்னியக்கநரம்புநோய்கள்

### 1. சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு

இதன்ஆரம்ப அறிகுறிகளாவன நோயையோ வெப்பத் தையோ அல்லது அதிர்வுகளையோ உணர முடியாத விறைப்பு நிலையாகும். இதன் நாட்பட்ட நிலைகளில் பஞ்சின் மேல் நடப்பதுபோல் உணர்வார்கள்.

கால்களே கைகளைவிட அதிகம் பாதிப்படையும். உணர்ச்சிகள் குறைவுறுவதால் சிறுசிறு காயங்களும் கவனிக்கப்படாமல் கொப்புளங்களாகவோ அல்லது புண்களாகவோ காணப்படும். மூட்டுகளிற்கான நரம்புப் பாதிப்பு நரம்பிழந்த மூட்டுக்களாக உருவாகும்.

### 2. சடுதியான நோவுடன் கூடிய நரம்பு பாதிப்பு

நோயாளிகள் கால்கள் பாதங்கள் போன்ற வற்றில் எரிவுநோ போன்றவற்றைக் கொண்டிருப்பர். இரவுகளில் கூடுதலாக இருக்கும். படுக்கை விரிப்பின் அழுத்தமே தாங்க முடியாமல் அவதியுறுவர். இது நீரிழிவைக் கண்டுபிடிக்கும் போதே காணப்படலாம். அத்துடன் குருதிக் குளுக் கோஸை திடீரென கட்டுப்பாட்டில் கொண்டுவரும் போதும் இது ஏற்படுகிறது. நீரிழிவை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இது தானாகவே 3-12 மாதங்களில் மாறும்.

இதில் ஒருவகையானது நாட்பட்ட நோவுடனான பாதிப்பு நீண்டகால நோயாளிகளிலே இது ஏற்படுகிறது.சிகிச்சை பலன் அளிப்பதும் கடினம்.

### 3. தனித்தனி நரம்புகளின் பாதிப்பு

இந்த வகையான பாதிப்பு உடலின் எந்த நரம்பையும் பாதிக்கலாம். கண் தசை நரம்புகள் கூடுதலாகப் பாதிக்கப்படும்.தானாகவே 3-6 மாதங்களில் முழுமையாக குணமடை யும்.

### 4. நீரிழிவால் ஏற்படும் தசைமெலிவு

வயதான ஆண் நீரிழிவு நோயாளர்களிலேயே இது கூடுதலாக ஏற்படும்.நோவுடன் கூடியதசை மெலிவு ஏற்படும்.தொடைகள் / தோள்களே பாதிக்கப்படுகிறது. தொடவே முடியாதவாறு நோவாக இருக்கும். இது சரியாக குருதிக் குளுக்கோஸை கட்டுப்படுத்தாதவர்களிலேயே காணப்படுகிறது. இது குருதியில் குளுக்கோஸைக் கட்டுப்படுத்த சுகமாகிவிடும்.

### 5. தன்னியக்க நரம்புநோய்கள்

நீரழிவுநோயாளர்களில் இப்பாதிப்பு கூடுதலாக குணங்குறிகள் வெளிக்காட்டப் படாமலே இருக்கும். அரிதாகவே குணங்குறிகள் வெளிக்காட்டப்படும். படுக்கையிலிருந்து எழும்போது ஏற்படும் தலைச்சுற்று ஓய்வு நிலையிலும் அதிகரித்த இதய ஓட்டம், தொடர்ச்சியான வாந்தி, இரவில் வயிற்றோட்டம் போன்றவை இதனால் ஏற்படுகிறது.

ஆண்மைக் குறைவும் (Impotence) இதனாலேயேஏற்படுகிறது.

நீரிழிவு நோயாளர்கள் நரம்புப் பாதிப்பை தவிர்க்க குளுக்கோஸை சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கால்களை கிரமமாக அவதானித்து காயங்கள், புண்கள் ஏற்படுவதை உடனுக்குடன் கண்டுசிகிச்சை பெறவேண்டும். நீரிழிவை வெற்றிகொண்டு பாதிப்புக்கள் ஏற்படாது வாழ்வோமாக.

வைத்தியநிபுணர்
அஜந்தாகேசவராஜ் (நரம்பியல் நிபுணர்)
நரம்பியல் பிரிவு, யாழ்போதானா
வைத்தியசாலை.

வைத்திய கலாநிதி சிவதி. பிரதீபன்
நரம்பியல் பிரிவு,
யாழ் போதானா
வைத்தியசாலை.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.